வெற்றித்திருமகன் எம்.ஜி.ஆர். நூல்வரிசை – 13

முத்தமிழ்க் காவியம்
மதுரை வீரன்

முனைவர் செ. இராஜேஸ்வரி, M.A., M.Phil., Ph.D.,



சந்திரோதயம் பதிப்பகம்

3/462 முதல் மாடி, கம்பர் 2வது தெரு, கம்பர் சாலை,
தினமணி நகர், மதுரை – 625 018, Mob. : 7010997639.

வெற்றித்திருமகன் எம்.ஜி.ஆர். நூல்வரிசை – 13

முத்தமிழ்க் காவியம்
மதுரை வீரன்

***முனைவர் செ. இராஜேஸ்வரி* M. A., M. Phil., Ph. D.,**

சந்திரோதயம் பதிப்பகம்
3/462 முதல் மாடி, கம்பர் 2வது தெரு, கம்பர் சாலை,
தினமணி நகர், மதுரை – 625 018, Mob.:7010997639.

நூல் விவரம்

நூல் வரிசை	:	*வெற்றித்திருமகன் எம்.ஜி.ஆர். நூல்வரிசை – 13*
நூலின் பெயர்	:	*முத்தமிழ்க் காவியம் மதுரை வீரன்*
ஆசிரியர்	:	*முனைவர் செ. இராஜேஸ்வரி*
அட்டை வடிவமைப்பு	:	*செ. மீனாட்சி*
பதிப்பாளர்	:	*சந்திரோதயம் பதிப்பகம்* *3/462 முதல் மாடி, கம்பர் 2வது தெரு,* *கம்பர் சாலை, தினமணி நகர்,* *மதுரை – 625 018* *தொலைபேசி எண் : 7010997639*
பதிப்பு	:	*முதல் (ஆகஸ்ட் 2019)*
மொழி	:	*தமிழ்*
பக்கங்கள்	:	*120*
விலை	:	*Rs.200/-*

- - - - -

Book	:	*Vetrithirumagan MGR – 13*
Title	:	*Muththamizh Kaviyam Madurai Veeran*
Author	:	*Dr.C.Rajeswari, M.A., M.Phil., Ph.D.,*
Cover Design	:	*C. Meenatchi*
Publisher	:	*Chandrothayam Pathippagam* *3/462 First floor, Kambar 2nd Street* *Kambar Salai, Dinamani Nagar* *Madurai – 625 018* *Phone : 7010997639*
Month of Publish	:	*August 2019*
Pages	:	*120*
Price	:	*Rs.200/-*

பொன்மனச் செம்மலின்
அன்புக்கரங்களுக்குள்
மனிதநேயச் செம்மல்.





அன்புக் காணிக்கை

திரையுலகில் எம்.ஜி.ஆருக்கு வழிகாட்டியாக
இருந்த கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணன்
மற்றும் அவரது அன்பு மனைவி டி.ஏ.மதுரம்
அவர்களுக்கு இந்நூல் அன்பு காணிக்கை.



மக்களோடு மக்கள் நாயகன் எம்.ஜி.ஆர்.





நூலாசிரியர் பற்றி



முனைவர். செ. இராஜேஸ்வரி மொழி பெயர்ப்பியல் துறையில் முனைவர் பட்டம் பெற்றவர். புலமை, செந்தமிழ், வளர் தமிழ், ஓங்கு தமிழ் நா.வா.வின் ஆராய்ச்சி போன்ற ஆய்விதழ்களில் ஆய்வுக் கட்டுரைகள் வெளியிட்டார். 1988 முதல் தமிழ் ஆங்கில மொழிபெயர்ப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளார். Indian Women–Changes and Challenges, Urban Theology, Vaigai Paripatal, Eco Vision and Mission, Neuro Ophthalmology Articles போன்ற பல துறை சார்ந்த பனுவல்களை தமிழில் மொழி பெயர்த்துள்ளார்.

1993இல் ஆசியவியல் ஆய்வியல் நிறுவனத்தில் இணைப் பதிப்பாசிரியராகப் [Associate editor] பணயாற்றினார். அப்போது ஜப்பானிய மொழியை தமிழில் கற்பது எளிது என்பதை அறிந்து அதற்கான நூல் உருவாக்கும் பணியில் ஜப்பானியப் பெண் யூகோ ஃபுகுரோயியுடன் இணைந்து செயல்பட்டார். அந்த நூல் இன்று மூன்று பாகங்களாக வெளி வந்துள்ளது. அங்கு வெளிநாட்டு மாணவர்களுக்குத் தமிழ் கற்பித்தார். தமிழ் மாணவர்களுக்கு ஜப்பானிய மொழி இலக்கணம் கற்பித்தார். யுக்கோ சான் அம்மாணவர்களுக்கு ஒலிப்பயிற்சி அளித்தார்.

1986 முதல் சமயச் சொல் அகராதி, எபிரேயம் - தமிழ் அகராதி; கிரேக்கம் - தமிழ் அகராதி உருவாக்கத்திற்காக மக்கள் கல்வி அறக்கட்டளையின் இயக்குனர் மறை திரு.இராபின்சன் லேவி ஐயா அவர்களுடன் இணைந்து

இருபது ஆண்டுகள் தீவிரமாகப் பணியாற்றினார். ஈரோடு மகளிர் கலை, அறிவியல் கல்லூரி, திருச்சி ஸ்ரீமத் ஆண்டவன் கலை, அறிவியல் கல்லூரி, மதுரை அமெரிக்கன் கல்லூரி போன்றவற்றில் சில ஆண்டுகள் தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றினார்.

2000இல் மதுரையில் அமெரிக்காவின் விஸ்கான்சின் பல்கலைக்கழக மாணவர்களுக்குத் தமிழ் கற்பித்தார். அப்போது வெளிநாட்டவருக்கு தமிழ் கற்பிக்க பாட நூல் ஒன்றை உருவாக்கினார். அரவிந்த் கண் மருத்துவமனையில் மொழி பெயர்ப்பாளராகவும் தமிழ் ஆசிரியராகவும் பணியாற்றிய போது அங்கு வந்த வெளி மாநிலம் மற்றும் வெளிநாட்டைச் சேர்ந்த கண் மருத்துவர்களுக்குத் தமிழ் கற்பிக்க Tamil for Non-Tamils என்ற பாட நூலை உருவாக்கினார். இன்றும் அந்தப் பாட நூல் அங்குப் பயன்பாட்டில் உள்ளது. அது போல அங்குச் செவிலியர் பயிற்சிபெறும் இளம் பெண்களுக்கு ஆங்கிலம் கற்பிக்க Easy English என்ற ஆங்கிலப் பாட நூலை உருவாக்கினார். மக்கள் கண்காணிப்பகத்தில் வெளி மாநிலத்தவருக்கும் வெளி நாட்டவருக்கும் ஆங்கிலமும் தமிழும் கற்பித்தார்.

தமிழ் கற்கும் வெளிநாட்டு மாணவர்களுக்காக சென்ட்டர் ஃபார் லேங்குவேஜ் ஸ்டடீஸ் [Centre for Language Studies] என்ற பெயரில் தனி மையம் ஒன்றை அமைத்து அவர்களுக்குத் தமிழ் கற்பித்தார். திராவிட இயக்கப் பாரம்பரியத்தில் வந்ததனால் இவர் திமுக, அதிமுக வரலாறு குறித்து அறிந்திருந்தார். குறிப்பாக எம்.ஜி.ஆர். பற்றிய தகவல்களை நிறைய தொகுத்து வைத்திருந்தார். தமிழ்க் கலையும் பண்பாடும் பற்றிக் கற்பிக்கும்போது தமிழ்நாட்டில் மேடைத்தமிழ்,

மேடை நாடகம், திரைப்படம் ஆகியன அரசியலில் உருவாக்கிய விதம் பற்றியும் விளக்கினார். அப்போது எம்.ஜி.ஆர். அரசியல் தலைவரான விதம் குறித்து மேலும் அறிய அமெரிக்க மாணவர்கள் மிகுந்த ஆர்வம் காட்டினர். அவர்களை எம்.ஜி.ஆர். படங்களைப் பார்க்க திரையரங்குக்கு அழைத்துச் சென்றார். திரை அரங்கில் ரசிகர்கள் காட்டிய ஆர்வமும் ஆர்ப்பரிப்பும் கண்டு கேட்டு வியந்து போய் எம்.ஜி.ஆர். குறித்து சில மாணவர்களும் பேராசிரியை ஒருவரும் ஆராய்ச்சி செய்ய தொடங்கினர். அவர்களின் ஆர்வம் கண்டு எம்.ஜி.ஆர். தகவல் மையம் ஒன்றைத் தொடங்கி அவர் குறித்த நூல்களையும் அவரது படங்களையும் சேகரித்து வைத்தார். பின்னர் அமெரிக்க மாணவர்கள் இந்தியாவுக்கு வருவது குறைந்ததால் இத்திட்டம் தொடர்ந்து செயல்பட முடியவில்லை.

எம்.ஜி.ஆர். பற்றி **ஒப்பனையும் ஒரிஜினலும் எம்.ஜி.ஆர். 100** என்ற தலைப்பில் விகடன்.காமில் முப்பது கட்டுரைகள் வெளியிட்டார். அதன் தொடர்ச்சியாக கனடாவில் இருந்து வரும் www.tamilauthors.com என்ற இணைய இதழில் தொடர்ந்து கட்டுரைகளை வெளியிட்டு வருகிறார். எம்.ஜி.ஆரின் ரசிகர் மன்றங்களின் தனித்தன்மை குறித்து ஒரு நூல் எழுதும் முயற்சியில் தகவல்களை திரட்டி வருகிறார். எம்.ஜி.ஆர். பற்றி நூறு நூல்கள் எழுத வேண்டும் என்பது இவர் இலட்சியம்.

1. வெற்றித்திருமகன் என்ற பெயரில் தொடங்கும் வரிசை நூல்கள் ஆகும், 2. எம்.ஜி.ஆர். நிழல் நிஜம் நிரந்தரம், 3. சிக்கு மங்கு சிக்கு மங்கு சச்ச பப்பா (எம்.ஜி.ஆர். கற்பிக்கும் குழந்தை வளர்ப்பு

முறைகள்), 4. வீரமகன் போராட வெற்றி மகள் பூச்சூட, 5. மகளிர் போற்றும் மக்கள் தலைவர் எம்.ஜி.ஆர்., 6. எம்.ஜி.ஆர். ஒரு ஜீவ நதி, 7. எம்.ஜி.ஆர். ஒரு கலியுகப்போராளி, 8. ஒளி விளக்கு எம்.ஜி.ஆர்., 9.வெற்றிப் படிக்கட்டில் நாடோடி மன்னன் – I, 10. நீங்க நல்லா இருக்கணும் [எம்.ஜி.ஆரின் திரைப்படப் பாடல்கள் -I], 11. பாட்டுடைத் தலைவன் எம்.ஜி.ஆர். [எம்.ஜி.ஆரின் திரைப்படப் பாடல்கள் - II], 12. இரசிகர்களின் இதய தெய்வம் எம்.ஜி.ஆர். ***பதிமூன்றாவதாக முத்தமிழ்க் காவியம் மதுரை வீரன்*** *என்ற இந்நூல் வெளிவந்துள்ளது.*

தஞ்சையைச் சேர்ந்த தமிழ் இலக்கியச் செம்மல் கவிஞர் முத்தமிழ் விரும்பியின் ‘பூ மர நிழல், வறட்சியின் பாடல்கள் மற்றும் உன்னொடு உரையாடுதல்’ திட்டிவாசல் பெண்ணொருத்தி என்ற கவிதை நூல்களை இவர் ஆங்கிலத்தில் ***“Shade of the Flowering Tree, Songs of Dryness, Speaking with You” Language of Love, A Lady at the little gate,*** *என்று மொழி பெயர்த்துள்ளார். இந்நூல்களை சென்னை எமரால்டு பதிப்பகம் வெளியிட்டுள்ளது. இவர் எழுதிய சிறுகதைகள்* ***‘அமராவதியின் காதல்’*** *என்ற பெயரில் அமேசானில் வெளிவந்துள்ளது. இவர் எழுதி வரும் ஆய்வுக் கட்டுரைகள் நெருஞ்சி என்னும் இலக்கிய இதழில் வெளிவருகின்றன. தினகரன் ஜோதிட மலரில் இவர் எழுதிய “****என்னோட ராசி நல்ல ராசி”*** *என்ற தொடர் வந்து கொண்டிருக்கின்றது. மாதமிரு முறை வரும் ஆன்மீகம் இதழில் ‘மரங்களே திருக்கோயில்களின் முன்னோடி, காளியும் தேவியும்’ போன்ற ஆன்மீக கட்டுரைகள் வெளிவருகின்றன.*

உள்ளடக்கம்



1. மதுரை வீரன் - கதையும் காலமும்

மதுரை வீரன் திரைப்படம் 1956ஆம் ஆண்டு சித்திரை வருடப்பிறப்பு அன்று வெளியானது. அது வரை வந்த தமிழ் படங்களில் அதிக பிரிண்டுகள் போடப்பட்டு அதிக திரையரங்குகளில் வெளியான முதல் படம் மதுரைவீரன் ஆகும். மதுரை வீரன் படத்தை லேனா செட்டியார் தயாரித்தார். யோகானந்த் இயக்கினார். கண்ணதாசன் கதை வசனம் எழுதினார். இப்படம் தமிழகத்தின் முக்கிய நகரங்களில் வெள்ளி விழா கொண்டாடியது.

மற்ற ஊர்களில் அதன் அதன் மக்கள் தொகைக்கு ஏற்ப 100 நாட்கள் 50 நாட்கள் 75 நாட்கள் என இதற்கு முன்பு வந்த படங்களை விட அதிக நாட்கள் ஓடி நல்ல வசூலைப் பெற்றுத் தந்தது. இப்படம் வெளிவந்த பிறகு மக்கள் மத்தியில் எம்.ஜி.ஆரின் செல்வாக்கு மிக உயரத்துக்கு சென்றதால் எம்.ஜி.ஆர். ரசிகர் மன்றங்கள் எண்ணிக்கையில் பெருகத் தொடங்கின. எம்.ஜி.ஆர். அசைக்கமுடியாத கலை சக்தியாக திரை உலகத்தின் ஆதிக்க சக்தியாக வெற்றி வீரனாக செல்வாக்கும் சொல்வாக்கும் மிக்கவராக உயர்ந்தார். திமுகவில் அவர் செல்வாக்குமிக்க தலைவராக வளர்ந்தார்.

எம்.ஜி.ஆர். நடித்த மருதநாட்டு இளவரசி, மந்திரிகுமாரி மர்மயோகி, மலைக்கள்ளன் ஆகியவை வெளிவந்து வெற்றி வாகை சூடின. வெற்றி வரிசையில் ஐந்தாவதாக வந்த படம் மதுரைவீரன் ஆகும். மதுரை வீரன் மறு வெளியீடுகளிலும் நல்ல வசூலை பெற்றது. 2019ஆம் ஆண்டு ஏப்ரல் பதின்மூன்றாம் நாள் மதுரை வீரன் படத்தின் 63 ஆவது ஆண்டு விழா நடைபெற்றது.

திரையுலகில் இரண்டு மதுரை வீரன்

1939இல் வி செல்லப்பா டி.பி. ராஜலக்ஷ்மி நடித்த மதுரை வீரன் படம் வெளிவந்தது. அப்படமும் வெற்றிப் படம்தான் என்றாலும் எம்.ஜி.ஆர். நடித்து வந்த மதுரை வீரன் மாபெரும் வெற்றியடைந்ததற்கு கதை அமைப்பு ஒரு முக்கிய அம்சமாகும். மதுரைவீரன் கதை தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த ஒருவன் மன்னனின் மகளை மணந்து வாழ்வது ஒரு முக்கிய அம்சம். அடுத்தது செருப்பு தைக்கும் தொழிலாளியின் மகனாக பிறந்த மதுரை வீரன் திருச்சி மன்னரின் தளபதியாக உயர்ந்து அவரது மைத்துனரான மதுரையை ஆண்ட திருமலை நாயக்கரிடம் அங்கு தொல்லை கொடுத்து வந்த கள்ளர்களைப் பிடிக்க சிறப்புப் பொறுப்பேற்று வந்ததும் ஆகும். இது இரண்டாவது முக்கிய அம்சமாகும். படக்கதையில் மதுரை வீரனின் வேறு பல சிறப்புக்கள் சொல்லப்படவில்லை.

மதுரை வீரன் கதை பதினாறாம் நூற்றாண்டில் நடந்த உண்மைக் கதை ஆகும். தமிழகத்தில் நாயக்கர் ஆட்சி நிலவியபோது அவர்கள் ஆந்திராவில் இருந்து தங்களுக்கு உரிய பணிவிடைகளைச் செய்ய தன் மொழி பேசுவோரை இங்கு அழைத்து வந்தனர். நாயக்கர்களின்

தாய் மொழி தெலுங்கு. ஆதிக்க சாதியினர் தெலுங்கு பேசும் ஒட்ட நாயக்கர், சக்கிலியர், கம்பளத்து நாயக்கர், தொட்டிச்சி நாயக்கர் போன்றவரையும் தமிழ்நாட்டிற்கு வரவழைத்தனர். இவர்களில் சக்கிலியர் செருப்பு தைக்கும் தொழிலும், மாட்டுத் தோலில் வயலுக்கு தண்ணீர் இறைக்கும் கமலை [வாளி போல் இருக்கும்] தைக்கும் தொழிலும் செய்து வந்தனர். இவர்கள் துப்புரவு பணிகளில் ஈடுபடுவது கிடையாது. இவர்கள் போர்க்கலைகள் பெற்றவர்களாக இருந்ததனால் காவல் பணிக்குச் செல்வது உண்டு.

கதைப்பாடலில் மாற்றங்கள்

கன்னி மாடத்தில் காவல் பணிக்கு சென்ற வீரன் மீது பொம்ம நாயக்கரின் மகள் பொம்மி காதல் கொண்டதால் அவன் அவளைச் சிறை எடுத்துச் சென்று வேற்று ஊரில் திருமணம் செய்து கொள்கிறான். அவளைத் திருமணம் செய்ய வேண்டும் என்று நினைத்திருந்த முறை மாமன் ஏமாந்து போகிறான். இத்திருமணத்தில் ஏழை பணக்காரன் என்ற வேறுபாடும் தாழ்த்தப்பட்ட சாதி உயர்த்தப்பட்ட சாதி என்ற வேறுபாடும் அமைந்துள்ளது. இவ்விரண்டுமே இக்கதை மக்களிடையே பரவலாக வழங்கி வந்ததற்கும் செல்வாக்குப் பெற்றதற்கும் முக்கியக் காரணங்கள் ஆகும். ஏழை மக்கள் மேற்கூறிய இரண்டு காரணங்களால் மதுரை வீரன் கதையை கதைப்பாடலாகவும் திரைப்படமாகவும் விரும்பிக் கேட்டும் பார்த்தும் வந்தனர்.

மாறுகால் மாறு கை வாங்கப்பட்ட வீரன்

மதுரைவீரன் சாமி கதைப்பாடல் என்று நாட்டுப்புற பாடல் கட்டப்பட்டு பாடப்பட்டு

வந்தது. உயர் சாதியினர் இளவரசியைச் சிறையெடுத்துச் சென்ற நீசன் மதுரை வீரன் மாறு கால் மாறு கை வாங்கப்பட்டு கொலைத் தண்டனைக்கு உள்ளானதை நினைத்துப் பெருமிதம் கொண்டு மகிழ்ச்சி அடைந்தனர். தங்களுடைய சாதிப்பெண்ணை அவன் சிறையெடுத்துச் சென்ற தை எண்ணி மனம் புழுங்கிக் கொண்டிருந்த உயர்சாதியினருக்கு அவன் மாறு கால் மாறு கை வாங்கப்பட்டு உயிரிழந்தது மனநிறைவை அளித்தது. மதுரைவீரன் சாமி கதை ஏழை பணக்காரர் தாழ்த்தப்பட்டவர் உயர்த்தப்பட்டவர் என எல்லாத் தரப்பினரையும் திருப்திப்படுத்திய கதையாகும். மன்னன் தவறான தண்டனை கொடுத்ததால் வீரனின் மனைவிமாரும் சேர்ந்து உயிர் இழந்ததால் அவர்களின் ஆன்மா சாந்தியடைய வேண்டி நாயக்கரும் சக்கிலியரும் இவர்கள் மூவரையும் தெய்வங்களாக வைத்து வணங்கி வருகின்றனர்.

கழுவேற்றப்பட்ட காத்தவராயன்

மதுரை வீரன் மதுரை, திருச்சி போன்ற மாவட்டங்களில் நாட்டுப்புறத் தெய்வமாக இருந்து அருள் பாலிக்கின்றான். மற்ற கதைகள் மன்னர்கள் பற்றிய கதைகளாகவே வழங்கிவந்தன. ஆனால் திருச்சியில் காத்தவராயன் என்ற தாழ்த்தப்பட்ட குலத்தைச் சேர்ந்தவன் ஆரியமாலா என்ற அந்தணப் பெண்ணைக் காதலித்ததால் கழுவேற்றப்பட்டான். அவனையும் ஆரியமாலாவுடன் இணைத்துத் தெய்வமாக வைத்து அப்பகுதி மக்கள் வழிபட்டு வருகின்றனர். மதுரை வீரனைத் தொடர்ந்து 1958இல் சிவாஜி கணேசனும் சாவித்திரியும் நடித்த காத்தவராயன் படம் டி. ஆர். ராமண்ணா இயக்கத்தில் வெளிவந்தது.

பழைய படத்தைப் போல இப்படம் பெரியளவில் வெற்றி பெறவில்லை. 1941ஆம் ஆண்டில் பி யூ சின்னப்பாவும் எம்.எஸ். சரோஜாவும் நடித்து ஆரியமாலா என்ற பெயரில் காத்தவராயன் கதை படமாக்கப்பட்டது. இப்படத்தை எஸ் எம் ஸ்ரீ ராமுலு நாயுடு இயக்கினார். இவரும் பட்சி ராஜா ஸ்டுடியோசும் இணைந்து தயாரித்தனர். படம் மாபெரும் வெற்றி பெற்றது.

சாதி மாறிய முத்துப்பட்டன் கதை

மதுரை வீரன், காத்தவராயனை போல இன்னொரு கதை முத்துப்பட்டன் கதை. மேற்குறிப்பிட்ட இரண்டில் இருந்தும் முத்துப்பட்டன் கதை சற்று வேறுபட்டது. ஐயர் இனத்தைச் சேர்ந்த அந்தணன் ஒருவன் சக்கிலிய இனத்தைச் சேர்ந்த சகோதரிகள் பொம்மக்கா, திம்மக்கா என்ற இருவரைத் திருமணம் செய்து கொள்வதற்காக அவர்களைப் போல மாட்டுக்கறி தின்று சாதி மாறிக் கொள்வான். இவனது ஆடுமாடுகளை வன்னியரும் மறவரும் கொண்டு போவதை அறிந்து அவர்களுடன் கடுமையாகப் போராடும் போது ஒரு சப்பாணி இவன் முதுகில் குத்திக் கொன்று விடுவான். மனைவியர் இவனுடன் உடன்கட்டையேறி உயிரை விடுவர். இவர்கள் மூவரையும் நெல்லை மாவட்டத்தில் சொரிமுத்து ஐயனார் கோயிலில் தெய்வங்களாக வைத்து வழிபடுகின்றனர். இந்தக் கதை படமாக வரவில்லை.

வெங்கலராஜன் கதை, தேசிங்கு ராஜன் கதை, மருது சகோதரர்கள், கட்டபொம்மன் கதை போன்றவை நாட்டுப்புறக் கதைகளாக இருந்தாலும்

அவை மன்னர் பரம்பரையைச் சேர்ந்தவர்கள் பற்றிய கதைகள் ஆகும்.

மதுரை வீரன் கதை மதுரையைச் சேர்ந்த கதை என்றாலும் தமிழ்நாடு முழுக்க இக்கதை சினிமாவால் பரவிவிட்டது. தமிழக மக்களின் தாழ்த்தப்பட்டோரும், ஆதிக்க சாதியினரும், ஏழை பணக்காரரர் என அனைத்துப் பிரிவினரும் மன நிறைவு பெறும் வகையில் இக்கதை அமைந்திருந்தது.

காதல் கதையும் சோகமும்

உலக இலக்கிய வரலாற்றில் காதல் கதைகளே காலத்தை வென்ற காவியங்களாக நின்று நிலவுகின்றன. இந்தியாவில் இளவரசனை காதலித்த ஆடற்கலை மங்கை அனார்கலி, கவிஞனை காதலித்த சோழ இளவரசி அமராவதி, தேவதாஸ் என்ற பணக்கார வாலிபரை காதலித்த ஏழைப்பெண் பார்வதி ஆகியோருடைய திரைக்கதைகள் என்றும் மக்களின் மனதைக் கவர்ந்த கதைகளாக விளங்குகின்றன. இதற்கு முக்கிய காரணம் காதலர்கள் இரண்டு தனிப் பிரிவை சேர்ந்தவர்கள் அந்தஸ்தாலும், பணத்தாலும், ஜாதியாலும் செல்வத்தாலும் ஒட்ட முடியாத பிரிவைச் சேர்ந்தவர்கள் என்பதால் இவர்களால் நிஜ வாழ்வில் ஒன்று சேர முடியவில்ல. ஆதிக்கப் பிரிவினரால் பிரிக்கப்படுகின்றனர் அல்லது கொல்லப் படுகின்றனர். இதைப்போலவே மதுரைவீரன் கதையிலும் மதுரை வீரன் மாறு கால் மாறு கை வாங்கி கொலைத் தண்டனைக்கு உள்ளாகின்றான். அவனது மனைவியர் பொம்மியும், வெள்ளையம்மாளும் அவனுடன் உயிர்

விடுகின்றனர். எனவே இச் சோக கதைகள் மக்கள் மனதில் பசுமரத்தாணி போல பதிந்து விடுகின்றன.

சோகக்கதைகள் காலத்தால் அழியாமல் நின்றதற்குக் காரணம் மக்கள் சோகத்தை விரும்புகிறார்கள் என்பது அல்ல. மக்களின் மனதில் ஏற்கனவே உறைந்துள்ள சோகம் இக்கதைகளைக் கேட்கும் பொழுது உருகிக் கண்ணீராக வெளி வருகின்றது. இதனை ஆங்கிலத்தில் ***vicarious suffering*** *என்பர். அதாவது மற்றவரின் துக்கத்தைப் பார்த்து தன்னுடைய துக்கத்தை ஆற்றிக் கொள்வதாகும். எனவே அக்காலத்தில் மிகுந்த மன அழுத்தத்துக்கு உள்ளாகி வேதனையை வெளிப்படுத்த முடியாமல் இருந்த ஒடுக்கப்பட்ட மக்கள் இதுபோன்ற சோகக்கதைப் பாடல்களையும், நாடகங்களையும், கதைகளையும், சினிமாக்களையும் பார்த்து அழுது அழுது தங்களின் மன துன்பத்தை ஆற்றிக் கொண்டனர். கண்ணீரால் தணித்துக் கொள்கின்றனர்.*

எம்.ஜி.ஆர். சாகும் கதை பெற்ற வெற்றி

மதுரை வீரன் கதை சோகக் கதை என்றாலும் எம்.ஜி.ஆர். நடித்ததனால் அந்தப் படத்தின் சோகம் உணர்த்தப் படாமலேயே மறைந்து விட்டது. இறுதியில் மதுரை வீரன் தெய்வமாகி விண்ணேகிய போது எம்.ஜி.ஆருக்குப் பதில் வேறு ஒருவர் அக்காட்சியில் நடித்திருந்ததாலும் படம் பார்த்த ரசிகர்கள் எம்.ஜி.ஆரின் கால் கை வெட்டுப்பட்டதை நினைத்து வருந்தி கலங்கவில்லை. அதற்கு முக்கிய காரணம் கதையில் அவர்கள் ஒன்றிப் போகாதது அல்ல; நிஜத்தில் அவர்கள் எம்.ஜி.ஆருடன் ஒன்றிப்போனது தான். நிஜ வாழ்வில் அவர்கள் எம்.ஜி.ஆரை ஒரு கதாநாயகனாக வெற்றி வீரனாகக்

கற்பனை செய்து இருந்ததனால் சினிமாவில் அவர் மாறு கால் மாறு கை வாங்கப்பட்டு இறந்துபோகும் காட்சியிலும் கூட ரசிகர்கள் மனம் வருந்தாமல் அதனைப் பொருட்படுத்தாமல் படத்திற்கு மிகப்பெரிய வெற்றியை அளித்தனர்.

எம்.ஜி.ஆர். இறந்து போகும் படங்கள் வெற்றி பெறுவதில்லை. விதிவிலக்காக வெற்றி பெற்ற ஒரே படம் மதுரைவீரன் மட்டுமே. *தேசிங்கு ராஜன் படத்தில் இரண்டு எம்.ஜி.ஆரும் இறந்து போவார்கள். நீரும் நெருப்பும் படத்தில் கரிகாலன் எம்.ஜி.ஆர். இறந்து போவார். பாசம் படத்தில் கதாநாயகனான எம்.ஜி.ஆர். இறந்து போவார். இப்படங்கள் எல்லாம் மக்களால் புறக்கணிக்கப்பட்டன. ஆனால் கொடூரமாக மாறு கால் மாறு கை வெட்டப்பட்டு இறந்து போன மதுரை வீரன் படம் மட்டும் மகத்தான வெற்றியைப் பெற்றது என்றால் மக்கள் எம்.ஜி.ஆரை மதுரைவீர சாமியாக கருதினார்களே தவிர தண்டனை பெற்று கொல்லப்பட்டார் என்று கருதவில்லை. மதுரை வீரனின் கதையின் வெற்றி அவரைக் குலசாமியாக*



கொண்டு வழிபடுவோரின் ஆதர்ச தெய்வமாக எம்.ஜி.ஆரை மாற்றியது.

உழைக்கும் கரங்கள் படத்தில் மதுரை வீரசாமி பூஜை

எம்.ஜி.ஆர். மதுரை வீரன் சாமி கதையை மீண்டும் தன் படத்தில் பயன்படுத்தினார். மதுரை வீரனுக்குப் பூஜை போட்டு அதில் கதாநாயகி லதாவும் இரண்டாவது கதாநாயகியாக நடித்து இருந்த பவானியும் மதுரை வீரன் கதையை நாட்டிய நாடகமாக நடத்திக் காட்டுவதாக ஒரு காட்சி அமைத்திருந்தார். இது கிளைமாக்ஸ் காட்சிக்கு உதவியாக அமைந்தது. பொய்யாகக் குற்றம் சாட்டப்பட்டு போலீஸ் காவலில் இருந்த எம்.ஜி.ஆருக்கு அவர் தப்பித்து வந்து ஒரே உயிர் சாட்சியாக இருக்கும் தங்கவேலுவின் மகனைக் காப்பாற்றிக் கொண்டு வந்து நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டிய முக்கியமான கடமை. தன் கடமையை நிறைவேற்றுவதற்கு உரிய நேரமாக மதுரை வீரன் சாமிக்குப் பூஜை போடும் நேரத்தைத் தேர்ந்தெடுத்தார். மக்களின் கவனத்தை பூசையின் பக்கம் திசை திருப்பி விட்டு அவர் போலீஸ் காவலில் இருந்து தப்பித்து வந்து அந்தச் சிறுவனைக் காப்பாற்றிக் கொண்டு வந்துவிடுகிறார்.

படத்தின் கிளைமாக்ஸ் காட்சியில் இரண்டு பெண்களும் நடனமாடும் பாட்டு காட்சி இடம்பெற்றது. பாடும் பாட்டின் வரிகளும் எம்.ஜி.ஆர். தப்பித்து வரும் காட்சிகளும் ஒன்றுக்கொன்று தொடர்புடையனவாக அமைக்கப் பட்டிருந்ததனால் கிளைமாக்ஸ் காட்சி மக்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது. மதுரைவீரன் கதையையும் அவர்கள் மீண்டும்

ஒருமுறை வண்ணக் காட்சியாக, பாடல் காட்சியாக, ஆடல் காட்சியாகப் பார்க்கும் வாய்ப்பு கிட்டியது.

கள்ளன் பெரிசா? காவலன் பெரிசா?

திருமலை நாயக்கர் ஆண்ட காலத்தில் அவனுக்குத் தளபதியாக இருந்த மதுரை வீரன் கள்ளர்களைப் பிடிக்கும் முயற்சியில் வெற்றி பெற்றும் மன்னனின் தவறான புரிதலால் கொல்லப்படுகிறான். திருமலை நாயக்கர் ஆட்சியின் போது நாயக்கர்களுக்கும் கள்ளர்களுக்கும் இடையே கண்ணுக்குத் தெரியாத ஒரு மோதல் இருந்து வந்தது. பிறமலைக் கள்ளர்கள் எனப்படும் மதுரைக்குப் புறத்தே உள்ள மலைகளில் வாழும் கள்ளர்கள் மன்னருக்கு சவாலாக இருந்தனர். அவர்கள் 'ஆறலை கள்வர்களாக' இருந்ததனால் வழிப்போக்கர்களைக் கொள்ளையடிப்பதும் தேவைப்பட்டால் கொலை செய்வதும் வழக்கமாக இருந்தது.

கள்ளர்களைக் கட்டுப்படுத்துவது மன்னனுக்கு மிகப் பெரிய சவாலாக இருந்தது. அப்போது மன்னரின் அரண்மனையில் இராணியின் முத்துமாலையை ஒருவன் திருடி விடுகிறான். மறுநாள் அந்த முத்துமாலையைக் கொண்டு வந்து அவன் மன்னர் முன்னிலையில் வைக்கின்றான். அப்போது மன்னர் இத்தனை பாதுகாப்புக்கு இடையிலும் இராணியின் அந்தப்புரத்தில் இருந்த முத்து மாலையை எப்படி எடுத்தாய் என்று கேட்டு அறிந்து கொண்டு கள்ளன் பெரிதா, காப்பான் பெரிதா என்றால் கள்ளன் தான் பெரிது என்று கூறுகின்றார். இந்த சொலவடை ஒரு பழமொழி ஆகவே நின்று விட்டது. சமுதாயத்தில் இன்றும் கள்ளன் பெரியவனா காவலன் பெரியவனா என்றால்

கள்ளன் தான் பெரியவன் என்ற ஒரு வழக்கு நிலைபெற்றுவிட்டது.

கள்ளரே காவல்காரர்

கள்ளர்களை ஒடுக்க கள்ளரையே திருமலை நாயக்கர் காவல்காரர்களாக ஊருக்கு ஊர் நியமிக்கின்றார். எந்தப் பொருள் களவு போனாலும் காவல்காரர் அந்தப் பொருளை மீட்டுக் கொண்டுவந்து கொடுக்க வேண்டிய கடமை உடையவராகிறார். இதனால் காவல்காரனை மீறி யாரும் வந்து பொருளை களவாண்டு கொண்டு போக முடியாது. இப்பகுதியைச் சேர்ந்தவர்கள் திருடு என்ற சொல்லை பயன்படுத்துவது கிடையாது. அவர்கள் திருடர் என்று தம்மை அழைப்பதும் கிடையாது.

கள்ளர் தாம் களவு வாங்கிக் கொண்டு போன பொருளைப் பணம் பெற்றுக்கொண்டு திருப்பிக் கொடுத்து விடுவது உண்டு. அபராதப் பணம் என்பது பொருளை கவனக் குறைவாக வைத்திருந்ததற்கு உடைமையாளன் செலுத்த வேண்டிய பணம் ஆகும். இது பொருளுக்கு மட்டுமல்ல. மாடு **கன்று காலிகளுக்கும்** பொருந்தும். கள்ளர் ஆடு மாடுகளை ஓட்டிக் கொண்டு சென்று விடுவர். பிறகு ஒரு துண்டு சீட்டில் தொகையை எழுதி ஒரு ஆள் மூலமாக தகவல் சொல்லி அனுப்புவார்கள். உடனே உடைமையாளன் அவர்கள் கேட்ட பணத்தை கொடுத்துவிட்டு தன்னுடைய ஆடுமாடுகளைத் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம். இதற்குப் பெயர்தான் **களவு வாங்குதல்** [களவாங்குதல்] இன்றைக்கும் களவு வாங்க போகிறவர்கள் உண்டு.

திருமலை நாயக்கர் இவர்களின் புத்தியைக் கூர்மையையும் செயல்திரத்தையும் அறிந்து கொண்டு இவர்களை அழைத்துப் பேசி இவர்களில் சிலரை காவல்காரர்களாக ஊருக்கு ஒருவராக நியமித்தார். பின்பு பிரிட்டிஷ் அரசாங்கம் போலீஸ்காரர்களை மதுரைக்குக் கொண்டு வந்து காவல் நிலையங்களை அமைத்த போது காவல்காரர்கள் அவர்களுக்கு சவால் விடுகின்றனர். 'களவு போன பொருளை நாங்கள் கொண்டு வந்து கொடுத்து விடுவோம். அது எங்கள் கடமை. ஆனால் நீங்கள் வழக்கு மட்டும் பதிவு செய்து கொண்டு தேடிக் கொண்டே இருப்பீர்கள். பொருள் திரும்பக் கிடைக்காது. பொருளை எடுத்தவன் கிடைத்தால் அவன் சிறைக்கு போவான். இழந்தவன் இழந்ததுதான்' என்று தெரிவித்தனர். அதுதான் உண்மையாக இன்று வரை நடந்து கொண்டிருக்கிறது. சு வெங்கடேசன் எழுதிய காவல் கோட்டம் நாவலில் கள்ளர் கதைகள் விரிவாக இடம்பெற்று ள்ளன.

மலைக் கள்ளர்

மதுரை வீரன் படத்தில் சுருளிமலைக் கள்ளர், அழகர் மலைக் கள்ளர் என்று இரண்டு வகையான கள்ளர்கள் பற்றிய காட்சிகள் இடம்பெறும் இந்த மலைக் கள்ளர்கள் கர்நாடக மன்னர்கள் இங்குப் படையெடுத்து வந்தபோது அவர்களுடன் வந்த போர் மறவர்கள். இவர்கள் திரும்பித் தன் ஊருக்குச் செல்ல விருப்பமில்லாமல் இங்கேயே தங்கி விட்டதனால் இவர்களிடம் போர்க்குணம் இருந்தது. ஆனால் வேளாண் பணிகள், கைவினைத் தொழில்கள் போன்றவற்றை அவர்கள் அறிந்திருந்த காரணத்தினால் எவரையும் அடித்து உதைத்துப் பணம் பிடுங்குவது இவர்களுக்கு எளிதாக இருந்தது. வணிகக் கூட்டம்

செல்லும் வழியில் நின்று ஒரு வண்டியையே திருப்பிக் கொண்டு வந்து ஊருக்குள் அனைவருக்கும் உணவளிக்கும் பழக்கம் இருந்தது. வண்டியை உடைத்து விறகுக்கு வைத்துக் கொள்வார்கள் அரிசி பருப்புகளை கொண்டு வந்து பொதுவில் வைத்து ஒவ்வொரு குடும்பத்திலும் இருக்கும் நபர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப பகிர்ந்து கொள்வர்.

மதுரை வீரன் வாழ்க்கை வரலாறு

மதுரை வீரன் 1608 ஆம் ஆண்டு பிறந்தவன். அவன் 21ஆம் வயதில் திருமலை நாயக்க மன்னரின் தளபதியாக பொறுப்பேற்றான். 33ம் வயதில் இறந்து போனான். அவன் வாழ்ந்ததை நேரில் கண்ட மனிதர்கள் இருந்ததனால் அவர்கள் சொன்ன கதைகள் செவி வழியாக வந்து கதைப்பாடலாக உருவாகி பலரும் ரசித்துக் கேட்கும் நிலை ஏற்பட்டது. நாட்டுப்புறக் கதைப் பாடல்களில் வேறுபட்ட கருத்துகள் இருப்பதைக் காணலாம். மதுரை வீரனை பொம்மி காதலிக்கவில்லை என்றும் அவன் பொம்மியைச் சிறையெடுத்துச் சென்றான் என்றும் மதுரைவீர சாமிக் கதைப் பாடல்களில் உள்ளன. ஆனால் காலப்போக்கில் மதுரை வீரன் சக்கிலியர் மற்றும் நாயக்கரின் குலதெய்வமான பிறகு சில பகுதிகளை நீக்கிவிட்டு அவனைக் காசிராஜனின் மகன் என்று புதுக் கதையைச் சேர்த்து புதிய கதைப்பாடலை உருவாக்கினர்.

தெய்வமேற்றுதல்

மன்னர் மகன் காசிராஜனுக்கு பிறந்த குழந்தை மாலை சுற்றிப் பிறந்ததால 'மாலை சுற்றிப் பிறந்த குழந்தை மன்னர் பரம்பரைக்கு ஆகாது' என்று

ஜோதிடர் கூறுகிறார். உடனே அந்த குழந்தையை காட்டில் விட்டு விடுங்கள் என்று மன்னர் சொல்லவும் ஏவலர்கள் காட்டில் விட்டு விடுகின்றனர். அந்தக் குழந்தையை ஒரு சக்கிலிய தம்பதியினர் எடுத்து வளர்க்கின்றனர். இக்கதை ஒரு பிறழ்சேர்க்கை ஆகும். ராஜனின் மகனாக இருக்கும் அவன் பொம்மி என்ற இளவரசியை மணந்தது மிகச் சரி என்று தகுதிப்பாடு சமப்படுத்தப்படுகிறது. இருவரது பிறப்பு தகுதியும் திருமணத் தகுதியும் சமூக அந்தஸ்தும் சமன் படுத்தபடுகிறது. இதனை தெய்வம் ஏற்றுதல் *DIVINISATION* என்று சமூகவியல் அறிஞர்கள் கூறுவர்.

தெய்வம் ஏற்றுதல் கோட்பாட்டால் உயர் சாதியினரும் சமாதானம் அடைகின்றனர். தாழ்த்தப்பட்டோரும் மனமகிழ்ச்சி எய்துகின்றனர். இதனால் மதுரைவீரன் எல்லோரின் மனம் கவர்ந்தவனாகிறான். மதுரை வீரனாக எம்.ஜி.ஆர். நடித்த போது அவருடைய அழகும் இளமையும் சுறுசுறுப்பும் துருதுருவென்று கண்கள் மின்ன வசனம் பேசும் அழகும் எல்லோரையும் கவர்ந்ததில் வியப்பொன்றுமில்லை.

*1954*இல் வந்த மலைக்கள்ளன் படத்தில் கள்ளனாக நடித்த எம்.ஜி.ஆர். அந்த ஊர் ஜமீனின் மகன் என்று காட்டப்படுவார். சிறுவயதில் குமாரதேவன் குழந்தையாக இருந்த போது அவனை எதிரிகள் கடத்திச் சென்றுவிட்டனர். அவனே பின்னர் வளர்ந்து மலையில் வாழ்ந்து வருகிறான். அவன் மக்களுக்கு நன்மை செய்யும் ராபின்ஹுட் போன்றவன். இந்த கதையின் தொடர்ச்சியாகவே மதுரைவீரனும் அமைந்தது. ஆனால்

மலைக்கள்ளனில் கள்ளனாக வந்த எம்.ஜி.ஆர். மதுரைவீரன் கதையில் கள்ளர்களைப் பிடிக்கும் தளபதியாக வருகின்றார்.

மதுரை வீரன் நடத்திய போர்கள்

17ஆம் நூற்றாண்டில் நாயக்கர்கள் மன்னராக இருந்தபோது அவர்களின் தளபதிகளாக சக்கிலியர் அல்லது பகடை எனப்படுவோர் இருந்தனர். பூலித்தேவனுக்கு ஒண்டிவீரன் பகடை தளபதியாக இருந்தார்.. கட்டபொம்மனிடம் முத்தன் பகடை, பொட்டிப் பகடை கந்தன் பகடை தாமன் பகடை ஆகியோர் படைத்தளபதிகளாக இருந்தனர்.

மதுரைவீரன் திருமலை நாயக்கரிடம் தளபதியாக இருந்து இரண்டு படையெடுப்புகளில் பங்கேற்று வெற்றி வாகை சூடினான். 1634 ஆம் ஆண்டு திருவிதாங்கூர் மன்னர் மதுரையை நோக்கி படையெடுத்து வந்தபோது அவர்களை வெற்றி கொண்டவன் மதுரைவீரன். 1965 இல் இராமநாதபுரம் சேதுபதி மதுரையைக் கைப்பற்ற நினைத்த போது மதுரை வீரன் திருமலை நாயக்கரின் தளபதியாக நின்று படையை நடத்திச் சென்று மதுரைக்கு வெற்றி தேடித் தந்தான். இவ்விரு போர்களிலும் மதுரை வீரனின் தலைமைப்பண்பும் போர் மறவர்களை ஒருங்கிணைத்த தன்மையும் திருமலை நாயக்கரால் பெரிதும் பாராட்டப்பட்டது.

சமூகத் தலைவனாக மதுரை வீரன்

திருமலை நாயக்கர் தன்னுடைய மனைவிக்காக மிகப்பெரிய அரண்மனை ஒன்றைக் கட்ட முனைந்த போது பெரிய பெரிய தூண்களை நிறுவி மிகச் சிறப்பாகக் கட்ட வேண்டும் என்று

திட்டமிட்டார். அப்போது கட்டடப் பணிகள் தொய்வடைந்து கொண்டே இருந்தன. அதற்கு அவர் ஒரு நிமித்திகனை அழைத்து ஆருடம் பார்த்த போது பெரிய கட்டடங்கள் கட்டும் வேலையில் துஷ்ட தேவதைகளுக்கு நரபலி கொடுக்க வேண்டும் என்று கூறுகின்றார். உடனே நாயக்கர் ஒவ்வொரு தூண் எழுப்பும் போதும் ஒவ்வொரு சக்கிலியனை நரபலி கொடுக்கும் படி கட்டளையிடுகிறார். இதற்காக பிறர் அறியாமல் ஒரு சக்கிலியரை அழைத்துப் போய் நரபலி கொடுத்துக் கொண்டிருந்தனர்.

திருமலை நாயக்கர் மகாலில் ஒவ்வொரு தூண் எழுப்பும் போதும் ஒவ்வொரு இளைஞன் பலியானான். அரசாங்கத்திலிருந்து வந்து அழைத்துச் செல்லும் இளைஞர்கள் திரும்ப வருவதில்லை என்பதை அறிந்து கொண்ட சக்கிலியர் குடியிருப்பைச் சேர்ந்தவர்கள் அரசாங்க அதிகாரிகளைக் கண்டாலே ஓடி ஒளிந்தனர். ஒவ்வொரு ஊராக அவர்களும் தங்கள் இருப்பிடத்தை மாற்றிக்கொண்டே போயினர். இருந்தாலும் அவர்களைத் தேடிப் பிடித்து ஓர் இளைஞனை கொண்டு போய் உயிர்ப்பலி கொடுப்பது வழக்கமாக இருந்தது. இந்த செய்தி மதுரைவீரன் செவிக்கு எட்டியது.

மதுரை வீரன் திருமலைநாயக்கரிடம் வந்து ‘இந்த அநியாயத்தை தடுத்து நிறுத்த வேண்டும்’ என்று வாதிடுகிறான். திருமலை நாயக்கருக்குத் தர்மசங்கடமாகப் போய்விட்டது. ‘நாம் ஊருக்கு தெரியாமல் செய்த காரியத்தை இவன் ஊரறிய அம்பலப்படுத்தி விட்டானே’ என்ற கோபத்தில் இவனை உயிரோடு விடக்கூடாது என்று மனதிற்குள்

கறுவிக் கொள்கிறார். இவ் வஞ்சக எண்ணத்தால் மதுரை வீரன் மீது பொய்க்குற்றம் சுமத்தி அவனைக் கொடூரமாக கொல்ல வேண்டும் என்ற எண்ணத்தில் அவனை சிரச்சேதம் செய்யாமல் மாறு கால் மாறு கை வாங்கும்படி உத்தரவிடுகிறார். இந்தக் கதையும் வழக்கில் இருக்கின்றது. தங்களுடைய உயிருக்காக போராடி உயிர் கொடுத்த மதுரைவீரனை தன் குலசாமியாக கொண்டு மீனாட்சி அம்மன் கோவிலுக்கு வெளியே கோயில் எழுப்பி வழிபட்டு வருகின்றனர்.

நடுகல் வழிபாடும் நாட்டுப்புறத் தெய்வங்களும்

நடுகல் வழிபாடு இறந்தவர்களுக்குச் செய்யும் வழிபாடாகும். நாயக்க மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் தான் இறந்தவர் வழிபாட்டின் எண்ணிக்கை பெருகியது. இன்றைக்கும் பல கிராமங்களில் இருக்கும் தீப்பாஞ்சம்மன், பச்சநாச்சி அம்மன், சீலைக்காரி அம்மன் போன்ற பெண் தெய்வ வழிபாடுகளும், கருப்பன், பாண்டி, சங்கிலி, சோனை போன்ற ஆண் தெய்வ வழிபாடுகளும் இறந்து போனவர்களின் நினைவாகவெ நடத்தப்படுகின்றன.

இனத்துக்காகவும் ஊருக்காகவும் உயிர்த்தியாகம் செய்த மனிதர்களே வழிபடு தெய்வங்கள் ஆயினர். வன்முறையால் கொல்லப்பட்டதால் இவர்களின் ஆத்மா சாந்தி அடைய வேண்டும் என்பதற்காக இவர்களைத் தெய்வமாக வைத்து அவருடைய இனத்தவரும் ஊர்க்காரர்களும் வழிபட்டு வருகின்றனர். அவ்வாறு வழிபடப்படுபவர்களில் ஒருவனே. மதுரைவீரன். இவன் மக்களின் மனம் கவர்ந்தவனாக இருந்தான். அக்காலத்தில் இத்தகு சிறப்புடைய ஒரு

கதாபாத்திரத்தை ஏற்று நடிக்க எம்.ஜி.ஆர். ஒருவரே சகல வகையிலும் பொருத்தமானவராக இருந்தார்.

இராஜ குடும்பத்தில் பிறந்தவர் என்பதை காட்டும் வகையில் அவரது கட்டுடலும் இளமைத் துடிப்பும் வசீகரச் சிரிப்பும் பளிச்சென்று அமைந்திருந்தது. காவலுக்குப் போகும் கட்டிளங்காளையான இவர் போர்க் கலைகளில் பயிற்சி பெற்றவர் என்பதற்கு ஏற்ப அவருடைய உடல்கட்டும், அவருடைய உடற்பயிற்சியும் கதாபாத்திரத்திற்கு ஏற்ற வகையில் பொருத்தமாக இருந்தது.

இளவரசியியோ காதலிக்கும் போதும் நடனமாடும் பெண்ணைக் காதலிக்கும் போதும் அவர்களுக்குப் பொருத்தமானவராக படத்தில் எம்.ஜி.ஆரின் குறும்புத்தனமான பேச்சும், பொதுநலம் சார்ந்த சிந்தனையும், இரக்க குணமும் அமைந்திருந்தன. இத்தகைய பல காரணங்களால் மதுரை வீரனாக நடிப்பதற்கு முற்றிலும் பொருத்தமானவராக இருந்தார். இப்படத்தின் வெற்றியும் இதனை 100% நிரூபித்தது.



திரைக்கதையும் பெயர்க்காரணமும்

திரைப்படத்தில் முதலில் மன்னருக்குக் குழந்தை பிறப்பதும் பிறகு அந்த குழந்தையை காட்டில் விட்டு செல்வதும் காட்டப்பட்டது. அவனுக்கு வீரன் என்று பெயர் வைப்பதற்கு ஒரு காரணம் சூட்டப்பட வேண்டும் என்பதற்காக திரைப்படத்தில் ஒரு காட்சி இடம் பெறுகிறது. குழந்தை அழுது கொண்டிருக்கும் இடத்தில் ஒரு நாகப்பாம்பு படமெடுத்து ஆடுகிறது. யானையும் அதனருகே தும்பிக்கையை ஆட்டிக் கொண்டிருக்கிறது. ஆனால் குழந்தை இவ்விரண்டையும் கண்டு பயப்படாமல் இருந்ததனால் அவ்வழியே வந்த செல்லியும் அவள் கணவனும் அக்குழந்தையைக் கண்டு மகிழ்ந்து வீரன் என்று பெயர் சூட்டுகின்றனர். அக்குழந்தை ஒரு வீரன் என்று முன்கூட்டியே சொல்லி விட்டதனால் படம் முழுக்க அவன் வீர தீர சூரத்தனம் மிகுந்தவன் ஆகவே காட்டப்பட்டு இறுதியில் அவன் வீரமரணம் அடைகிறான்.

வரலாற்றுச் சாதனைகள்

மதுரை வீரன் படம் பல சாதனைகளை முதன் முதலில் தமிழ்த் திரையுலகில் நடத்தியது. முதன் முதலில் தமிழில் ஒரு கோடி ரூபாய் வசூல் செய்த படம் என்ற பெருமை மதுரைவீரனுக்கு உண்டு. 1937 முதல் 1955 வரை வேறு எந்த படமும் வசூல் செய்யாத சாதனையை மதுரைவீரன் செய்து காட்டியது. 13-4-1956 அன்று கிருஷ்ணா பிக்சர்ஸ் வெளியிட்ட மதுரை வீரன் படம் 42 திரையரங்குகளில் ரிலீசானது. இவற்றில் 31 திரையரங்குகளில் 100 நாட்கள் ஓடியது. பல ஊர்களில் முதன்முதலாக 100 நாள் ஓடிய படம் மதுரை வீரன் தான். ஹரிதாஸ், சந்திரலேகா படங்கள் பெற்ற வசூலை விட

பத்து மடங்கு அதிக வசூலைப் பெற்றது என்று சொல்கிறார்கள்.

மதுரையில் சென்ட்ரல் திரையரங்கில் 180 நாட்கள் ஓடிய படம் முதல் படம் மதுரைவீரன் ஆகும். இப்படத்திற்கு 3 லட்சத்து 67 ஆயிரத்து 686 ரூபாய் வசூல் ஆயிற்று. ஆறுமாதத்தில் இப்படத்தின் மொத்த வசூல் 77 லட்சம் ஆகும். ஒரு வருடத்தில் படத்தின் வசூல் ஒரு கோடியாக உயர்ந்தது.

சென்னையில் முதன் முதலில் நான்கு தியேட்டர்களில் ரிலீஸ் செய்யப்பட்ட படம் மதுரைவீரன் மட்டுமே. காமதேனு சித்ரா பிரபாத் சரஸ்வதி ஆகிய நான்கு தியேட்டர்களில் இப்படம் வெளிவந்தது இவற்றில் பிரசாத் தியேட்டரில் 126 நாட்களும் சரஸ்வதியில் 126 நாட்களும் ஓடியது.

மதுரை வீரன் திருச்சியில் 169 நாட்கள் சேலத்தில் 167 ஒன்று 161 நாள் காஞ்சிபுரத்தில் 154 நாட்கள் வேலூரில்



147 நாட்கள் கோவையில் 147 நாட்கள் நெல்லையில் 132 நாட்கள் ஓடியது. விருதுநகர் கடலூர் விழுப்புரம் கும்பகோணம் கரூர் மன்னார்குடி பழனி பட்டுக்கோட்டை புதுக்கோட்டை திருவாரூர் பரமக்குடி நாமக்கல் பொள்ளாச்சி ஊட்டி விருத்தாசலம் பண்ருட்டி திண்டுக்கல் மயிலாடுதுறை கம்பம் நாகர்கோவில் ஆகிய நாட்களில் ஊர்களில் 97 நாட்கள் ஓடியது. புதுச்சேரியில் 91 நாளும் தூத்துக்குடியில் 88 நாட்களும் ஆத்தூரில் 86 நாட்களும் தென்காசியில் 84 நாட்களும் ஓடியது.

பொருத்தமான நடிக நடிகையர் தேர்வு

மதுரை வீரன் படத்தின் வெற்றிக்கு மற்றொரு காரணம் அதில் நடித்த நடிகர் நடிகையர் கதாபாத்திரத்திற்கு ஏற்ற வகையில் தெரிவு செய்யப்பட்டிருந்தனர் மூத்த கதாநாயகியான பானுமதி இளவரசியாக நடித்திருந்தார் திருவாங்கூர் சகோதரிகள் என்ற பெயரில் நாட்டிய பேரொளி விளங்கிய பத்மினி முதன்முதலாக் எம்.ஜி.ஆருடன் இப்படத்தில் ஜோடி சேர்ந்தார். அவர் இப்படத்தில் மதுரை திருமலை நாயக்க மன்னரின் அரசாங்க நாட்டியக்காரி ஆக நடித்திருந்தார். கொடைப்பண்பில் எம்.ஜி.ஆருக்கு முன்னோடியாக விளங்கிய என் எஸ் கிருஷ்ணனும் அவரது மனைவி டி.ஏ. மதுரமும் இப்படத்தில் எம்.ஜி.ஆரின் வளர்ப்புப் பெற்றோராக நடித்திருந்தனர். இவர்களின் இயல்பான நகைச்சுவை இப்படத்திற்கு வலுசேர்த்தது. டி. எஸ். பாலையா இப்படத்தில் நகைச்சுவை வில்லனாக நடித்திருந்தார் ஓ ஏ கே தேவர் திருமலை நாயக்க மன்னராக நடித்திருந்தார் நாட்டிய நடிகையான இ வி சரோஜா பானுமதியின்

தோழியாக வந்து 'வாங்க மச்சான் வாங்க 'பாட்டுக்கு குழுவுடன் நடனமாடி கைதட்டலைப் பெற்றார். நடிகை சச்சுவின் அக்காவான மாடி லட்சுமி பானுமதிக்குக் குறி சொல்லும் பச்சமலை குறத்தியாக வந்து குறத்திப் பாட்டு பாடி நடனமாடி ரசிகர்களின் பாராட்டைப் பெற்றார் நாட்டியப் பேரொளி பத்மினி இப்படத்தில் நான்கு பாடல்களுக்கு நடனம் ஆடி இருந்தார் அவற்றில் மூன்று மட்டுமே படத்தில் இடம் பெற்றன.

நிறைவு

மதுரை வீரன் படத்தில் ***'ஃபிரேமுக்கு ஃபிரேம்'*** *அதாவது ஒவ்வொரு சட்டகமும்* ***ரசிக்கத்தக்க வகையில் சமன்படுத்தப்பட்ட காட்சியாக இருந்தது****. இயக்குனர் டி ராம்நாத்தின் இத்திறமையைக் கண்ட எம்.ஜி.ஆர். தன்னுடைய சொந்தப் படத்துக்கு அவரையே முதலில் இயக்குனராக இருக்கும்படி கேட்டுக்கொண்டார். பிறகு எம் ஜி ஆரே அப்படத்தை இயக்கும்படி நிலைமை மாறி விட்டது. அதுவும் அவரது திறமையை உலகுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டியது.* ***மதுரை வீரன் படம் எம்.ஜி.ஆர். ஃபார்முலா என்ற ஒரு வடிவமைப்பு உருவாவதற்கு மூல காரணமாக இருந்தது****. பின்னர் வந்த பல படங்கள் இதே பாணியில் வந்து வெற்றி வாகை சூடின. அந்த வகையில் இப்படம் ஒரு முன்னோடி படம் ஆகும். முந்தைய காலத்துப் படமாக இருந்தாலும் பிந்தைய தலைமுறையினரும் ரசித்து பார்க்க கூடிய கதையம்சம் கொண்ட படம் என்பதால் இரு தலைமுறையையும் இணைக்கும் பாலமாக இருந்தது.*

2. மதுரை வீரன் ஓர் இயற்றமிழ் காப்பியம்

குடிமக்கள் காப்பியம் எனப் போற்றப்பட்ட சிலப்பதிகாரம் போல மதுரை வீரன் படமும் ஓர் செந்தமிழ் காப்பியம் ஆகும். நாடு நகர் வருணனை, சிறந்த பாவிகம், தன் நேர் இல்லா தலைவன், நீர் விளையாடல், பூங்கா விளையாடல் என பல காப்பியக் கூறுகளையும் தன்னகத்தே கொண்டது இப்படம். திரைப்படத்தை காப்பியம் என்பது மிகையாகத் தோன்றினும் காப்பியத்துக்குரிய அம்சங்கள் இடம் பெற்றிருப்பதை மறுக்க இயலாது. இரண்டுக்கும் உள்ள ஒரே வேறுபாடு காப்பியம் என்பது செய்யுள் நடையில் இருக்க வேண்டும் திரைப்படம் அவ்வாறு இல்லாமல் செந்தமிழ் உரை நடையில் அமைந்துள்ளது. இது காலத்திற்கேற்ற மொழி நடை மாற்றம் ஆகும். இதனை ஏற்றுக் கொண்டால் மட்டுமே நம்மால் காப்பியங்களை பல்வேறு வடிவில் படிக்க முடியும்.

திரைக்கதையில் கதாநாயகனும் வில்லனும்

மதுரை வீரன் படத்தில் எம்.ஜி.ஆர். தலைமை கதாபாத்திரத்தில் நடித்திருந்தார். அவர் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு மிக்கவராக திமுக கட்சியின் பிரதி பிம்பமாக தமிழினத்தின் முன் மாதிரி

இளைஞனாக நடித்திருந்தார். எதிர்பாத்திரம் [வில்லன்] என்றால் கொமாளிவிள்ளனாக வரும் நரசப்பன் கதாபாத்திரத்தில் டி. எஸ் பாலையா, திருச்சியில் தளபதி பொறுப்பை எம்.ஜி.ஆரிடம் இழந்த பழைய தளபதி இவ்விருவரும் கூட்டாக செய்யும் சதி வேலைகள் எதிர் கதாபாத்திரத்தின் இடையூறுகளாக அமைந்தன. இவர்கள் தவிர அழகர் மழைக் கள்ளர் தலைவனாக நடித்திருந்த சாண்டோ சின்னப்பா தேவரும் இப்படத்தில் எதிர் கதாபாத்திரம் தான். அவரை கடைசி காட்சியில் எம்.ஜி.ஆர். பிடித்துவிடுவார். [மதுரை வீரனாக எம்.ஜி.ஆரும் வில்லனாக டி. எஸ். பாலையாவும் பெறும் முக்கியத்துவம் குறித்து தனியாக ஓர் இயலில் விளக்கப்பட்டுள்ளது].

ஆசைகளே வில்லனாயிற்று

மதுரை வீரன் படத்தில் ஆட்கள் மட்டுமல்ல ஆசைகளும் எதிர் நிலை ஏற்று வீரனுக்கு துன்பம் விளைவித்தன. தகுதியற்ற நபர்களின் பெண்ணாசை வில்லனாக அமைந்தது. நரசப்பன் என்ற கோமாளி பொம்மியின் மீது கொண்ட ஆசை வீரனின் காதலுக்கு எதிராக நின்றது. அடுத்து திருமலை மன்னன் வெள்ளையம்மாளின் மீது கொண்ட காதலும் அரசன் வீரனை மாறு கால் மாறு கை வாங்க உத்தரவு பிறப்பிக்கக் காரணமாக அமைந்தது. திரைக்கதையில் இந்த இரு அம்சங்களும் கதையின் ஆழத்தை அடர்த்தியை மிகுவித்தன. இதுவே இக்கதையின் சிறப்பம்சம். உண்மைக் கதையில் பல்வேறு சமூகக் காரணங்களால் திருமலை நாயக்கர் வீரனை தண்டித்தார். ஆனால் திரைக்கதையில் பெண்ணாசையின் காரணமாக அவன் தண்டிக்கப்

படுகிறான். பதவியாசை காரணமாக தண்டிக்கப் படுகிறான்.

திரைக்கதையின் கனம்

திரைப்படத்தின் கதையமைப்பில் வீரன் சாதியில் தாழ்த்தப்பட்டவனாக இருந்தாலும் அவனைச் சுற்றிலும் அவன் வாழ்க்கையின் ஏற்ற இறக்கங்களை உருவாக்கியவர்கள் அனைவரும் அரசனைச் சேர்ந்தவர்களாக அமைக்கப்பட்டது. இவர்களுடனான போராட்டமே கதையின் தீவிரத்தை மிகுதிப்படுத்தி ரசிகர்களை கதைக்களத்திற்குள் ஈர்த்துச் செல்கிறது. வீரனின் உயர்வை வியந்து போற்ற வைத்தது. அதனால் எம்.ஜி.ஆர். தன்னேரில்லாத் தலைவனாக ஒப்பு உயரவற்ற சிறந்தவனாக மக்கள் மனதில் நிலை பெற்றார். காரணம் இந்தக் கதையும் கதாப்பாத்திரப் படைப்பும் மதுரை வீரன் திரைப்படத்தை இயற்றமிழ் காப்பியம் என்று அழைப்பதற்கு முக்கிய காரணம் ஆயிற்று.

கதாநாயகிகள் இருவர் பெற்ற சம பலம்

தலைமை பாத்திரங்களாக இடம் பெற்ற பெண் கதாபாத்திரங்களின் சிறப்புகளை இனிக் காணலாம். மதுரை வீரன் படத்தில் இளவரசி பொம்மியாக எம் பானுமதியும், மதுரை அரசவை ஆடல் கலைஞராக வெள்ளையம்மாள் என்ற கதாபாத்திரத்தில் நாட்டிய பேரொளி பத்மினியும் நடித்திருந்தனர். இவர்கள் இருவருமே அக்கால கட்டத்தில் ரசிகர்களின் உள்ளத்தைக் கவர்ந்த அவர்களின் விருப்பத்திற்குரிய மிகச் சிறந்த நடிகை ஆவர். ஏற்கனவே வெளிவந்த மலைக்கள்ளன்



படத்தில் எம்.ஜி.ஆர். பானுமதி ஜோடி ரசிகர்களின் அமோக வரவேற்பை பெற்றிருந்தது. மதுரை வீரன் படத்தை தொடர்ந்து எம்.ஜி.ஆர். பத்மினி ஜோடி மன்னாதி மன்னன், ராஜராஜன், விக்ரமாதித்யன் போன்ற பல வெற்றி படங்களில் நடித்ததும் பத்மினி தன்னுடைய திரை உலக வாழ்வை முடித்துக்கொண்டு கணவரோடு சேர்ந்து வாழ்வதற்காக அமெரிக்கா செல்ல முடிவு செய்தபோது, அவர் கடைசியாக நடித்துக் கொடுத்த படம், எம்.ஜி.ஆருக்கு அக்காவின் தோழியாக நடித்தது, எம்.ஜி.ஆருக்கு பாரத் விருது என்ற சிறந்த நடிகர் விருதை வாங்கித் தந்த ரிக்ஷாக்காரன் படம் ஆகும்.

பொம்மியாக பானுமதி

பானுமதி கம்பீரமாக நடிப்பதில் புகழ் பெற்றிருந்தார். மதுரை வீரன் படத்தில் அவர் கோழையும் குணம் கெட்டவனுமான தாய்மாமன்




வேடத்தில் நடித்த டி எஸ் பாலையாவுடன் நடிக்கும் காட்சிகளில் இவருடைய கம்பீரம் வெளிப்பட்டது. எம்.ஜி.ஆருடன் நடிக்கும் காட்சிகளில் இவருடைய பணிவும், பண்பும் நடிப்பில் பிரகாசித்தது. ஆக இந்த படம் அவருக்கு பல பாவனைகளை காட்டி நடிக்கக்கூடிய நல்ல படமாக திறமைகளைக் காட்டக் கூடிய படமாக அமைந்தது.

வீரமான பெண்களை விரும்பிய எம்.ஜி.ஆர்.

பானுமதி மதுரை வீரன் படத்தில் தன்னைச் சிறை எடுத்துச் செல்ல வந்த எம்.ஜி.ஆரை தன் அரண்மனை ஆட்கள் எதிர்க்கும் போது இவரும் கத்தி எடுத்துச் சண்டையிடுவார். எம்.ஜி.ஆர். தன் படங்களில் தன்னுடைய கதாநாயகிகளும் வீரமானவர்களாக இருக்க வேண்டும் என்பதில் மிகுந்தக் கவனம் செலுத்தினார். மகாதேவி படத்தில் சாவித்திரி கத்தி எடுத்து சண்டை போடுவார். அடிமைப்பெண், முகராசி படங்களில் ஜெயலலிதாவிற்குச் சண்டைக் காட்சிகள் உண்டு. நிஜ வாழ்வில் எம்.ஜி.ஆரின் மனைவி ஜானகியம்மா

சிலம்பப் பயிற்சி பெற்றவராக இருந்தார். அடிக்கடி இவரும் அங்கு வளர்ந்த குழந்தைகளுடன் திருப்பதி சாமி முன்பு சிலம்பப் பயிற்சி பெற்றார்.

அண்ணா திமுக தோன்றிய பிறகு லதா எம்.ஜி.ஆருக்கு சரிக்குச் சரியாக நின்று "நல்லவர்களின் லட்சியம் வெல்வது நிச்சயம்" என்ற கருத்தை படம் பார்ப்பவர் மனதில் ஆழமாக விதைக்கும்படி வீர வசனங்கள் பேசி சிறப்பாக நடித்திருப்பார். ஆக எம்.ஜி.ஆர். படங்களில் கதாநாயகிகள் வீரம் மிக்கவர்களாக, துணிச்சல் உடையவர்களாக இருக்க வேண்டும் எனக் கருதி அவர்களின் பாத்திரப்படைப்பை உருவாக்குவதில் எம்.ஜி.ஆர். குறிக்கோளோடு செயல்பட்டார்.



கண்ணகியும் மாதவியும்

பெண்களில் இரண்டு வகை ஒருவர் நேரடியாக மோதுகின்ற துணிச்சல் உடையவர். இன்னொருவர் மறைமுகமாக தாக்கி நன்மை அடைபவர் என்று இரண்டு விதமான அணுகு முறைகளையும் எடுத்துக்காட்டும் வகையில் இவ்விரு கதாபாத்திரங்களும் அமைக்கப்பட்டிருந்தன. மதுரை வீரன் படத்தின் பெண் கதாபாத்திரங்களின் அமைப்பு சிலப்பதிகாரத்தில் வரும் கண்ணகியும் மாதவியும் போல அமைந்திருந்தது. கண்ணகியைப் போல பொம்மியும், மாதவியைப் போல வெள்ளையம்மாளும் இரு வேறு பின்புலத்தில் இருந்து வந்த பண்புடைய உயர் கதாபாத்திரங்களாக படைக்கப்பட்டனர். இதனால் இவ்விரு பெண்களும் மக்கள் மனதில் நீங்கா இடம் பிடித்தனர்.

பொம்மி

மதுரை வீரன் பொம்மியை சிறையெடுத்து திருச்சிக்கு வந்ததும் திருச்சி விஜயரங்க சொக்கநாதரின் அவையில் இவர்களை குற்றவாளிகள் போல நிறுத்தி ஒரு நீசன் அரச குமாரியை அபகரித்துக் கொண்டு வந்து விட்டான் என்று குற்றம் சுமத்தப்பட்ட போது, பானுமதி தன் பங்குக்குத் தானே விரும்பி வந்ததாக அந்த மன்னரிடம் எடுத்துக்கூறி துணிச்சலோடு தன் பக்கத்து நியாயத்துக்காக வாதாடுவார். இந்தக் காட்சியும் இறுதிக்கட்டத்தில் திருமலை மன்னரிடம் அவர் நீதி கேட்கும் காட்சியிலும் அவருக்கு நீளமான உணர்ச்சிமிக்க வசனம் பேசுகின்ற வாய்ப்புகள் இப்படத்தில் வழங்கப்பட்டன.

விஜயரங்க சொக்கநாதரிடம் பொம்மி தன் பக்கத்து நியாயத்தை எடுத்துரைக்கும் போது "திருட்டுப் போனதாக சொல்லப்படும் பொருள் நான் தானே" என்று சொல்லி தான் திருடவில்லை தானே விரும்பி மதுரை வீரனை காதலித்து அவருடன் வந்ததாக அரசனிடம் எடுத்துக் கூறுவார்.

"அவர் என்னை களவாடினார் நான் கேட்டுக் கொண்டதற்கு இணங்க;, எதிர்த்து வந்தோரை விரட்டி அடித்தார் என் வேண்டுகோளுக்கிணங்க,; பட்டத்து இளவரசி நான்,; அவருக்கு உத்தரவிட்டேன்; எய்தவள் நாள் இருக்க கணை மீது குற்றம் சாட்டுவானேன்."

"மன்னா உண்மை இதுதான் என்னை விரும்பினான் நரசப்பன். அவனை நான் ஏற்கவில்லை. வீரனை காட்டி, இவர் தான் எனக்கு ஏற்றவர் என்றேன். அதை அவன் ஏற்கவில்லை. குற்றச்சாட்டுகளை அடுக்குகிறான், இந்த விவகாரத்துக்கு அரசியல் முத்திரை போட்டு இந்த நாடகம் நடத்துகிறான் நியாயத்தை எதிர்பார்க்கிறேன் நீதி உங்கள் கையில்"



என்று சுருக்கமாகவும் தெளிவாகவும் உணர்ச்சிமயமாக பானுமதி பேசும் வசனம் பெண்களின் உள்ளத்தைக் கவர்ந்தது. அந்த கதாபாத்திரம் துணிச்சலான கதாபாத்திரமாக உருவாக்கப்பட்டிருந்த விதமும் பாராட்டப்பட்டது.

இறுதிக்காட்சியில் மாறு கால், மாறு கை வாங்கிய பிறகு பொம்மியும், வெள்ளையம்மாள் வந்து அவனைப் பார்த்து குற்றுயிரும் கொலை உயிருமாக கிடந்து அவன் சாகப் போகும் வீரனைக் கண்டு அழும் போது, திருமலை மன்னர் 'இது சட்டத்தின் தீர்ப்பு' என்று அகம்பாவத்துடன் எடுத்துரைப்பார். அப்போது பொம்மி பேசும் வசனம் உணர்ச்சிகரமான நீண்ட வசனம் ஆகும். இந்த வசனத்துக்கு

"சட்டத்தின் தீர்ப்பு! குற்றமற்ற கோவலனை கொன்றது சட்டத்தின் தீர்ப்பு, அப்போது பாண்டியனின் தலைநகரை பற்றி எரித்தது கற்புநெறி அது தர்மத்தின் தீர்ப்பு; அநீதிக்கு கணவனைப் பலியிட, அழுது தவிக்கிறாள் மனைவி; மீன் கொடி பறந்த ஏ பாண்டிய மண்டலமே! சங்கம் வளர்த்த தங்கத் தாயகமே!, பொங்கிப் புலம்பும் உன் மகளை பார்! பொருமி எழும் உன் சேயைப் பார்! வைகை நதி ஓடி வளம் கொழிக்கும் தாயே! கண்ணகியின் கண்ணீருக்கு பதில் சொன்னாயாமே; கூட மடிந்தாள் கோப்பெருந்தேவி என்று வரலாறு தந்தாயே! நான் சாகத் தயாராக இருக்கிறேன்; ஆனால் தர்மத்தின் பதில் எங்கே? கற்பு மனையாளின் கண்ணீர் நீதியற்ற ஆட்சியை சாய்க்கும் வாள் என்றாயே, எங்கே அந்த வாள்? எங்கே அந்த வாள்?"



என்று கேட்கின்றாள் அதன்பிறகு திருமலை மன்னன் தன் தவறினை உணர்ந்ததும் மன்னிப்பு கேட்கிறான். மன்னிப்பு கேட்டு அவன் அழும்போது மீண்டும் அவனிடம் பேசி அழும் காட்சியில் பானுமதியின் நடிப்பு மிகச் சிறப்பாக அமைந்திருந்தது. பானுமதியின் நடிப்புத் திறமைக்கு ஏற்றதாக அவருடைய முக பாவனைகளை மாற்றி மாற்றி காட்டக்கூடியதாக இக்காட்சி அமைந்திருந்தது. அதற்கு ஏற்றவகையில் கண்ணதாசனும் வசனம் எழுதியிருந்தார்.

"நீதான் மதுரை மன்னனா? வா, ஏன் வந்தாய்? எதற்காக வந்தாய்? கொலை புரியும் காட்சியைக் கண்டு களிக்க வந்தாயா? அக்கிரமத்தை வெற்றிகரமாக நிறைவேற்றி விட்ட ஆனந்தத்தில் ஓடி வந்தாயா? தாவி வந்த குழந்தையின் கன்னத்தை கடித்தாயே,; மனம் திறந்து உண்மையைக் கூறியும் கடும் தண்டனை விதித்தாயே; இப்போது ஏன் வந்தாய்? சாவு எப்படி இருக்கிறது என்று பார்க்க வேண்டுமா? பார் பார் பாவி பார் கண்கெட்ட உன்

ஆட்சியின் பெருமையைக் காப்பாற்ற ஓடிய கால்களை பார் சுற்றி வரும் எதிரிகளை தூளாக்குவேன் என்று கத்தி எடுத்த கைகளைப் பார்; இரத்த வெள்ளத்தில் மிதக்கும் அந்த சுத்த வீரனைப் பார்; மாலையிட்ட மணவாளன் அங்கே ஆலையிட்ட கரும்பாக அவதிப்படும் நான் இங்கே; நீதி எங்கே? நியாயம் எங்கே? நாடாளும் மன்னவனா நீ? நடுநிசியில் கொலை புரியும் கள்வனுக்கும் உனக்கும் என்ன பேதம் போ போ போய் விடு".

என்று வீர வசனம் பேசும் காட்சி பானுமதிக்கு பாராட்டுதல்களை பெற்றுக் கொடுத்தது.

வெள்ளையம்மாள்

மதுரைவீரன் வாழ்வில் இரண்டாவதாக வந்த வெள்ளையம்மாளின், பொம்மி இனி ஏற்றுக்கொள்ள வேண்டிய விதவை கோலத்தை பற்றி கவலைப்படுவதாக அமைந்த ஒரு காட்சியும் குடும்பப் பெண்கள் கணவனை இழந்த பிறகு படும் வேதனைகளை எடுத்துரைப்பதாக அமைந்தது. பெண்களின் துன்பம், துயரம், இயலாமை ஆகியவற்றை எடுத்துரைக்கும் வகையில் அமைந்த இந்தக் காட்சியும் இதில் சிறப்பாக நடித்திருந்த பத்மினியும் பானுமதியும் பெண்களைத் திரையரங்குக்கு ஈர்த்தனர். எம்.ஜி.ஆரின் மீது இருந்த ஈர்ப்பும் இரண்டு பெண்களுமே முன்மாதிரி பெண்களாக அமைக்கப்பட்டிருந்த கதாபாத்திரச் சிறப்பும் இப் படம் பார்க்க வந்த பெண்களை மிகவும் கவர்ந்தது. இதனாலேயே இப்படத்தை பெண்கள் மீண்டும் மீண்டும் திரும்பத் திரும்பப் பார்த்து மகிழ்ந்தனர்.

பத்மினி

நாட்டிய பேரொளி பத்மினி தன்னுடைய நடனத் திறமையை காட்டும் வகையில் பல நடனக் காட்சிகளைக் கொண்ட கதாபாத்திரமான வெள்ளையம்மாள் என்ற கதாபாத்திரத்தை ஏற்று நடித்திருந்தார். இந்த வெள்ளையம்மாள் தேவதாசி குலத்தைச் சேர்ந்த பெண் என்பதால் இராஜ சபையிலும் இடம்பெற்றிருந்தார். மதுரையை ஆண்ட திருமலை நாயக்க மன்னரின் அரண்மனையில் ஆடல் மங்கையாக இருந்தார். மதுரை வீரன் படத்தில் பானுமதியை துணிச்சல்மிக்க இளவரசியாகக் காட்டிய இக்கதை பத்மினியை சாகசம் நிறைந்த பெண்ணாக உருவாக்கியிருந்தது. கள்வர்களைப் பிடிக்க வேண்டிய பணியில் மதுரை வீரனுக்கு உதவும் வகையில் கள்வர் குகைக்கு அவரோடு செல்வதும், மாறுவேடத்தில் சென்று அவர்கள் முன்பு ஆடிப்பாடி அவர்களுக்குச் சொல்ல வேண்டிய கருத்துக்களை நாசூக்காக சூசகமாக பாடல் மூலமாகவே எடுத்துக்கூறுவதுமாக சாகசத் தன்மை வெள்ளையம்மாளுக்குரிய பண்பாகக் காட்டப்பட்டிருந்தது.



கள்ளர்களைப் போல வேடமிட்டு அவர்களைப் போலவே தோளில் பச்சை குத்திக் கொண்டு போய் பகைவனை உறவாடிக் கெடுக்கும் முறையில் அவர்களைக் கண்டுபிடிக்கலாம் என்ற குறுக்கு வழியைக் காட்டியவள் வெள்ளையம்மாள். மதுரை வீரனின் முதுகில் சுருளிமலை கள்ளர்களின் தேள் பச்சை குத்தி விட்டுப் பின்பு இருவரும் மாறுவேடத்தில் அழகர் மலைக்கு சென்று கள்ளர் தலைவன் முன்பு தங்களை சுருளிமலை கள்வர் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள்;, தங்கள் பெயர் சொக்கன், சொக்கி என்று அறிமுகம் செய்து கொள்வார்கள். இக்கதையில் இளவரசி பொம்மிக்கும், ஆடலரசி வெள்ளையம்மாளுக்கு உரிய குணாதிசயங்களில் குறிப்பிடத்தக்க வகையில் வேறுபாடுகள் எடுத்துக் கட்டப்பட்டிருந்தன. இதுவும் ரசிகர்களின் உள்ளத்தை மிகவும் கவர்ந்தது.

சமூகத்தில் ஆடல் மங்கையின் நிலை

வெள்ளையம்மாள் மன்னனின் உடைமை என்பதைச் சித்தரிக்கும் வகையில் மன்னன் அவள்



மீது மோகம் கொள்வதும் அவளை அடைய வேண்டும் என்ற நோக்கத்துடன் இருப்பதும் இதற்காக மதுரை வீரனிடமிருந்து அவளைப் பிரிக்க வேண்டும் என்று கருதி மதுரை வீரனுக்கு மாறுகால் மாறுகை எடுக்க வேண்டும் என்று தண்டனை வழங்குவதும் திருமலை மன்னரின் அதிகாரத் தன்மையாகக் காட்டப்படுகிறது. திருமலை மன்னர் வெள்ளையம்மாள் மீது கொண்டிருந்த மோகத்தை

“என் வீட்டு தோட்டத்து கனி

கைக்கெட்டும் தூரத்தில்

கண்ணை உறுத்திக் கொண்டிருக்கும் பழுத்த பழம்

வெள்ளையம்மாள் வருகிறேன்”

என்று தனக்குள்ளாகவே சொல்லிக்கொள்வார். இவர் வெள்ளையம்மாளின் மீது கொண்ட காதலால் அவசரப்பட்டு மதுரை வீரனுக்கு தண்டனை அளித்து விடுவார். இவளைத் திருமணம் செய்துகொள்ளத் திட்டமிட்டு பணிப்பெண்களை ஏவி அவளுக்கு அலங்காரம் செய்யச் சொன்னபோது வெள்ளையம்மாள் ஒரு கத்தியை எடுத்து தன்னைக் குத்திக்கொண்டு சாக வேண்டும் என்ற முடிவுக்கு வருவாள்.

“சாகப்போகும் எனக்கு சாந்தி தரப்போகிறது இந்தக் கத்தி, சாயப்போகும் என் உடலுக்கு பாதை திறந்து வைக்கப் போகிறது இந்த கத்தி, வாழ்விலும் சாவிலும் நீங்களே துணை என்று இருந்தேன், வாழ்வுக்கு நீங்கள் இல்லை சாவுக்கு துணைபுரிய இதோ கத்தி வந்திருக்கிறது. எது எனக்குத் துணையாக இருந்தாலும் அதுதான் நீங்கள் அதுதான் நீங்கள்”.



என்று தன் மனதிற்குள் மதுரை வீரனை நினைத்து பேசிக்கொண்டிருப்பாள். அப்போது பணிப்பெண் ‘முடியாது நான் உங்களை சாக விடமாட்டேன்’ என்று வெள்ளையம்மாளைத் தடுக்கும்போது வெள்ளையம்மாள் கூறும் பதில் அவளுடையத் தீராக் காதலை, அவளுடைய வாழ்வின் சோகத்தை அவள் பிறப்பின் சிக்கலை எடுத்துக் கூறுவதாக அமைந்திருக்கும்.

“நீ என்னை சாக விடமாட்டாய்.

உன் மன்னன் என்னை வாழ விட மாட்டான்

சிறகொடிந்த பறவை போல நான் துடிக்க வேண்டும்;

தீப்பட்ட மலர் போல நான் கருக வேண்டும்

அப்படித்தானே, அடிப்பாவி உனக்கு நான் என்ன தீங்கிழைத்தேன்

என்னை விடு, என்னை விட்டுவிடு,

விடு விடு போ வெளியே, வெளியே போ”

என்று சொல்லிவிடுவாள். பொதுவாக தேவதாசி குலத்தைச் சேர்ந்த பெண்கள் மன்னரின் விருப்பத்தை நிறைவு செய்து அதனால் கிடைக்கும் பொன்னையும் பொருளையும் கொண்டு காலம் முழுக்க ஆடம்பரமாகவும் சிங்காரமாகவும் வாழவே விரும்புவார்கள். ஆனால் அவர்களில் இருந்து முற்றிலும் வேறுபட்டவளாக வெள்ளையம்மாளின் கதாபாத்திரம் படைக்கப் பட்டிருக்கும். வெள்ளையம்மாளின் கதாபாத்திரம் ஏறத்தாழ மாதவியின் கதாபாத்திரத்தை போல இருக்கும்.

வெள்ளையம்மாள் வீரனிடம், தான் அரசனிடம் சிக்கிக் கொண்டு இருப்பதையும், அவனிடம் இருந்து வெளியேற இயலாததையும் எடுத்துக் கூறி காதலைப் பெற முயலும் போது,

“காட்டு முல்லை, கரையோரத்து ரோஜா, தடாகத்தில் தாமரை இவைகளை யார் வேண்டுமானாலும் பறிக்கலாம்”

என்று தேவ தாசி குலத்தில் பிறந்த தான் ஒரு பொதுப் பொருள் பொதுமகள் என்ற நிலையை எடுத்து உரைப்பாள்.

“ஆனால் அதிகாரத்தில் இருப்பவர்கள் வேலி போட்டு விட்டால் மலர் மறுக்கவா முடியும். அரசாங்கம் எனக்கு வேலி போட்டு விட்டது. நீங்கள் யார் நான் யார்” .

என்று தன்னுடைய இயலாமையை எடுத்துரைப்பாள். அப்போது வீரன் வெள்ளையம்மாளின் மீது கொண்ட இரக்கம் கொண்டு அவளைப் பாதுகாக்க வேண்டும் என்ற கடமை உணர்ச்சியால் உந்தப்பட்டு,



“நீ யார்?

இன்று முதல் இப்போது முதல் என் மனைவி,

நீ என் மனைவி. வெள்ளையம்மா என் மனைவி”

என்று வீரன் கூறுவான். இவ்வாறு இவர்கள் வாழ்வில் இணைந்த நிகழ்ச்சி காதலால் ஏற்பட்டது என்று கூறுவதைவிட வீரனின் கடமை உணர்ச்சியால் ஏற்பட்டது என்று கதாசிரியர் இந்த இரண்டாவது திருமணத்தை நியாயப்படுத்தி இருப்பார்.

மதுரை வீரன் பாடத்தைப் பார்த்த பெண்களுக்கு கதை ஏற்கெனவே தெரிந்திருந்தாலும் அவர்கள் வெள்ளையம்மாளின் நிலையை எண்ணி பரிதாபப்பட்டனரே தவிர இவள் பொம்மியின் வாழ்க்கையில் குறுக்கே புகுந்தவள் என்று எண்ணி இவள் மீது கோபம் கொள்ளவில்லை. பெண்களே பரிதாபப்பட்டு அனுதாபப்படும் அளவுக்கு இவளுடைய கதாபாத்திரத்தை இரக்கத்துக்கு உரியதாக கண்ணதாசன் திரைக்கதை அமைத்திருந்தார். இதனால்

பொம்மியும் வெள்ளையம்மாளும் பெண்களின் உள்ளத்தை கவர்ந்தவர்கள் ஆனார்கள்.

இறுதிக்காட்சியில் வெள்ளையம்மாள், பொம்மிக்காக இரக்கப்படும் காட்சி இவளுடைய கதாபாத்திரத்தை உயர்த்திப் பிடித்தது. வெள்ளையம்மாள் திருமலை மன்னரைப் பார்த்து,

“இல்லை கண்ணீரை துடைக்க மனமில்லை,

கவலையை தீர்க்க மனம் இல்லை

நீ மன்னன் அல்ல மனித இதயமே இல்லாதவன்.

கொன்ற பிறகு உண்மை தெரிந்தால் உயிரைக் கொடுக்க முடியுமா உன்னால். சொல் மன்னா சொல்லிவிடு,

சொல்ல மாட்டாய் நீ திட்டமிட்டு கொலை செய்கிறாய்

உன்னிடம் கருணையை எதிர்பார்த்தேன்

பேதை நான். நீ கொல்வது வீரனை மட்டும் அல்ல



திருமலை மன்னா

அவனது மனையாளை கொல்கிறாய்,

அவரை மனதார காதலித்த என்னை கொல்கிறாய்,

பாடும் வைகையின் புகழை கொல்கிறாய்,

செந்தமிழ் நாட்டின் பண்பைக் கொல்கிறாய்,

சிங்காதனத்தின் பெருமையை கொல்கிறாய்,

இன்னும் என்ன மன்னன் பதவி

சாக்காட்டிலே அரசு நடத்து,

எலும்பு கூட்டில் சிங்காதனம் அமைத்துக் கொள்,

போர்க்களத்திலே சாக வேண்டியவரை கொலைக்களத்தில் கொள்கிறாயே

இன்று முதல் உன் மனக்களத்திலே போர் ஆரம்பம்

மறக்காதே மன்னா மறக்காதே''

என்று பேசி விட்டு அரண்மனையை விட்டுப் போய்விடுகிறாள். அதன்பிறகு அசரீரி கூற்றாக மீனாட்சியின் குரலைக் கேட்டுத் திருமலை மன்னர் தான் வழங்கிய தீர்ப்பு தவறு என்று தெரிந்து தண்டனை நிறைவேற்றப்படும் இடத்திற்கு விரைந்து வருகிறார். ஆனால் அதற்குள் தண்டனை நிறைவேற்றப்பட்டுவிடுகிறது.

திருமலை மன்னனைப் பார்த்து அப்போது வெள்ளையம்மாள் நீதி நெறி வழுவா மன்னர்களின் வரலாறுகளைச் சொல்லி அவன் செய்த குற்றத்தை சுட்டிக்காட்டுகிறாள்.

“வீடு தட்டி வந்த கள்ளன் யார் என்று கேட்க, தட்டியவன் நானே என்று வெட்டிவீழ்த்தி கொண்டான் கையை பொற்கை பாண்டியன், குற்றமற்ற கோவலனைக் கொலை செய்தோம் என்பதை உணர்ந்ததும் சிங்காதனத்திலிருந்தே வீழ்ந்து உயிர்விட்டான் பாண்டியன் நெடுஞ்செழியன், கன்றை கொன்றான் மகன் என்று கேட்டதும் அவனைத் தேரூர்ந்து கொன்றான் சோழ மன்னன், கற்பு நிறைந்த மணிமேகலையை கெடுக்க முயன்றான் மகன் என்று தெரிந்ததும் ஊரார் கொன்றுவிட்டார்களே அவனை நான் அல்லவா கொன்றிருக்க வேண்டும் என்று நீதி முரசெழுப்பினான் பூம்புகார் சோழன்; ஏன் ஆண்டி முதல் அரசர் வரை ஒரே நீதி வழங்கிய மூவேந்தர் பரம்பரை, அந்த சிங்காதனத்திலே நீ அந்த சிங்காதனத்திலே நீ”.

அங்கு வந்ததும் திருமலை மன்னர், மனம் வருந்தி தனது தவறை உணர்ந்து புலம்புகிறார்.

“பிறழாத நீதி பிறண்டது

வளையாத செங்கோல் வளைந்தது

என்னை கெடுத்துவிட்டார்கள் சண்டாளர்கள்

என்னை மன்னித்து விடுங்கள்”

என்கிறார். அதற்கு வெள்ளையம்மாள்”,

“மன்னிப்பு மன்னிப்பு

வானகமே வையகமே

வளர்ந்து வரும் தாயகமே

ஆராய்ச்சி மணி கட்டி ஆண்டிருந்த தென்னகமே



போர்க்களத்தில் சிரிக்கின்ற பொன் மதுரை மண்டலமே

மறையப் போகிறது ஒரு மாபெரும் ஜீவன்

மன்னிப்பு கேட்கிறார் திருமலை மன்னன்

மாபாதகம் தீர்க்க மண்டியிடுகிறார் திருமலை மன்னன்

மன்னியுங்கள் மன்னியுங்கள்

மன்னா போ அவர் காலில் விழு புரண்டு அழு,

கண்ணீரால் உன் களங்கத்தை கழுவு போ போ போ''

என்று அவனை விரட்டுகிறாள். மன்னரோடு நீதிக்காக போராடும் காட்சி பொம்மிக்கு திருச்சி மன்னரிடமும், வெள்ளையம்மாளுக்கு மதுரை திருமலை மன்னரிடமும் கிடைக்கின்றது.

பெண்களின் நீதிக்கான போராட்டம்

வீடாயினும் நாடாயினும் ஒரு பிரச்னைக்கான தீர்வை ஆண் மட்டுமே தேட வேண்டியதில்லை அதில் பெண்களுக்கும் சம பங்கு உண்டு என்ற

பொறுப்புணர்ச்சி இந்த பெண்கள் மூலமாகக் காட்டப்படுவதால் பெண்களின் முக்கியத்துவம் உணர்த்தப்படுகிறது. பெண்களும் அதனை வரவேற்றனர். இரண்டு பெண் கதாபாத்திரங்களும் மதுரைவீரன் மீது கொண்டிருந்த தன்னுடைய காதலுக்காக இரண்டு மன்னர்களிடம் தனித்தனியாகப் போராடி நீதி கேட்கின்றனர்.

பொம்மி, வெள்ளையம்மா என்ற இரண்டு கதாபாத்திரங்களும் சம தகுதியுடன் மிகச்சிறப்பாக படைக்கப்பட்டு இருந்தன. இதனால் பானுமதி பத்மினி ஆகிய இரண்டு நடிகைகளுக்கும் சமவாய்ப்பு நடிப்புக்கும், வசனம் பேசுவதற்கும் வழங்கப்பட்டிருந்தது. பாடல் காட்சிகளுக்கும் வழங்கப்பட்டிருந்தது. அதனால் இருவருமே ரசிகர்களால் மிகவும் விரும்பப்பட்ட ரசிக்கப்பட்ட நல்ல கண பரிமாணத்துடன் கதாபாத்திரம் அமைக்கப்பட்டிருந்தால் படம் தொய்வில்லாமல் சமபலத்துடன் கதாநாயகனுக்கும் கதாநாயகிக்கும் இடையே சம பலத்துடன் இருந்தது. இந்த கதாபாத்திர அமைப்பும் உருவாக்கமும் சம பலமும் இப்படத்திற்கு காப்பியத் தகுதி அளித்தது.

நிறைவு

மதுரை வீரன் திரைக்கதையும் கதாபாத்திர அமைப்பும் வசனங்களும் சிறப்பாக அமைந்து இப்படத்துக்கு இயற்றமிழ்க் காப்பியம் என்ற தகுதியை அளித்தன.

3. மதுரை வீரனில் இசைத்தமிழ்

எம்.ஜி.ஆர். தனது திரைப்படங்களை முத்தமிழ்ச் சுவை நிரம்பிய கலைப் பொக்கிஷங்களாகவே படைத்தார். இசையில் அதிக ஈடுபாடும் இசை எல்லோருடைய இதயத்தையும் இளக்கும் என்ற உண்மையையும் தெரிந்துகொண்ட எம்.ஜி.ஆர். தனது படத்தில் இசைப்பாடல்களுக்கு அதிக முக்கியத்துவம் அளித்தார். அவர் இசை அமைப்பாளரிடம் மெட்டுக்களை போட்டுக் காட்டச் சொல்லி கேட்டு தானே மெட்டுக்களை முடிவு செய்து பின்னர் பாட்டு எழுதி வாங்கியதும் உண்டு. **பல மெட்டுக்களில் சிலவற்றை தெரிவு செய்து அவற்றை கலந்து மாண்டேஜ் முறையில் மிக்சிங் செய்ததும் உண்டு என்பதை இசையமைப்பாளர்கள் பேட்டிகளின் வாயிலாக அறிகிறோம்.** சில பாடல்களுக்கு எண்பதுக்கும் அதிகமான மெட்டுக்களை போட்டு காட்டியிருக்கின்றனர். மெட்டுக்களை கேட்டு நினைவில் இருத்தி அவற்றில் சிலவற்றைத் தெரிவு செய்யும் திறமையும் இசையறிவும் எம்.ஜி.ஆருக்கு இருந்ததாலும் சிறு வயதில் அவர் முறைப்படி பாரம்பரிய சங்கீதம்

கற்றிருந்ததாலும் அவருக்கு இசை பற்றிய அறிவும் தெளிவும் மக்கள் ரசனை குறித்த அனுபமும் நிறைய இருந்தது. இதுவே அவரது படங்களில் பாட்டுகள் சிறப்பிடம் பெற்றமைக்கு முக்கிய காரணம் ஆகும். இசைத்தமிழில் படிப்பறிவும் பட்டறிவும் உடைய அறிஞர் எம்.ஜி.ஆர். தனது அறிவையும் அனுபவத்தையும் சாறாகப் பிழிந்து தமிழக மக்களின் செவிகளில் இன்பத்தேன் பாய்ச்சினார்.

இசைக்கதம்பம்

மதுரை வீரன் படத்தில் பாடல்கள் மிகச் சிறப்பாகவும் ரசிகர்களின் மனதைக் கொள்ளை கொள்ளும் வகையிலும் அமைந்திருந்தன. இப்படம் பகுத்தறிவுப் பிரச்சாரப் படமாக, ஜாதிபேதம், வர்க்கபேதம் ஆகியவற்றை எதிர்க்கும் படமாக அமைந்து இருந்தாலும் இப்படத்தில் எல்லா வகையான பாடல்களும் இடம்பெற்றிந்தது குறிப்பிடத்தக்கது. மதுரை வீரனில் மூன்று பக்தி பாடல்கள் இடம் பெற்றன. குழு நடனம் தனி நடனம் என இரண்டு நடனப் பாடல்களும், ஒரு கனவு காதல் பாட்டும், இரண்டு கேலிப் பாட்டுகளும்ம் இடம்பெற்றன.

பக்திப் பாடல்கள்

மதுரை வீரன் படத்தில் பானுமதி தன் சொந்தக் குரலில் பாடிய தேவி வழிபாட்டுப் பாடல், குறத்தி குறி சொல்லும் காட்சியில் முருகன் மற்றும் ஜக்கம்மாவை வணங்கும் பாடல் மற்றும் பத்மினி ஆடிப் பாடும் திருவிளையாடல் புராணக் கதைகளை

விவரிக்கும் பாடல் என மூன்று பாடல்கள் இடம்பெற்றன.

பானுமதி எம்.ஜி.ஆரை நினைத்து அவருக்கும் தனக்குமான காதல் நிறைவேறாதோ என்ற கவலையில்

“அவர்க்கும் எனக்கும் உறவு காட்டி

அருள் புரிந்ததும் கதையா”

எனத் தொடங்கும் பாடலைதன் சொந்தக் குரலில் பாடினர். , மாடி லட்சுமி குறத்தியாக வந்து பொம்மிக்கு குறி சொல்லும் போது குறத்தி குறி சொல்லும் பாடலாக

“கொல்லிமலை குன்று தோறாடும்

குமர வடிவேலன்

குமர வடிவேலன்

எங்கள் குறவர் குலக்

கடவுள் தன்னை கூப்பிடுவேன் அம்மே”

எனத் தொடங்கும் பாதலைப் பாடி நடனம் ஆடுவார்.

வெள்ளையம்மாளாக பத்மினி அறிமுகமாகும் காட்சியில் மதுரையில் சிவபிரான் நடத்திய திருவிளையாடல்களை விளக்கும் வகையில்

“ஆடல் காணீரோ

விளையாடல் காணீரோ

திருவிளையாடல் காணீரோ



பாடல் மதுரையில் ராஜ கம்பீர

பாண்டியனாம் எங்கள்

ஆண்டவன் திருவிளையாடல் காணீரோ''

என்ற பாடலும் இடம்பெற்றன.

பானுமதியின் பாடல் வரலாறு

பொம்மிக்கும் அவள் தாய்மாமன் நரசப்பனுக்கும் திருமணம் பேசி முடித்து திருமண வேலைகள் நடந்து கொண்டிருக்கிறது. அவள் தான் காதலித்த மதுரைவீரனோடு திருமணம் நடைபெறாதோ என்று ஏங்கி மனம் வருந்தி இறைவியிடம் அழுது புலம்பும் பாடலாக ஒரு பாடல் இடம் பெற்றது.

''அவருக்கும் எனக்கும் உறவு காட்டி

அருள் புரிந்ததும் கதையா

நினைத்து நினைத்து மகிழ்ந்து நாங்கள்

நேசம் கொண்டதும் கனவா?



இணைக்கும் காதல் இருவர் வாழ்வை

பிரிப்பதே உந்தன் செய்யலா

மணக்க மணக்க மலர்ந்த மலரை

சிதைப்பதே உந்தன் தொழிலா ?

அணைக்கும் அன்னை நீயே என்று

அகிலம் சொல்வதும் தவறா

துடிக்கத்துடிக்க எங்கள் அன்பை

பிரிப்பதே உந்தன் சதியா"

என்று தேவியைப் பார்த்து பொம்மி கேள்வி கேட்டுப் பாடுவதாக அமைந்த பாடல் பலரது வாழ்விலும் பொருந்தக்கூடியதாக இருந்து காதல் தோல்வியின் கன பரிமாணத்தை உணர்த்திற்று.

பானுமதி பாடிய அவர்க்கும் எனக்கும் உறவு காட்டி என்ற பாடல் 1956 புத்தாண்டு அன்று வெளிவந்த மதுரை வீரன் படத்தில் இடம் பெற்றாலும் உண்மையில் அந்தப் பாடல் முதலில்

எழுதப்பட்டது இல்லற ஜோதி என்ற படத்துக்காக ஆகும். 1954 ஆம் ஆண்டு ஏப்ரல் 9 ஆம் தேதி வெளிவந்த இல்லற ஜோதி என்ற படத்திற்கு கவிஞர் கண்ணதாசன் ஒரு பாடல் எழுதி இருந்தார். அப்பாடல் வருமாறு,

“உனக்கும் எனக்கும் உறவு காட்டி

உலகம் சொன்னது கதையா

நினைத்து நினைத்து மகிழும் விதத்தில்

நேசம் கொண்டது கனவா

இனிக்க இனிக்க கவிதை பேசி

இருந்ததெல்லாம் கதையா

எடுக்க எடுக்க குறைவில்லாமல்

வளர்ந்தது எல்லாம் கனவா

சிரித்து சிரித்து மலர்ந்த முகத்தை

சிவக்க வைத்ததும் கதையா

வடித்து வடித்துக் கொடுத்த யாவும்

வாய் புகன்றதும் கனவா “

என்ற இப்பாடல் சில வேறுபாடுகளோடு மதுரை வீரன் படத்தில் மீண்டும் இடம் பெற்றது. இவ்விரண்டு பாடல்களையும் எழுதியவர் கவிஞர் கண்ணதாசன்;, தேஷ் ராகத்தில் இசை அமைத்தவர் ஜி ராமநாதன்.

‘அவர்க்கும் எனக்கும் உறவு காட்டி அருள் புரிந்ததும் கதையா’ என்ற பாடல் தேஷ் ராகத்தில் அமைந்த பாடல் ஆகும். இப்பாடல் இந்த ராகம் பல

எம்.ஜி.ஆர். பாடல்களில் இடம் பெற்றுள்ளது. இதற்கு முக்கிய காரணம் இந்த ராகம் ஒரு உற்சாகமான ராகம் ஆகும். ஆனால் மதுரை வீரன் படத்தில் சோகமான பாடலுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. எம்.ஜி.ஆர். படங்களில் மகாதேவியில் வந்த

"சேவை செய்வதே ஆனந்தம் பதி

சேவை செய்வதே ஆனந்தம்"

என்ற பாட்டிலும் இந்த ராகமே இடம்பெற்றது. நாடோடி படத்தில்

"அன்றொரு நாள் இதே நிலவில்

அவர் இருந்தார் என் அருகே"

என்ற பாட்டிலும்

"இதுதான் முதல் ராத்திரி அன்பு

காதலி என்னை ஆதரி"

என்று ஊருக்கு உழைப்பவன் படத்தில் வரும் பாட்டிலும் இந்த தேஷ் ராகம் இடம்பெற்றது.

மதுரை வீரன் படத்தில் இப்பாடல் முடியும் தருணத்தில் எம்.ஜி.ஆர். பொம்மியின் பூஜையறைக்குள் வந்து அவளைச் சிறையெடுத்துச் சென்று விடுவார். எதிர்த்து வந்த வீரர்களை எம்.ஜி.ஆரும் பொம்மியும் எதிர்த்து சண்டையிட்டு வெளியேறுவதாக இக்காட்சி சிறப்பாக அமைக்கப்பட்டிருக்கும். இக்காட்சியில் பானுமதியும் வாள் ஏந்தி சண்டை போடுவார். இது கதாநாயகியின் வீரத்தை, துணிச்சலை காட்டுவதற்கான ஒரு காட்சியாக அமைந்திருக்கும்.

குறத்திப்பாட்டு

சிற்றிலக்கியங்களில் குறவஞ்சி என்பது ஒருவகையாகும். குறவஞ்சி இலக்கியத்தில் குறத்தி குறி சொல்வாள் அவர் குறி சொல்லும் போது அந்த பாட்டுடைத் தலைவனின் பெருமைகளை எடுத்துச் சொல்வதாக பாடல்கள் இரண்டு வரிக் கண்ணிகளாக அமைந்திருக்கும். இதே பாணியை பரத நாட்டியத்திலும் பின்பற்றி ஒரு குறத்திப் பாட்டு அமைப்பது வழக்கமாக இருந்தது. அக்காலத்தில் பல திரைப்படங்களிலும் இளவரசிக்கு குறி சொல்வதாக ஒரு குறத்திப்பாட்டு இடம்பெற்றது.

நிலத்தின் தெய்வமும் குலத்தின் தெய்வமும்

மதுரை வீரன் படத்தில் இடம்பெற்ற குறத்திப்பாட்டு மிகுந்த வரவேற்பை பெற்றது. இப்பாட்டில் மாடி லட்சுமி ஆடி இருந்தார். இவர் நடிகை சச்சு வின் அக்காள் ஆவார். இப்பாடலில் முருகனையும் பின்பு குறத்தி தன்னுடைய குலதெய்வமான நாயக்கர் வணங்கும் ஜக்கம்மாவையும் பாடுவதாக அமைந்திருந்தது. இப்பாடலில் இறைவனை வணங்கும் வரிகளாக,

“குன்று தோறாடிவரும் குமர வடிவேலன்

குமரவடிவேல், எங்க

குறவர் குல கடவுள் தன்னை

கூப்பிடுவேன் அம்மே”

என்று முருகனை அழைத்து பாடி வணங்கி குறி சொல்லத் தொடங்குகிறாள்.

“கொல்லிமலை மீதில் தெய்வம்
புள்ளி மயில் வாகனன் - எங்க

வள்ளி மணவாளன்

குறி முகத்தில் எதிரில் வந்து

அருள் புரிவான் அம்மே''

என்ற சரணம் முருகன் குறிஞ்சி நிலத்தலைவன் என்பதை உறுதி செய்கிறது. அவன் குறிஞ்சி எனப்படும் மலைகளின் தலைவனாக இருப்பதனால் அவனுடைய அறுபடை வீடுகளில் திருச்செந்தூர் தவிர மீதி ஆறும் குன்றுகளாகவே உள்ளன. திருச்செந்தூரையும் அங்கு கடலுக்குள் இருக்கும் மகேந்திரமலையைச் சுட்டிக்காட்டி அங்கும் அவன் குன்றில் இருக்கும் குமரன் தான் என்பாருமுளர். . குறிஞ்சி நிலத்து மக்களான் குறவர்களின் நிலத்தெய்வமாக முருகன் இருப்பதால் குறத்தி பாட்டில் அவள் முதலில் குமரனை அழைத்து வணங்குகிறாள். பிறகு தன் குலதெய்வமான ஜக்கம்மாளிடம் குறி சொல்லுதல் சரியாக அமைய வேண்டும் என்று வணங்கி அழைக்கிறாள்.

''ஒன்பது கம்பளம் நம்பி வணங்கிடும்

ஜக்கம்மா தேவி ஜக்கம்மா''



என்று தேவியை அழைத்து வணங்கி பிறகு குறியைத் தொடங்குகிறாள்.

"தங்க ஊராளும் ராஜகுமாரி நீயம்மா"

என்று குறி கேட்கும் பொம்மியை 'நீ ஒரு ராஜகுமாரி' என்று மிகச் சரியாக அடையாளம் கண்டு தெரிவிக்கிறாள்.

பொம்மி ஒருவன் மீது காதல் கொண்டிருப்பதையும் அவன் சிறந்த வீரன் என்பதையும் குறத்தி சொல்கிறாள். பொம்மி காதல் கொண்டிருக்கும் வீரன் அவளை ஒரு ஆபத்து வேளையில் தொட்டு தூக்கி காப்பாற்றியவன் என்ற உண்மையையும், பொம்மியிடம் எடுத்துச் சொல்லும்போது பொம்மி அந்த குறியை நம்பத் தொடங்குகிறாள்.

"அன்பன் ஒருவன் அழகியின் மேலே

ஆபத்தான நேரத்திலே

அங்கம் தொட்டுப் காத்ததுண்டா

அம்மே சொல்லு முன்னாலே

இன்பம் காணப் போகிறாய் நீ

இனிமேல்தான் அவனாலே"

என்று கேட்டவள் தன்னுடைய குறி சரியா என்ற கேள்வியும் கேட்கிறாள்.

அவளது தாய் மாமன் நரசப்பன் இவர்களின் காதலுக்கு இடையூறாக இருப்பதனை எடுத்துக் கூறுகிறாள். அப்போது எம்.ஜி.ஆரைப் பற்றி

கருணையோடு வந்த காளை

காண்பதற்கு ஏழை

என்று குறிப்பிட்டுவிட்டு, நரசப்பனை

இடையிலே மூர்க்கன் ஒரு கோழை

முடிபோட்டு ஏய்க்கிறான் ஆளை

என்று பாடி அந்த சரணத்தை முடித்தவள், அடுத்தபடியாக

''ஆளை ஏய்க்கிறவன்

வாழ மாட்டான்,

அந்த ஆணழகன்

அதுக்கெல்லாம் அஞ்ச மாட்டான்''

என்று பாடும்போது உலக நீதியை ஏய்க்கிறவன் அதிகநாள் வாழ மாட்டான்.

''ஏய்ப்பவருக்கே காலம் என்று எண்ணி விடாதே

பொய் எத்தனை நாள் கை கொடுக்கும் மறந்து விடாதே''

என்று பின்னர் நேற்று இன்று நாளை படத்தில் எம்.ஜி.ஆர். பாடியது போல தீமை செய்பவனுக்கு அதிக நாள் வாழ்க்கை இல்லை. என்ற கருத்து ஆரம்பம் முதலே எம்.ஜி.ஆர். பாடல்களில் வலியுறுத்தப்படுகிறது.

வீரன் அழகும் துணிவும் உடைய ஆணழகன்; அவன் நரசப்பனின் வஞ்சனையான செயல்களுக்கு எல்லாம் அஞ்ச மாட்டான் என்ற ஒரே வரியில்

தெளிவாக குறத்தியால் எடுத்துரைக்கப்படுகிறது. இதற்குப் பிறகு குறத்தி பொம்மிக்கும் வீரனுக்கும் திருமணம் நடக்கும், ஆனால் அதற்கு இடையே சில இடையூறுகளும் வரும் என்பதையும் சொல்கிறாள். நிறைவாக, எம்.ஜி.ஆரின் ஹீரோ பிம்பத்தை நிலைநிறுத்தும் வகையில் கடைசி சரணத்தில் அவரை ஆனை என்றும் சிங்கம் என்றும் இப்பாடல் பாராட்டுகிறது. “ஆனைமலை மேலே அணிலுக்குத்தான்

ஆணை மலை மேலே

அணிலுக்கு நீ கண்ணி வச்சே

அணிலுக்கு நீ கண்ணி வச்சே

அணில் விழும் கன்னியிலே

ஆனை விழ போகுதம்மா

சென்னிமலை மேலே

சிட்டுக்கு நீ கண்ணி வச்சே

சிட்டுக்கு நீ கண்ணி வச்சே

சிட்டு விழும் கன்னியிலே

சிங்கம் விழ போகுதம்மா”

என்று பாடலைக் குறத்தி பாடி முடிக்கின்றாள். இப்பாட்டில் எம்.ஜி.ஆரின் பிம்பத்தை தக்க வைக்கவும் உயர்த்தவும் ஆணழகன், யானை, சிங்கம், கருணையோடு வந்த காளை போன்ற தொடர்களை பாடலாசிரியர் இயற்றியுள்ளார். இவ்வருணனை வரிகள் ரசிகர்களின் மனதில் எம்.ஜி.ஆர். அழகும் வீரமும் ஒருங்கே பெற்றவர் என்ற எண்ணத்தை ஆழமாக பதித்து விட்டன.

பரதநாட்டிய பாடல்

திருச்சி மன்னரால் திருமலை மன்னரிடம் கள்ளர்களைப் பிடிக்கும் பணிக்காக வீரன் அனுப்பப்பட்டதும் அவன் மதுரைக்கு வந்து மன்னரை சந்திக்கின்றான். அப்போது மன்னர் அவனை சிற்ப சாலைக்கு அழைத்து வருகிறார். அங்கு சிற்பத்துக்கு 'மாடலாக' அமர்ந்திருக்கும் ஆடல் மங்கை வெள்ளையம்மாவை அறிமுகம் செய்கிறார். 'வெள்ளையம்மாவின் நடனத்தை பார்த்ததில்லையே' என்று வீரனிடம் கேட்டு விட்டு அவளை நடனம் ஆடும்படி சொல்கிறார். வெள்ளையம்மாவாக நடித்திருக்கும் பத்மினி மதுரையில் சிவன் நடத்திய திருவிளையாடல்களில் ஒன்பதை மட்டும் பாடலாகப் பாடி ஆடுகிறார். இப்பாடல்

"ஆடல் காணீரோ

விளையாடல் காணீரோ

திருவிளையாடல் காணீரோ



பாடல் மதுரையில் ராஜ கம்பீர

பாண்டியனாம் எங்கள் ஆண்டவன்

திருவிளையாடல் காணீரோ''

என்று தொடங்குகிறது. முதலில் பிட்டுக்கு மண் சுமந்து பிரம்படி பட்ட கதை விரிவாக ஆடி காட்டப்படுகிறது. அதன்பிறகு நாரைக்கு முக்தி கொடுத்தது; நாகத்தை வதைத்தது,; நக்கீரரின் புகழை ஊரறிய செய்தது, வரகுண பாண்டியருக்கு இங்கிருந்தபடியே சிவலோகம் காட்டியது, வலை வீசி மீன் பிடித்த படலம், கல் யானைக்கு கரும்பு ஊட்டிய படலம், வளையல் விற்பவராக வந்து செட்டியின் பெண்களின் நிறையழித்த படலம் என ஒன்பது கதைகள் வரிசையாக சுருக்கமாக ஓரிரு வரிகளில் பாடி பத்மினி ஆடுகின்றார். அவருடைய அற்புதமான நடனம் ரசிகர்களுக்கு விருந்தாக அமைந்தது.

இப்படத்தில் இன்னொரு பாடலும் பத்மினி நடனம் ஆடி இடம்பெற்றிருந்தது. ஆனால் எம்.ஜி.ஆர். திமுகவில் சேர்ந்து விட்ட காரணத்தினால் புராண கதைகளின் பாடல் தன்னுடைய படங்களில் இடம் பெறக் கூடாது என்பதில் உறுதியாக இருந்ததாள் படத்தில் அப்பாடலும் நடனக் காட்சியும் இடம் பெறவில்லை. . திருவிளையாடல் காணீரோ பாடல் மதுரையின் வரலாறு என்பதால் அதனை ஏற்றுக் கொண்டார். ஆனால் ''பாற்கடலில் பள்ளி கொள்ளும்'' என்ற பாடலுக்கு அவர் முழு மறுப்பு தெரிவித்து விட்டார். அப்போது எம்.ஜி.ஆர். திரையுலகில் செல்வாக்கு உயர்ந்து கொண்டு வந்த

நிலையில் இருந்ததனால் அவரை மறுத்துப் பேசும் நிலையில் படத் தயாரிப்பாளர் லேனா செட்டியார் இல்லை. ஆனால் தயாரிப்பாளருக்கு அந்தப் பாட்டை இழக்கவும் மனம் வரவில்லை எனவே படத்தில் சேர்க்காமல் இடைவேளை முடிந்த பிறகு தனி இணைப்பாக அந்தப் பாட்டை இணைத்துவிட்டார். சில ஆண்டுகள் அந்தப் பாடலை மக்கள் கண்டு ரசித்தனர். பிறகு அந்தப் பாடலை யாரும் ரசிக்கவில்லை எனவே திரையரங்கில் அதனை காட்டாமல் நீக்கிவிட்டனர். இப்போது திரையரங்குகளில் மதுரைவீரன் வெளியிடும் போது இந்த பாடலை நாம் காண இயலாது.

சமூகப் பாடல்களில் வேலையும் தொழிலும்,

மதுரை வீரன் படத்தில் இரண்டு சமூகப் பாடல்கள் இடம் பெற்றுள்ளன. ஒன்று, எம்.ஜி.ஆரும் பத்மினியும் மாறுவேடத்தில் அழகர் மலை கள்ளர்களுக்கு அறிவுரையும் எச்சரிக்கையும் கூறும் ஒரு சமூகப்பாடல் இரண்டாவது, படத்தின் தொடக்கத்தில் மதுரை வீரனைக் குழந்தையாகக் கண்டெடுத்த என் எஸ் கிருஷ்ணனும் டி ஏ மதுரமும் தங்கள் மக்கள் மத்தியில் எல்லோருக்கும் இனிப்பு வழங்கி வெற்றிலை பாக்கு தாம்பூலம் வழங்கி மகிழும் காட்சியில் பத்மினியின் சகோதரிகளான லலிதாவும் ராகினியும் பாடி ஆடும் பாடல்.

மதுரை வீரன் படத்தில் லலிதா ராகினி ஆடும் பாடல் சமூகத்தின் ஏழ்மை, வேலையில்லாத் திண்டாட்டம் ஆகியவற்றை எடுத்துரைக்கும் பாடலாக இருந்தது. அக்காலகட்டத்தில் படிப்பறிவு எல்லோருக்கும் பொதுவாக்கப்பட்டதனால் பலரும்

படித்துவிட்டு அலுவலக வேலைகளை நாடினர். படித்தவர்கள் தத்தம் பெற்றோர் செய்து வந்த வேலைகளைத் தொடர்ந்து செய்ய மறுப்பு தெரிவித்தனர். இவ்வாறு செய்வது கூடாது என்றும் பாரம்பரியத் தொழில் அறிவை நாம் இழந்து விடக் கூடாது என்ற அக்கறையில் இப்பாடல் எழுதப்பட்டிருந்தது.

"படித்த வேலைக்கு பலபேர் நோட்டம்

பாக்கி வேலைக்கு ஆள் திண்டாட்டம்"

என்றும் அடுத்து

"அப்பன் தொழிலை அவனது பிள்ளை

சொப்பனத்திலுமே நினைப்பதும் இல்லை

இப்படிச் செய்வதனாலே தொல்லை

ஏற்பட்டதென்றால் கேட்பதுமில்லை

தெரிஞ்ச தொழிலைச் செய்தாலே

தானே தன்னன்னே - மச்சான்

தாழ்வுமில்லை அதனாலே

தானே தன்னன்னே"

என்ற சரணம் படித்தவர்களாக இருந்தாலும் அவரவர் குடும்பத் தொழிலை கௌரவமாகச் செய்வதால் தவறொன்றும் கிடையாது. அத் தொழிலுக்கு தான் கௌரவம் கூடுமே தவிர செய்பவனின் கௌரவம் குறைந்து விடாது என்ற கருத்தை இப்பாடல் வலியுறுத்துகிறது.

ரிக்ஷாக்காரன் படத்தில் எம்.ஜி.ஆர். படித்து பட்டப்படிப்பு முடித்துவிட்டு ராணுவத்தில் சில ஆண்டுகள் பணி செய்துவிட்டு, சென்னை திரும்பியவர் அங்கு ரிக்ஷா ஓட்டும் தொழிலை ஏற்றுக் கொள்வார். அப்போது ரிக்ஷாக்காரர் அவர்களுக்கு சமூகத்தில் மக்களின் மத்தியில் நல்ல மரியாதை இல்லை என்பதை அறிந்தவர், அவர்களுக்கு அத்தொழிலுக்கு மரியாதை கிடைக்கும் வகையில் அத்தொழிலை முறைப் படுத்துவார். **இன்னின்ன பகுதிக்கு இவ்வளவு கட்டணம் என்பதை அனைவரும் அறிய சுவரில் எழுதச் செய்வார். ரிக்ஷாக்காரர்கள் முண்டியடித்துக் கொண்டு ஆட்களைக் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு வந்து தங்கள் வண்டியில் ஏற்றுவதைத் தவிர்ப்பதற்காக வண்டிகளை வரிசையாக நிறுத்தி ஒவ்வொன்றாகப் போக வேண்டும் என்று ஒரு ஒழுங்கு முறையை ஏற்படுத்தி இருப்பார்.** *ஆக செய்யும் தொழில் எதுவாக இருந்தாலும் அதை படித்தவர் செய்யும்போது அந்தத் தொழிலை முறைப்படுத்தி ஒழுங்குபடுத்தி அதற்கு ஒரு மரியாதையை ஏற்படுத்தித் தருகின்றனர். படித்தவர்கள் செய்யும் தொழிலுக்கு மரியாதை அதிகம் இக்கருத்தை 1956இல் எழுதப்பட்ட இப்பாட்டு உணர்த்துகின்றது. 1971இல் எம்.ஜி.ஆர். தனது ரிக்ஷாக்காரன் படம் மூலமாக இக்கருத்தை நடைமுறைப்படுத்திக் காட்டினார்.*

இப்பாடலில் மேலும் ஒரு கருத்து சொல்லப்படுகிறது.

“உலகினில் அவரவர் திறமையும் கண்டு

தொழிலது புரிவது மிக மிக நன்று”

என்ற கடைசி இரண்டு வரிகள் அவரவர் திறமைக்கேற்ற தொழிலைத் தேர்ந்தெடுத்துச் செய்ய வேண்டும் என்ற சிறப்பான கருத்தை எடுத்துரைக்கின்றது.

மதுரை வீரனைத் தொடர்ந்து 1958இல் வெளிவந்த நாடோடி மன்னன் படத்தில் நாடோடி வீராங்கன் மார்த்தாண்ட, மன்னனாகப் பதவி ஏற்று பல சீர்திருத்தங்களை சட்ட திட்டங்களையும் அறிவிக்கும் போது எல்லோருக்கும் அவரவர் திறமைக்கேற்ற வேலை உழைப்புக்கேற்ற ஊதியம் வழங்கப்படும் என்பார். எனவே திறமைக்கேற்ற வேலை செய்ய வேண்டும் அவ்வாறு செய்வதினால் அவ்வேலையினால் கிடைக்கும் பயனும் சிறப்பாக இருக்கும் என்ற கருத்து எம்.ஜி.ஆர். படத்தில் தொடர்ந்து வலியுறுத்தப்படுகிறது.

எம்.ஜி.ஆர். கண்ணியமாக செய்யக்கூடிய வேலை எதுவாக இருந்தாலும் செய்யலாம் என நம்பினார். எந்த வேலையும் அதனைச் செய்பவரைப் பொறுத்து அதனுடைய கவுரவம் உயர்கிறது என்பதை எம்.ஜி.ஆர். உள்ளப்பூர்வமாக உணர்ந்து இருந்ததனால் இக்கருத்தை தன்னுடைய படங்களில் தொடர்ந்து வலியுறுத்தி வந்தார். பாடல்கள் மூலமாகவும் வசனங்கள் மூலமாகவும் மக்களுக்குத் தொடர்ந்து எடுத்துக் கூறினார். மேலும் அக்காலகட்டத்தில் கூத்தாடிகள் என்று அழைக்கப்பட்ட நாடக நடிகர்களை எம்.ஜி.ஆர். தனது பத்திரிகையிலும் படத்திலும் கலைஞர்கள், என்று அழைக்க செய்தார். எக்ஸ்ட்ரா எனப்பட்டவர்களை துணை நடிகர் நடிகையர் எனப் பெயரிட்டு அழைத்தார். பின்னர் அதுவே

மரபாயிற்று. அக்காலத்தில் எம்.ஜி.ஆர்.. இவர்களுக்கு வீடு கூட வாடகைக்கு கிடைக்காது. இவர்களின் பிள்ளைகளை பள்ளியில் சேர்த்து படிக்க வைக்க முடியாத சூழ்நிலையில் பல இன்னல்களை அவர்கள் அனுபவித்த போது எம்.ஜி.ஆர். திரைப்படக் கலைஞர்களின் பிள்ளைகளுக்காக தனி ஒரு பள்ளிக்கூடத்தைக் கட்டி அங்கு படிக்கும் குழந்தைகளுக்கு இலவசமாக உணவு, புத்தகம், சீருடை என அனைத்தையும் வழங்கி அவர்களைச் சிறப்பாக படிக்க வைத்து நல்ல வேலைவாய்ப்பு கிடைக்கும்படி செய்தார். அவர்களின் எதிர்காலத்தை ஒளிமயமான எதிர்காலம் ஆக்கியவர் எம்.ஜி.ஆர்.. நடிகனாக இருக்கும் போதே இதனை அவர் நடைமுறைப்படுத்தி விட்டு பிறகு அவர் முதல்வர் ஆனபோது தமிழகத்துக்கே இத்திட்டத்தை விரிவுபடுத்தினார்.

வேலை என்பது ஜாதி சார்ந்ததாகப் பார்க்கப்பட்டதால். அதில் ஏற்றத்தாழ்வு சமுகத்தில் காணப்பட்டது. எனவே தொழில் குறித்த கருத்து படத்தில் முன் வைக்கப்பட்டது. தொழிலில் ஏற்றத்தாழ்வு பார்க்க வேண்டும் நீங்கள் செய்யும் தொழிலுக்கு உங்களால் கவுரவம் கிடைக்கட்டும் என்று அறிவுரை சொல்லும் வகையில் இப்பாடல் வைக்கப்பட்டுள்ளது.

மாறுவேட ஜோடிப் பாட்டு

சமூக பிரச்சினைகளை விவரிக்கும் நடனப் பாடல்களில் ஒன்றாக எம்.ஜி.ஆரும் பத்மினியும் மாறுவேடமிட்டு அழகர் மலை குகைக்குள் சென்று கள்ளர்கள் முன்னிலையில் ஆடிப் பாடி அவர்களை மகிழ்வித்து அவர்களுக்கே தன் பாடலின் மூலமாக

அறிவுரையும் எச்சரிக்கையும் விடுக்கின்றனர். இது படத்தில் இடம் பெறும் இரண்டாவது சமூகப் பாடல் ஆகும். இப்பாடலில் எம்.ஜி.ஆருக்கும் பத்மினிக்கும் வேடப் பொருத்தம் பொருத்தமாக இருந்தது. மாறுவேடம் போடும்போது எம்.ஜி.ஆர். தலை முதல் கால் வரை அங்குலம் அங்குலமாகப் பார்த்து பார்த்து வேடப் பொருத்தம் சரியாக இருக்கிறதா என்பதைக் கவனிப்பார்.

திருநீலகண்டர் படத்தில் இடம்பெற்ற ‘தீன கருணாகரனே நடராஜ நீலகண்டனே’ என்ற பாடலின் மெட்டில் அமைந்த இப்பாடலில் முதலில் நீங்கள் செய்வது சரிதானா என்று அவர்களையே கேள்வி கேட்டு சிந்திக்க வைப்பார்கள். இரண்டாவதாக கொலைத் தொழிலை நீங்கள் தொடர்ந்து செய்தால் சிறையில் அடைக்கப்படுவார்கள் என்று மிரட்டுவர்.. மூன்றாவதாக நிறைவாக இத்தொழிலை நீங்கள் செய்ய வேண்டாம் இதனை விட்டுவிட்டு அனைவரும் தொழுது உங்கள் பின்வரச் செய்யும் உழுது பயிரிடும் தொழிலை மேற்கொள்ளுங்கள். அதுவே உங்கள் உயர்வுக்கு வழிகாட்டும் என்று இதம்பதமாய் அறிவுரை சொல்லி முடிப்பார்கள்.

“ஏச்சுப் பிழைக்கும் தொழிலே சரிதானா எண்ணிப் பாருங்க

ஐயா எண்ணிப் பாருங்க”

எனத் தொடங்கும் இப்பாடல்

“சேட்டை போடும் புள்ளிகள் எல்லாம்

கோட்டை விட்டு கம்பி எண்ணனும்

சிறையில் கம்பி எண்ணனும்''

என்ற எச்சரிக்கையோடு பிறகு

''ஊரை அடிச்சுப் பிழைக்கவும் வேண்டாம்

யாருக்கும் நீ பயப்பட வேண்டாம்

ஏரைப் பிடிச்சு மானம் பெரிதாய் வாழ வேணுங்க

நீங்க வாழ வேணுங்க ''

என்று நிறைவு பெறும் இப்பாடலில் அழகர்மலை கொள்ளைக்காரர்கள், பலரும் அமர்ந்து இருப்பார்கள். அவர்களின் முன்பு எம்.ஜி.ஆரும் பத்மினியும் மாறு வேடமிட்டு ஆடி பாடுவார்கள். அப்போது எம்.ஜி.ஆர். போட்டிருக்கும் வேடம் மதுரைவீரன் சாமி வேடம் ஆகும். பக்கவாட்டில் உயர்த்திக்கொண்டை போட்டு கோயிலில் இருக்கும் மதுரைவீரன் சாமி போல எம்.ஜி.ஆர். வேடமிட்டு இருப்பார்.. இருவருடைய நடனமும் மிகச் சிறப்பாக அமைந்திருந்தது.

படத்தில் எம்.ஜி.ஆர். பாடிய இப்பாடலும் ஆட்டமும் மிகச் சிறப்பாக இருந்து மக்களின் அதிக வரவேற்பை பெற்றது. வரவேற்பின் தொடர்ச்சியாகவே இவர் அடுத்த 1960இல் மன்னாதி மன்னன் படத்தில் பத்மினியோடு போட்டி போட்டு நடனம் ஆடி வெற்றி பெறுபவராகவும் நடித்திருந்தார். அதன்பிறகு குடியிருந்த கோயில் படத்தில் விஜயலட்சுமியுடன் ஒரு வாரம் பயிற்சி எடுத்து பங்கரா நடனத்தை சிறப்பாக ஆடியிருந்தார்.



"ஆடலுடன் பாடலை கேட்டு

ரசிப்பதிலே தான் சுகம் சுகம் சுகம்"

என்ற பாடலுக்கு அவர் ஆடிய பங்கரா நடனத்தைப் போல இந்திப் படத்தில் கூட எவரும் ஆடவில்லை என்று ஒரு இந்திப் பட ரசிகர் தனது பேட்டியில்

குறிப்பிட்டிருந்தார். தசாவதாரம் படத்தில் கமலஹாசன் கூட்டத்தோடு ஆடிய நடனத்தை விட எம்.ஜி.ஆர். குடியிருந்த கோயில் படத்தில் ஆடிய பங்கரா நடனம் வெகு சிறப்பாக பொருத்தமாக அமைந்து இருந்தது என்றார் அந்த இந்திக்காரர். . இவ்வாறு எம்.ஜி.ஆர். பல நடனங்களை நடன காட்சிகளில் நடிப்பதற்கு முன்னோடியாக அமைந்தது. படத்தில் வரும் இந்த பாடல் காட்சி ஆகும்.

காதல் கனவு பாடல்

மதுரை வீரன் படத்தில் வெள்ளையம்மாள் கள்ளர்களை பிடிக்கப்போகும் மதுரை வீரனும் கள்ளர் போல தன்னைக் காட்டிக் கொள்வதற்காக எம்.ஜி.ஆருக்கும் கள்ளர்களின் முத்திரையை தோளில் பச்சை குத்துகிறார். வெள்ளையம்மா மதுரை வீரன் தோளில் தேள் பச்சை குத்தும்போது அவரது வடிவழகைக் கண்டு மயங்கி கற்பனை செய்து பாடுவதாக ஒரு பாடல் காட்சி இடம்பெற்றது. இதுவே வெள்ளையம்மா மதுரை வீரன் மீது கொண்ட காதலை வெளிப்படுத்தும் பாடலாக அமைந்தது. இப்பாடலில் பல தொழில்நுட்ப சிறப்பம்சங்கள் இடம்பெற்றன. முதலில் பத்மினியின் கண்கள் க்ளோசப் காட்சிகள் காட்டப்பட்டன. எம்.ஜி.ஆர். உடைய முகமும் குளோசப் காட்சியில் வசீகரமாகவும், அழகாகவும் காட்சியளித்தது. பத்மினியின் நடனம் அவரது கொடி போன்ற உடல் இப்பாடலுக்கு மிகவும் பொருத்தமாகவும் அமைந்திருந்தது.

“நாடகமெல்லாம் கண்டேன் உந்தன் ஆடும் விழியிலே

ஆடும் விழியிலே

கீதம் பாடும் மொழியிலே''

என்று எம்.ஜி.ஆர். பாடுவதாக தொடங்கும் இப்பாடல் பல்லவியை தொடர்ந்து

''தேடிய இன்பம் கண்டேன்

கண்ணா வாழ்விலே

உங்கள் அன்பால் நேரிலே''

என்று பத்மினி தொடர்வதாக அமைந்திருக்கும். இப்பாடலிலும் எம்.ஜி.ஆரின் சிறப்பையும் அவருடைய அன்பையும், கருணையையும் உணர்த்தும் வரிகளாக

''கன்னிப்பருவம் எனும் கட்டழகு தேரினிலே

என்னையே ஆட்கொள்ள

இசைந்து வந்த மணவாளா''

என்ற வரிகள் காணப்படும்.



பொதுவாக ஆடல் மங்கையரை எவரும் திருமணம் செய்து கொள்ள விரும்புவதில்லை. அவர்கள் பொருட்பெண்டிர் ஆகவும், பொதுப் பெண்டிர் ஆகவும் வாழ்ந்து வருவதாக நம்பப்பட்ட காலம் என்பதால் அவர்களை திருமணம் செய்து குடும்பத்தில் ஒருவராக ஏற்றுக் கொள்ள எவரும் முன்வராத காலகட்டத்தில் வீரன் கயவரிடம் இருந்தும் மன்னரிடம் இருந்தும் வெள்ளையம்மாளைக் காப்பாற்ற அவளை மனைவியாக ஏற்றுக் கொள்ள முன் வருகிறான். அதனால் இப்பாடலில் 'என்னையே ஆட்கொள்ள இசைந்து வந்த மணவாளா' என்ற வரி வீரனின் அன்பையும் கருணையையும் காட்டுவதாக அமைந்துள்ளது.

இறுதிச் சரணத்தில்

"வளர்க் காதல் அன்பினாலே
வரும் வார்த்தை கொஞ்சமா
மலர் போன்ற உன்னை கண்டால்
கவி பாட பஞ்சமா
ஈருடல் ஒருயிர் ஆனோம்
இன்பம் காண்போம் வாழ்விலே
காண்போம் வாழ்விலே
பேரன்பால் நேரிலே"

என்ற வரிகள் இருவரின் மனங்களும் ஒருமித்த கருத்து உடையனவாக மாறிவிட்டதை உணர்த்துகின்றன. இவ்வாறு வீரனை ஆழமாக காதலித்த வெள்ளையம்மாள் வீரன் மாறுகால்

மாறுகை வாங்கப்பட்டு உயிரிழக்கும் தருணத்தில் அவனது மனைவி பொம்மியைப் போலவே அவளும் அவன் மீது விழுந்து உயிர் துறந்தாள்.

மனைவியர் இருவருடன் மதுரை வீரனும் அகால மரணம் எய்திய காரணத்தால் அவர்களின் மரணத்திற்கு காரணமான நாயக்க வம்சத்தினரும் அவர்களின் இனமான அருந்ததியினரும் இம்மூவரையும் குல தெய்வமாக வைத்து வழிபட்டு வருகின்றனர். மதுரைவீரன் சாமி வழிபாடு தமிழகம் தவிர்த்து தமிழர்கள் வாழும் வேறு பல நாடுகளிலும் என்றும் சிறப்பாக நடந்து வருகிறது.

கேலிப் பாடல்

மதுரை வீரன் படத்தில் அக்காலகட்டத்தில் முறை பெண்களை முறை மாப்பிள்ளையைக் கேலி செய்து பாடும் பாடலைப் போல ஒரு பாடல் இடம் பெற்றது. “வாங்க மச்சான் வாங்க வந்த வழியைப் பார்த்து போங்க” என்ற பாடல் முறைப் பெண்கள் கேலி செய்வது போல இடம் பெற்றது. பிறகு மதுரை வீரன் பொம்மி திருமணம் முடிந்ததும் சில சொற்கள் மட்டும் மாறுபட்டு இருக்க மீண்டும் இடம்பெற்றது. முதலில் தான் துரத்தி வந்த மான் தோட்டத்திற்குள் வந்ததை அறிந்து அதனை பிடிக்க வந்த வேடன் வடிவில் வந்த எம்.ஜி.ஆரை பார்த்து இளவரசி பொம்மியின் தோழிகள்

“வாங்க மச்சான் வாங்க வந்த வழியைப் பார்த்து போங்க

ஏங்கி ஏங்கி நீங்க ஏன் இப்படி பார்க்கிறீங்க

வாங்க மச்சான் சும்மா வாங்க மச்சான் கிட்ட

வாங்க மச்சான் வாங்க வந்த வழியைப் பார்த்து போங்க'' என்று கேலி செய்து பாடும் பாடல் வள்ளி திருமணம் நாடகத்தில் வேடனாக வரும் வேலன் தன் மானை துரத்தி வந்த காட்சியை நினைவூட்டுவதாக அமைந்தது. அவர் என் மான் இந்தப் பக்கம் வந்தது அதனை நான் தேடி வந்தேன் என்று சொல்லவும்

''மானைத் தேடி தாங்க கண் வலையைப் போடுறீங்க

மந்திரத்தால் நாங்க இங்க மாட்டோம் போங்க போங்க''

என்று E.V. சரோஜா கேலிசெய்து பாடுவதாக அமைந்த வரிகள் அவர் மானைத் தேடி வந்ததாகச் சொல்வது பொய் என்றும் பெண்ணைத் தேடி வந்திருக்கிறார் என்று தவறாகப் பொருள் கொண்டு பாடுகின்றனர்.

கேலிப்பாடல் ஆரம்பிக்கும் முன்பு 'நீங்கள் யார்' என்று கெல்லி கேட்பாள். அதற்கு எம்.ஜி.ஆர். வீரன் என்று தன் பெயரை சொல்வார். கேள்ளியாக நடித்த EV சரோஜா ' நீங்கள் என்ன புரட்சி வீரனா உலகமெல்லாம் அறிந்து இருப்பதற்கு' என்று ஒரு கேள்வி கேட்பார். ஆக அப்போதே எம்.ஜி.ஆருக்கு பெயரில் புரட்சி என்ற சொல் ஒட்டிக்கொண்டது. பிறகு அவரை புரட்சி நடிகர் என்று அழைத்ததற்கும், அதன்பிறகு அவரை கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் புரட்சித் தலைவர் என்று அழைத்ததற்கும் இந்த படத்தில் வந்த நீங்கள் புரட்சி வீரனா என்ற வசனமே முன்னோடியாக இருந்தது.

வெகு நேரமாக இந்த பெண்களின் கேலி கிண்டலில் சிக்கிய எம்.ஜி.ஆர். பிறகு பொறுக்க இயலாமல் அவர்களைத் திருப்பி கேலி செய்யும் பாடலை பாடுகிறார். அப்போது

''முத்துப்போல் பல்லழகி முன்கோபச் சொல்லழகி

கத்தி போல் கண்ணழகி கனிவான பெண்ணழகி''

என்று தொடங்கி

''தேடி வந்தேனே புள்ளி மானே

ஓடி வந்ததால் இங்குதானே நானே

தேடி வந்தேனே புள்ளி மானே''

என்று மீண்டும் சொல்லிவிட்டு

''தேனுலாவும் பூங்காவனமதில்

கானுலாவும் கலைமானை நானே

தேடி வந்தேனே புள்ளி மானே''



என்று பாடுவார் இப்பாடல் அன்றைக்கு ரசிகர்களால் கேலி பேசும் முறை காரர்களால் மிகவும் ரசிக்க பாடலாகும். கிராமத்து மக்கள் ஒருவரை ஒருவர் கேலி செய்வதற்கு இப்பாடலை ரசித்துப் பாடி மகிழ்ந்தனர்.

வீரனும் பொம்மியும் திருமணம் செய்த பிறகு அவர்களை அவர்கள் இருக்கும் ரகசிய இடத்தில் சந்திக்க வரும் தோழி, மீண்டும் இதே பாடலை பாடுகிறார். அப்போது சில வார்த்தைகள் மாறிவிடுகின்றன. பேச்சுவழக்கில் இருக்கும் சொற்கள் கலந்திருக்கின்றன.

“வாங்க மச்சான் வாங்க சொந்த வழிய பாத்துட்டீங்க

சும்மா வாங்க மச்சான் ஜோரா வாங்க மச்சான் வாங்க

வலையை வீசி நீங்க தங்கச் சிலையை பிடிச்சிட்டீங்க

வஞ்சிமார்கள் நாங்க கண் பார்த்திருக்க நீங்க உங்க

பவுச காட்டி ஆளை மயக்கும் மயக்கி சிறையும் எடுத்துட்டீங்க”

பாடுவதாக பாடல் சில மாற்றங்களுடன் அமைக்கப்பட்டுள்ளது. இந்தப் பாடலும் ரசிகர்களால் மிகவும் ரசிக்கப்பட்டது. கேலி பாடலை ரசித்தது போலவே இந்த வெற்றி பாடலையும் ரசிகர்கள் கேட்டு மகிழ்ந்தனர். வீரனின் வெற்றி இப்பாடலில் எதிரொலிக்கிறது.

மொழி வாழ்த்து பாடல்

மதுரை வீரன் படத்தில் தமிழ் மொழியை வாழ்த்தி பாடும் ஒரு பாடல் இடம்பெற்றுள்ளது. இப்படத்துக்குப் பிறகு தமிழ் மொழி வாழ்த்து பாடல் நாடோடி மன்னன், மன்னாதி மன்னன் ஆகிய படங்களிலும் இடம்பெற்றிருந்தது. தமிழ் மொழியின் சிறப்புகளை உணர்த்தும் வகையில் மக்களிடையே திராவிட கட்சிகள் பிரச்சாரங்கள் செய்து வந்ததால் எம்.ஜி.ஆர். படங்களிலும் மொழி வாழ்த்து இடம்பெறுவது ஓர் இன்றியமையாத பகுதியாக அமைந்து விட்டது. நாடோடி மன்னன் படத்தில்

“செந்தமிழே வணக்கம் திராவிடர் வாழ்வினைச்

சீரோடு விளக்கம் செந்தமிழே வணக்கம்

ஐந்து இலக்கணங்கள் ஆய்ந்தே உயர் தமிழுக்கு

நீ வந்ததாலே செந்தமிழே வணக்கம்”

என தொடங்கும் பாடல் இடம் பெற்றது. இது தவிர 4 மொழிகளும் இடம்பெறக்கூடிய தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம் என திராவிட மொழிகள் இடம்பெறக்கூடிய திராவிட மொழி வணக்கம் பாடலும் இடம்பெற்றது. “அச்சம் என்பது மடமையடா” என்ற பாடல் தமிழின் சிறப்பை உணர்த்தும் பாடலாக பின்னர் வந்த மன்னாதி மன்னன் படத்தில் இடம்பெற்றது அறிகிறோம். “தமிழன் என்றோர் இனமுண்டு தனியே அவற்கொரு

குணமுண்டு” என்ற பாடல் தமிழ் இலக்கியத்தின் அதன் சிறப்புக்களை விளக்கி அமைந்தது.

மதுரை வீரன் படத்தில் அரசவைப் பாடலாக மொழி வாழ்த்து பாடல் இடம்பெற்றது. இப்பாடல்

“செந்தமிழா எழுந்து வாராயோ

உன் சிங்காரத் தாய்மொழியைப் பாராயோ”

என்ற பல்லவியுடன் தொடங்கி “

சிந்தையெல்லாம் இனிக்கும் தேனாகும்

செல்வம் இதே அமுதே தமிழே

நமது சிந்தையெல்லாம் இனிக்கும் தேனாகும்

செல்வமெல்லாம் செல்வம் இதே அமுதே தமிழே”

என்று தொடர்ந்து செல்கின்றது. தமிழில் செல்வம் என்றும் சிங்காரம் ஆனது என்றும் வர்ணிக்கும் போக்கு இப்பாடலில் காணப்படுகிறது.



தமிழ் மொழியைக் காப்பது தமிழ் மக்களை ஆட்சி செய்கின்ற மன்னர்களின் கடமை என்ற கருத்தை வலியுறுத்தும் வகையில்

"அன்றொரு நாள் அரசர் மூவர் மடியிலே
நின்று தவழ்ந்து மகிழ்ந்த மொழியிதே
கடமையோடு உயிரென காவாயோ?"

என்ற சரணம் தமிழை காப்பது தமிழரின் கடமை என்ற பொருளில் எழுதப்பட்டுள்ளது. பின்னர் உலகெங்கும் தமிழர்கள் வாழ்வதனால் பரவிக் இருப்பதனால் உலகத் தமிழர்களின் அன்பே வாழ்வின் நெறியாக தூய மனதோடு துன்பங்கள் தொலைந்து போக தமிழர்கள் தங்களுக்குள் உறவு கொண்டாட வேண்டும் என்ற பொருளில்

"அன்பு நெறியிலே அரசாள
இந்த அகிலமெல்லாம் தமிழர் உறவாட
துன்பங்கள் யாவும் பறந்தோட
தூய மனம் கொண்டு கவி பாட"

என்ற பாடல் வரிகள் நிறைவாக இடம்பெற்றுள்ளன.

தமிழ் வாழ்த்துப் பாடல் தமிழருக்கு தமிழினம் என்ற எழுச்சியை ஊட்டுவதாகவும் தமிழே அமுது தமிழே செல்வம் என்று அதனுடைய சிறப்புக்களை எடுத்துக் காட்டுவதாகவும் மூவர் மடியில் வளர்ந்த தமிழ் என்று தமிழின் வரலாறு கூறுவதாகவும் அன்பு நெறியில் அகில தமிழர் உறவு கொண்டாட வேண்டும் என்று உலகத் தமிழரின்

ஒன்றிணைப்புக்கு வழி காட்டுவதாகவும் அமைந்து இருக்கிறது.

எம்.ஜி.ஆர். நடித்த படங்களில் மதுரை என்ற பெயரில் இடம்பெற்றவை இரண்டு படங்கள் ஆகும் ஒன்று மதுரைவீரன் அடுத்தது மதுரையை மீட்ட சுந்தரபாண்டியன் இரண்டுமே மதுரையின் சிறப்பினை வலியுறுத்தும் படங்களாக எம்.ஜி.ஆரை தமிழர்களின் தலைவன் என்று உறுதி செய்யும் படங்களாக அமைந்தன. மதுரை என்பது தமிழர்களின் தலைநகரமாக இருந்ததனால் படத்தில் மதுரை என்ற பெயர் இடம்பெறும் போது அதன் தலைவனும் தமிழினத்தின் தலைவனாக உணரப்படுகிறான். அவர் நடித்த காஞ்சித் தலைவன் என்ற படம் காஞ்சியில் பிறந்த அறிஞர் அண்ணாதுரையின் நினைவாக சூட்டப்பட்டது. எம்.ஜி.ஆர். அண்ணா தொடங்கிய திமுகவின் பிரதிபிம்பமாகவே கருதப்பட்டார்.

இரு தரப்பினரும் ரசித்த பாடல்கள்

மதுரைவீரன் கதையின் நாயகன் சக்கிலியர் இனத்தைச் சேர்ந்தவனாக இருந்தாலும் அவனுடைய மனைவி இருவரும் அரசவையை சேர்ந்தவர்களாக இருந்ததனால் வேத்தியல் பொதுவியல் என்று சிலப்பதிகாரம் காட்டிய வேந்தனுக்கு உரிய கலைகளும் பொதுமக்களுக்கு உரிய கலைகளும் படத்தில் இடம்பெற்றன. M.L. வசந்தகுமாரி பாடிய கர்நாடக இசையில் அமைந்த ஆடல் காணிரோ, திருவிளையாடல் காணீரோ" என்ற பாடலும் செந்தமிழா எழுந்து வாராயோ உன் சிங்காரத் தாய்மொழியைப் பாராயோ என்ற காம்போதி ராகத்தில் அமைந்த பாடல்கள் ஆகும். இவை படம்

பார்த்த பணக்காரரர்கள் மற்றும் உயர்சாதியினரின் விருப்பத்தை நிறைவேற்றின. எம் எல் வசந்தகுமாரி. பாடல்கள் கர்நாடக இசைப் பாடல்களாக அமைந்தது போல ஜிக்கி பாடிய பாடல்கள் நாட்டுப்புற மெட்டில் அமைந்து ஏழை எளிய மக்களின் ரசனைக்கு தீனியாக அமைந்தன.

"வாங்க மச்சான் வாங்க

வழியே பார்த்து போங்க" என்ற பாடலும்

"சும்மா இருந்தா சோத்துக்கு நஷ்டம்

சோம்பல் வளர்ந்தா ஏற்படும் கஷ்டம்" என்ற பாடலும்

ஜிக்கி பாடியனவாகும். இப் பாடலின் மெட்டு தன்னுடைய படத்தின் பாடலில் இருந்து திருடப்பட்டதாக ஏவிஎம் அவர்கள் லேனா செட்டியார் மீது வழக்குத் தொடர்ந்தார். ஆனால் இது நாட்டுப்புறப்பாடல் மெட்டாக இருந்ததனால் இதில் திருட்டு என்ற பேச்சுக்கே இடமில்லை என்று இதற்கு எவரும் தனி உரிமை கொண்டாட முடியாது என்றும் லேனா செட்டியாரின் வக்கீல் வி எல் எத்திராஜ் வாதாடி வெற்றி பெற்றார்.

இளவரசி பொம்மியாக நடித்த பானுமதி சிறந்த கர்நாடக இசைப் பாடகியாக இருந்ததனால் அவர் சொந்த குரலில் "அவர்க்கும் எனக்கும் உறவு காட்டி அருள் புரிந்ததும் கதையா" என்ற பாடலைப் பாடியிருந்தார். இந்த பாடல் ஏற்கனவே சிவாஜி பத்மினி நடித்த இல்லறஜோதி படத்தில் 1954 ஆம் ஆண்டு இடம் பெற்றிருந்தாலும் கூட பட தயாரிப்பாளரான லேனா செட்டி யாருக்கு மிகவும் பிடித்துப்போனதால் இசையமைப்பாளர் இதே மெட்டில் சில வார்த்தைகளை

மட்டும் மாற்றி எழுதி வாங்கி இதே தேஷ் ராகத்தில் மதுரை வீரன் படத்தில் அமைத்தார்.

பின்னணியில் திரையிசை

மதுரை வீரன் படத்தின் பின்னணி இசையில் சில சினிமா மெட்டுக்கள் ஆங்காங்கே இடம் பெற்றது குறிப்பிடத்தக்கதாகும். காவிரிக் கரையில் உள்ள கன்னிமாடத்தில் அம்பிகை விரதம் இருக்கும்போது பொம்மி மதுரை வீரனைக் காண ஆவலோடு இருக்கிறாள். அப்போது அக் காட்சிக்கு பின்னணி இசையாக 'உன்னை கண் தேடுதே உன் எழில் காணவே , உறங்காமலே மனம் நாடுதே' என்ற பாடலின் இசை மட்டும் பின்னணி இசையாக கேட்டுக் கொண்டிருக்கும்.

மதுரைவீரன் தன குடிசையில் காய்ச்சலில் படுத்திருக்கும் போது அவனைப் அங்கு வரும் பொம்மி 'மன அமைதியும் இல்லை சுகமும் இல்லை' என்ற பொருள் படக்கூடிய சாந்தமுலேது சவுக்கியமு லேது' என்ற தியாகராஜ கீர்த்தனை பின்னணியில் இசைக்கும்.

வெள்ளையம்மாள் வீட்டுக்கு கள்வர் வந்து அவளை துன்புறுத்திய போது எம்.ஜி.ஆர். அங்கு வந்து கள்வர்களிடமிருந்து வெள்ளையம்மாளைக் காப்பாற்றுகின்றார். அச்சூழ்நிலையில் என்று ஆபத்பாந்தவனாக அனாத ரட்சகனாக கிருஷ்ணன் வருவான்'' என்ற கருத்தில் அமைந்த ''கிருஷ்ணா நீ பேகனே பாரோ என்ற பாடலின் இசை பின்னணியில் ஒலிக்கக் கேட்கலாம்.

வெள்ளையம்மாள் மீது தீராக்காதல் கொண்ட திருமலை மன்னர் அவளிடம் காமம் தொனிக்கப்

பேசும்போது பின்னணி இசையாக "மன்மத லீலையை வென்றார் உண்டோ" என்ற பாட்டின் இசை சேர்க்கப்பட்டிருக்கும். இவ்வாறு பழைய பாடல்களின் இசையும் இப்படத்திற்கான பாடல்களின் சுவையும் மேல்தட்டு மக்கள் அடித்தட்டு மக்கள் என அனைத்து தரப்பினரின் மனதையும் கவர்ந்தது. அதனால் இப்படம் வெளிவந்த பிறகு எம்.ஜி.ஆருக்கு ஊர்தோறும் ரசிகர் மன்றங்கள் பெருகி அவரை மக்கள் செல்வாக்கு மிக்க நடிகராக உயர்த்தியது. படத்தின் வசூலும் ஒரு கோடியை எட்டி இன்று வரை கருப்பு வெள்ளைப் படங்களின் சாதனைப் படமாக தக்க வைத்துள்ளது.

மதுரை வீரன் படம் 100 நாளைக்கு மேலோடி வசூலில் சாதனை படைத்தது. கருப்பு வெள்ளை படங்களில் இன்று வரை அதிக வசூல் செய்து சாதனை படைத்த படம் மதுரை வீரன். இப்படம் 1956 ஆம் ஆண்டு ஒரு கோடி ரூபாய் வசூலித்தது. இப்படத்தின் பக்தி பாடல்கள் சமூகத்தின் உயர் மட்டத்தினரை வெகுவாக கவர்ந்தன. அவர்களுக்கு மதுரை வீரன் அரசகுமாரன் என்ற கதை இப்படத்தில் ஒரு ஈர்ப்பை ஏற்படுத்தியது. அருந்ததியினர் என்று இன்று அழைக்கப்படும் சக்கிலியர் மதுரை வீரன் தன் இனத்தவன் என்று படம் முழுக்க அறியப்படுவதால் அவர்களும் வீரனை தன்னுடைய இனத்தைச் சேர்ந்த மாவீரனாக கருதி கொண்டாடி மகிழ்கின்றனர். அனைத்து தரப்பினரையும் கவரும் வகையில் இப்படம் ஆடல் பாடல் வசனம் சண்டைக்காட்சிகள் கதை அமைப்பு தொழில்நுட்பம் என சகல வகையிலும் சிறப்பாக எடுக்கப்பட்டிருந்தது.

4. முத்தமிழில் மூன்றாம் தமிழ் - நடனம்

மதுரை வீரன் படத்தின் மாபெரும் வெற்றிக்கு எம்.ஜி.ஆரும் மற்ற நடிகர்கள் தேர்வும் அதனுடைய கதைக்களமும் காட்சி அமைப்புகளும் கண்ணதாசனின் வசனமும் பாடல்களும் சிறப்பான காரணங்களாக இருந்தாலும் அப்படத்தின் நடனக் காட்சிகளும் வெற்றிக்கு முக்கிய பங்களித்தன. இப்படத்தில் நாட்டியம் சிறப்பாக ஆடத் தெரிந்த நடிகையர் பலர் நடனமாடி இருந்தனர். குசல குமாரி, ஈ வி சரோஜா, லலிதா, பத்மினி, ராகினி, மாடி லட்சுமி ஆகியோர் அக்காலகட்டத்தின் சிறந்த நடன நடிகையர் ஆவர். இவர்கள் சினிமாவில் நடித்த போது இவர்களுக்கென்று நடனக் காட்சிகள் பிரத்தியேகமாக அமைக்கப்பட்டன. இப்படத்திலும் இவர்களின் நடனம் சிறப்பாக அமைக்கப்பட்டு ரசிகர்களால் ரசிக்கப்பட்டது.

திரைப்படம் ஒரு முத்தமிழ்க் காப்பியம்

எம்.ஜி.ஆரின் கருத்தில் திரைப்படம் என்பது முத்தமிழ்க் காப்பியம் ஆகும். ஒவ்வொரு படத்தில் நல்ல பண்புகள் கற்றுத்தரப்பட வேண்டும் அதுவே படத்தின் ஆன்மா ஆகும். இப்பண்புகளைக் கற்றுத்தரும் கருவிகளாக வசனங்களும் இசைப் பாடல்களும் நடனங்களும் சிறப்பாக அமைய வேண்டும். அவ்வாறு படங்கள் அமைந்தால்

மட்டுமே படம் பார்ப்பவர் மகிழ்ச்சியாகப் படத்தை ரசிக்க முடியும். அவர்கள் மன மகிழ்ச்சியோடு வீடு திரும்பினால் மட்டுமே படம் எடுத்தவருக்கும் அதில் நடித்தவருக்கும் வாழ்த்துக்களும் பாராட்டுதலும் கிடைக்கும்.

இயல் தமிழ்

இயற்றமிழ் எனப்படும் உரைநடை [வசனம்] பட்டறிவு அதிகமுடைய படிப்பறிவு குறைவானவர்கள் எளிதாகப் புரிந்துகொள்ளும்படி சுருக்கமாக பழகு தமிழில் எழுதப்பட வேண்டும். நீண்ட நெடிய வசனங்களை எம்.ஜி.ஆர். விரும்பியதில்லை. சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல் என்ற கருத்துப் புலப்பாட்டு உத்தியை [COMMUNICATIVE TECHNIQUE] எம்.ஜி.ஆர். வலியுறுத்தினார். வசனங்களில் இயற்கை பற்றிய ஒப்பீடுகள் இருக்க வேண்டும். பழமொழி மற்றும் முன்னோர் வாக்கு எடுத்துக்காட்டப்பட வேண்டும். வடமொழி மற்றும் ஆங்கிலச் சொற்கள் இடம்பெறுவதைத் தவிர்த்தார். பழகு தமிழில் அழகு நடையில் சிறய வாக்கியங்களாக அமைக்கும்படி எடுத்துரைத்தார். அவருக்குப் பிடிக்கவில்லை என்றால் அவர்களிடம் எடுத்துச் சொல்லி மாற்றி வாங்கிய பின்பே அதனை பேசி நடித்தார்.

இசைத்தமிழ்

படம் பார்க்க வருவோரில் எளியவரும் செல்வந்தரும் பாமரரும் படித்தவரும் என அனைவரும் கலந்து இருப்பதால் திரைப்படத்தில் முழுக்க முழுக்க பாரம்பரிய இசை மற்றும் நடனத்தை எம்.ஜி.ஆர். ஆதரிக்கவில்லை. அவை

இரண்டும் ஜனரஞ்சகமாக இருக்க வேண்டும் என்பதற்காக திரைப்படத்துக்கென கர்நாடக இசையை மெல்லிசையாக்கித் தருவதில் எம்.ஜி.ஆர். குறிக்கோளோடு செயல்பட்டார்.. பாடலின் சொற்கள் கருத்துள்ளவையாகவும் இருக்க வேண்டும் அதே வேளையில் குறைந்த படிப்பறிவு உடையோரும் புரிந்துகொள்ளும்படி எளிமையானவை ஆகவும் இருக்க வேண்டும் எனப் பாடலாசிரியரிடம் சொல்லி எழுதி வாங்கினார்.

நாடகத் தமிழ் [நாட்டியத் தமிழ்]

எம்.ஜி.ஆர். குமரன் ஆசானிடம் முறைப்படி நடனம் பயின்றவர். கர்நாடக இசையும் பயின்றார். ஆங்கில மொழிப் பயிற்சி உடையவர். தன்னை தகுதிப்படுத்திக் கொள்வதில் எப்போதும் முன்னிலையில் இருந்தவர். உலகம் சுற்றும் வாலிபன் படத்தில் கடைசியில் இடம் பெரும் ஸ்கேட்டிங் சண்டைக் காட்சிக்காக தன் வீட்டு மொட்டை மாடியில் ஸ்கேட்டிங் விளையாடி பயிற்சி பெற்றார். அப்போது அவருக்கு வயது அறுபது. எந்த வயதிலும் தன்னை ஒரு மாணவனாகக் கருதி புதிய விஷயங்களைக் கற்றுக்கொள்ள அவர் தயங்கியதேயில்லை.

அவர் தான் நடித்த ஸ்ரீ முருகன் படத்தில் நடிகை மாலதியுடன் ருத்ர தாண்டவமும் ஆனந்த தாண்டவமும் ஆடியிருக்கிறார். உஅளைக்கும் கரங்கள் படத்தில் சிவ தாண்டவத்தை ருத்ர தாண்டவமாக ஆடினார். அவருக்கு இருந்த பாரம்பரிய இசை மற்றும் நடனம் குறித்த அறிவும் மேடை கலைஞராக இருந்த அனுபவமும் இக்கலைகளின் பொது மக்கள் ரசனை பற்றிய



அனுபவத்தையும் அவருக்கு கற்றுத் தந்தது. எனவே அவர் தனது படங்களில் பாரம்பரிய நடனத்தை அனைத்து தரப்பு மக்களும் ரசிக்கத்தக்கதாக எளிமையாக மாற்றி அமைக்கும்படி செய்தார்.

வேறுபடும் சுவை வெற்றிக்கு அச்சாணி

மதுரை வீரன் படத்தில் பலவகையான நடனக்காட்சிகள் அடுத்தடுத்து வந்து கதம்ப மாலை போல மணக்கின்றது. ரசிகர்களுக்கு வேறுபட்ட [variety] சுவை மாறி மாறி விரைவாகக் கிடைக்கின்றது. வேறுபட்ட வித விதமான நடனக் காட்சிகளை தனது படத்தில் அமைப்பது எம்.ஜி.ஆரின் வெற்றிக் காரணிகளில் ஒன்றாகும். அவர் இந்த உத்தியை குடியிருந்த கோயில், அடிமைப் பெண், உலகம் சுற்றும் வாலிபன் படத்திலும் கையாண்டு பெரு வெற்றி கண்டிருக்கிறார். ஒரு தனிப்பாடல் இரண்டு காதல் பாடல், ஒரு சோகப் பாடல் என்று ஒரே பாணியில்

அமைக்காமல் ஒவ்வொரு பாட்டையும் விதவிதமான நடனங்களை சேர்த்து புதுவிதமாகப் படித்து ரசிகர்களின் கண்ணுக்கும் மனதுக்கும் விருந்தளிக்கிறார்.

நடனங்களின் முக்கியத்துவம்

எம்.ஜி.ஆர். தனது படங்களுக்கு கதாநாயகி தெரிவு செய்யும்போது அவர்கள் பாட்டுக் காட்சிகளில் வித விதமாக ஆடத் தெரிந்தவர்களாக இருக்க வேண்டும் என்ற காரணத்திற்காகவே நடனம் தெரிந்த கதாநாயகிகளைத் தெரிவு செய்தார். ஜெயலலிதா, பத்மினி, லதா, சந்திரகலா, ஆகியோர் முறைப்படி நடனம் படித்தவர்கள். சரோஜாதேவி அபிநய சரஸ்வதி என்று பெயர் எடுத்தவர். எம்.ஜி.ஆர். சரோஜாதேவி ஜோடி பெரிய வரவேற்பைப் பெற்றாலும் எம்.ஜி.ஆர். ஜெயலலிதா ஜோடி படங்களில் விதவிதமான நடனங்களில் பங்கேற்று ரசிகர்களின் அமோக ஆதரவைப் பெற்றது. உலகம் சுற்றும் வாலிபனுக்கு லதாவை தெரிவு செய்யும் போதும் அவர் பள்ளியில் விழா ஒன்றில் நடனமாடிய புகைப்படங்களைப் பார்த்து தான் எம்.ஜி.ஆர். தெரிவு செய்தார். இதன் அடிப்படையில் எம்.ஜி.ஆர். மதுரை வீரன் படத்தில் பாரமபரிய நடனக் கலைஞரான பத்மினியை மூன்று வகையான நாட்டியங்களை ஆட வைத்தார். படம் பிடிக்கப்பட்ட பாரம்பரிய நடனங்கள் இரண்டில் ஒன்றை நீக்கிவிட்டார். ஆடல் காணீரோ என்ற பாடல் மட்டும் பாரம்பரிய நடன வகையை சேர்ந்ததாக, கதைப் பாடலுக்கு ஆடும் நாட்டிய நாடக பாணியில் திருவிளையாடல் புராண கதைகளை விளக்குவதாக அமைந்திருந்தது.

அரசவை நடனம்

மதுரை வீரன் படத்தில் ராஜ தர்பார் முதல் காட்சியாக இடம்பெற்றது. இந்த அரசவைக் காட்சியில் குசலகுமாரி தமிழ்த் தாய் வாழ்த்துப் பாடலுக்கு நடனம் ஆடினார்.

“செந்தமிழா எழுந்து வாராயோ

உன் சிங்காரத் தாய்மொழியைப் பாராயோ

சிந்தையெல்லாம் இனிக்கும் தேனாகும்

செல்வம் இதே அமுதே தமிழே”

எனத் தொடங்கும் பாடலுக்கு பரத நாட்டிய உடையில் குசலகுமாரியின் பாரம்பரிய நடனம் ரசிகர்களின் மனதைக் கவர்ந்தது.

நாட்டுப்புற நடனம்

குழந்தைப் பேறு இல்லாத என். எஸ். கிருஷ்ணணும் டி ஏ மதுரமும் மதுரை வீரனைக் குழந்தையாகக் கண்டெடுத்து தன் கிராமத்திற்கு எடுத்து வந்து அன்னிகல்வைக் கொண்டாடுகின்\றனர். அவர்கள் அங்கு தன்னுடைய உற்றார் உறவினரோடு சேர்ந்து ஆடிப் பாடி மகிழ்கின்றனர். இக்காட்சியில் என் எஸ் கே எல்லோருக்கும் இனிப்பு வழங்கி சந்தனம் தந்து மகிழ்கிறார். வாழைப்பழங்களும் வழங்கப்படுகின்றன. பழம், வெற்றிலை பாக்கு, சந்தானம் தந்து தன அளவுக்கு எளிமையாகக் கொண்டாடுகிறார்.

“சந்தனத்தை பூசாத சந்தனத்தில் குளி”

என்று சொல்லி மகிழ்ச்சி அடைகிறார். அனைவரும் கூடி இருக்கும்

சேரியில் கொண்டாட்டம் நடக்கும் வேளையில் லலிதா, ராகினியின் நாட்டுப்புற நடனம் ஒன்று இடம்பெறுகிறது. இந்த நடனத்தில் அக்காலகட்டத்தின் வேலையில்லா பிரச்சனை விவரிக்கப்பட்டுள்ளது. தன் குலத் தொழிலை செய்ய விருப்பமில்லாமல் படித்து விட்டோம் என்ற கர்வத்தோடு அலுவலக வேலையே வேண்டும் என்று திரியும் இளைஞர்களுக்குப் பாடம் புகட்டும் விதத்தில் இப்பாடல் அமைக்கப்பட்டுள்ளது. நாட்டுப்புற இசை இப்பாடலுக்கு பெருமை சேர்க்கின்றது.

பறை இசை

இன்றைக்கு உலகமெங்கும் பிரபலமாகிவரும் பறையிசை இப்பாடலில் இணைக்கப்பட்டுள்ளது. என் எஸ் கிருஷ்ணனும் மற்ற ஆண்களும் பறை கொட்டி மகிழும் காட்சியும் இப்பாடல்



காட்சியோடு இணைந்துள்ளது. நடனத்துக்கு கிராமியத் தன்மையை ஏற்றவும் படம் பார்ப்போர் நடனத்தோடும் பாடலோடும் ஒன்றிப்போகவும் இந்தப் பறையிசை பெரிதும் உதவுகிறது. லலிதாவும், ராகினியும்

“சும்மா இருந்தா சோத்துக்கு நஷ்டம்

சோம்பலை வளர்த்தா ஏற்படும் நஷ்டம்

உண்மையோடு உழைக்கும் தானே தன்னன்னே மச்சான்

ஒன்று சேர்ந்து வாழனும் தானே தன்னன்னே”

என்று பேச்சுவழக்கில் இயற்றப்பட்ட பாடலுக்கு நடனம் ஆடுகின்றனர்.

படத்தின் ஆரம்பத்தில் ஒரு பாரம்பரிய நடனமும் அதனைத் தொடர்ந்து ஒரு கிராமிய நடனமும் இடம்பெற்றது படம் பார்ப்பவர்களில் மேட்டுக்குடியினருக்கும், ஏழை எளிய மக்களுக்கும் அடுத்தடுத்து மகிழ்ச்சியை வழங்கிக் கொண்டு செல்வதாக அனைவரின் மன நிறைவைப் பெறும் நோக்கத்தில் அமைக்கப்பட்டிருந்தது. இப்படத்தின் மிகப்பெரிய வெற்றிக்கு முக்கிய காரணம் இப்படத்தினை உயர் சாதியினரும் பணக்காரர்களும் ரசித்ததை போலவே தாழ்த்தப்பட்ட இனத்தவரும் ஏழை எளிய மக்களும் சேர்ந்து ரசித்தனர். இரு தரப்பினரும் ரசிப்பதற்கு உரிய காட்சிகளும், பாடல்களும், நடனங்களும் மதுரை வீரன் படத்தில் காணப்பட்டன.

குறத்தி நடனம்

தனி குறத்தி நடனம், குறவனும் குறத்தியுமாக ஆடும் ஜோடி நடனம் ஆகியவை எம்.ஜி.ஆருக்கு குறவர் இனத்தில் இலட்சக்கனாகான ரசிகர்கள் உருவாகவ வழியமைத்தன. மதுரை வீரன் படத்தில் வரும் குறத்தி நடனம் குறவஞ்சி இலக்கியத்தில் வரும் குறத்தி தன இஷ்ட தெய்வத்தை வணங்கி குறி சொல்லும் பாணியில் அமைந்ததாகும். இன்றைக்குப் பிரபலமாகி இருக்கும் நடிகை சச்சுவின் அக்காள் மாடி லட்சுமி குறத்தி பாட்டுக்கு நடனம் ஆடியிருந்தார். இவர்கள் வீடு மாடியில் இருந்ததாலும் அப்போது நிறைய லட்சுமிகள் படத்தில் நடித்துக் கொண்டிருந்ததாலும் இந்த லட்சுமியை ‘மாடி லட்சுமி’ என்று வித்தியாசப்படுத்தி அழைத்தனர்.

குறத்தி பாட்டுக்கு நடனம் ஆடிய மாடி லட்சுமி பரதநாட்டிய கச்சேரிகளில் இடம்பெறும் குறவஞ்சி நடனம் என்ற பாணியில் ஆடி இருந்தார். இக் குறத்தி நடனமும் இரு வர்க்கத்தினரின் ரசனைக்கும் உரியதாக அமைந்திருந்தது. நடன



அசைவு உடை அணிமணிகள் ஆகுயய குரத்திக்குரியதாக பொருத்தமாக அமைந்தது.

தமிழகத்தின் பல மாவட்டத் தலைநகர்களில் நடந்த மதுரை வீரன் வெற்றிவிழா நிகழ்ச்சிகளுக்கு எம்.ஜி.ஆர். நடிகைகளையும், நடிகர்களையும் அழைத்துச் சென்றார். அப்போது மதுரையில் நடந்த விழாவிற்கு மாடி லட்சுமியால் வர இயலவில்லை அதனால் அவருக்கு பதிலாக சச்சு வந்திருந்தார். சச்சுவிடம் இப்படத்தின் விழா நிகழ்ச்சி பற்றி நேரில் பேட்டி கண்டபோது அவர் ஒரு அருமையான தகவலை பகிர்ந்து கொண்டார். வெற்றி விழா நாளன்று மதுரை தமுக்கம் மைதானத்திற்கு வாசலில் இருந்தே கூட்டம் நெருக்கி அடித்தது. அதனால் எம்.ஜி.ஆரின் கார் உள்ளே போவது மிகவும் சிரமமாக இருந்தது. கொஞ்ச தூரம் மட்டுமே எம்.ஜி.ஆரின் காரால் உள்ளே போக முடிந்தது. எம்.ஜி.ஆரின் காருக்குள் தான் நடிகையர் இருந்தனர். அவர்களை யாரும் கீழே இறங்க வேண்டாம் என்று எம்.ஜி.ஆர். சொல்லிவிட்டு அவர் மட்டுமே கீழே இறங்கி நின்று ரசிகர்களைப் பார்த்து ‘பெண்கள் மேடைக்குச் செல்ல வேண்டும் வழி விடுங்கள்’ என்றார்.

எம்.ஜி.ஆரின் ஆணைக்குக் கட்டுப்பட்ட மக்கள் கூட்டம் உடனே பைபிளில் செங்கடல் பிரிந்து வழி விட்டது போல வழிவிட்டது. ஜன சமுத்திரமாக பெருங்கடல் போல் கூடியிருந்த மக்கள் இரண்டாகப் பிரிந்து நடுவில் நடிகைகள் நடந்து செல்வதற்கு வழி விட்டார்கள். எம்.ஜி.ஆர். அவர்களைக் காரில் இருந்து இறங்கச் சொன்னார். சரோஜாதேவி, சச்சு ஆகியோர் காரைவிட்டு இறங்கி

நடந்தார்கள். எம்.ஜி.ஆர். அவர்கள் பின்னாலேயே பாதுகாப்பாக நடந்து சென்று அவர்கள் மேடையில் ஏறியதும் திரும்பிப் பார்த்ததும் ரசிகர்களின் கூட்டம் மீண்டும் ஒன்று சேர்ந்து விட்டது.

எம்.ஜி.ஆர். ரசிகர்களின் அன்பையும் வாழ்த்துக்களையும் மனங்குளிரப் பெற்றுக் கொண்டார். அவர் எது சொன்னாலும் சிரமேற் கொண்டு செய்யும் ரசிகர் கூட்டம் அவர் தனிக் கட்சி தொடங்கியதும் தொண்டர் படையாக மாறி அவர் சொல்வாக்கை செல்வாக்கு உடையதாக்கியது. , கூடி இருந்த ரசிகர்கள் அவரிடம் கை குலுக்கினர். அவர்களில் பலர் எம்.ஜி.ஆரை கட்டிப்பிடித்து முத்தம் கொடுத்தனர். அவர்களின் அன்பு முத்தங்களை பெற்றுக் கொண்ட பிறகு அவர் மேடை படிக்கட்டுகளில் ஏறிச் சென்றார். எனவே 'எம்.ஜி.ஆரோடு எங்கு சென்றாலும் நமக்கு ஆபத்து கிடையாது. அவர் நம்மை பாதுகாப்போடு அழைத்துச் சென்று மீண்டும் கொண்டு வந்து நம் வீட்டில் சேர்ப்பித்து விடுவார்' என்று சச்சு மிகுந்த மகிழ்ச்சியோடு இந்நிகழ்ச்சியை பகிர்ந்து கொண்டார்.

குழு நடனம்

குழுவாக தோழிமார் கூடி ஒரு ஆணை கேலி செய்து ஆடி பாடும் நடனமாக இளவரசியின் தோழியாக வரும் E.V.சரோஜா ஆடும் நடனம் அமைந்தது. E.V.சரோஜா இயக்குனர் ராமண்ணாவின் மனைவியாவார். இவர் எண்கண் [E] என்ற ஊரைச் சேர்ந்தவர். சிறந்த நடனக் கலைஞர். இவர் எம்.ஜி.ஆரோடு முதல் படத்தில் அறிமுகமாகி எம்.ஜி.ஆரோடு கடைசி படத்தில் தன் திரையுலக

வாழ்க்கையை நிறைவு படுத்தியவர். என் தங்கை என்ற படத்தில் தங்கையாக எம்.ஜி.ஆருக்கு நடித்திருப்பார். அப்படத்தில் சண்டைக் காட்சிகளோ நடன காட்சிகளோ இடம்பெறவில்லை. அண்ணன் தங்கை பாசத்துக்கு மிக அருமையான எடுத்துக்காட்டாக விளங்கிய படம். பாசமலர் படத்திற்கு முந்திய படம் இப்படம் இலங்கையில் 362 நாட்கள் ஓடி வெற்றி வாகை சூடியது. வறுமையில் சிக்கிய அண்ணன் தங்கையின் பசி தீர்க்க இயலாத சூழ்நிலையில் தவிக்கும் பாசக் கதை இது. கடைசி படமாக இவர் எம்.ஜி.ஆரோடு கொடுத்துவைத்தவள் என்ற படத்தில் நடித்து அதனை தன் சொந்த தயாரிப்பாக வெளியிட்டார்.

ஈ வி சரோஜா, மதுரை வீரன் படத்தில் பானுமதியின் தோழியரில் முக்கியமானவராக வருவார். இக்கதையில் அணுக்கத் தோழியாக இளவரசியுடன் இருப்பவர் ஈ வி சரோஜா. இவர் இப்படத்தில் எம்.ஜி.ஆரைக் கேலி செய்வதாக ஒரு குழு நடனம் ஆடி இருப்பார். மானைத் தேடி இளவரசிக்குச் சொந்தமான தோட்டத்துக்குள் எம்.ஜி.ஆர். வந்திருக்கும் போது அது இளவரசியின் இடம் என்று தெரியாத காரணத்தினால் எம்.ஜி.ஆர். மருட்சியோடு நடித்திருக்கும் காட்சியாக இப்பாடல் காட்சி தொடங்கும். எம்.ஜி.ஆர். அங்கும் எங்கும் ஓடி எதையோ தேடுவதைப் பார்த்த இளவரசியின் தோழிகள்

“வாங்க மச்சான் வாங்க வந்த வழியைப் பாத்துப் போங்க

ஏங்கி ஏங்கி நீங்க ஏன் இப்படிப் பாக்குறீங்க”



என்று அவருடைய மருட்சியை கேலி செய்து பாடுவார்கள். இக்குழுவில் மொத்தம் நான்கு பேர் ஆடுகின்றனர். அவர்களில் ஒருவராக பத்மினியின் உறவினர் சுகுமாரியும் ஆடுவார். அவரும் முதலில் குழுவில் நடனமாடி பிறகு சந்திரபாபு போன்றோருடன் தனி நடனமாடி அதன்பிறகு துணைக் கதாபாத்திரங்களில் நடித்து பின்பு முக்கிய கதாபாத்திரங்களில் நடித்து முன்னேறினார். மலையாளத் திரையுலகில் நல்ல கதாபாத்திரங்கள் சுகுமாரிக்குக் கிடைத்தன.

எம்.ஜி.ஆரைப் பெண்கள் கேலி செய்து ஆடும் போது ஒரு கட்டத்தில் எம்.ஜி.ஆர். இவர்களை திருப்பி கேலி செய்து ஆடத் தொடங்கி விடுவார். தன் கையில் இருந்த வில்லால் இந்தப் பெண்களை மடக்கி பிடித்து ஆட விடாமல் செய்து ,

“முத்துப்போல் பல்லழகி முன் முன்கோபச் சொல்லழகி

கத்தி போல் கண்ணழகி கனிவான பெண்ணழகி”

என்று பாடி இவர்களைக் கேலி செய்வார். இந்த நடனம் கேலி நடனமாக இருந்தாலும் எம்.ஜி.ஆர். அழகாக அடி எடுத்து வைத்து ஆடியிருப்பார். பெண்கள் ஆடிய ஆட்டத்திற்கு சற்றும் குறைவில்லாமல் எம்.ஜி.ஆருடைய ஆடல் அசைவுகள் மிகச் சிறப்பாக வடிவமைக்கப்பட்டிருந்தன. பாடல் முடிந்ததும் அந்த மானைக் கண்டுபிடித்து எம்.ஜி.ஆர். அதனை எடுத்துக்கொண்டு “இதை நீங்கள் கேட்டிருந்தால் நானே கொடுத்து இருப்பேன்” என்று அப்போது அங்கு வந்த பானுமதியிடம் சொல்வார். இதனைத் தொடர்ந்து பானுமதி தான் எம்.ஜி.ஆர். மீது கொண்டிருக்கும் காதலை சூசகமாக வெளிப்படுத்துவார். ஆனால் அதைப் புரிந்து கொள்ளாமல் எம்.ஜி.ஆர். அலட்சியமாகப் போய் விடுவார்.

எம்.ஜி.ஆரும் பானுமதி சிறையெடுத்து வாரணவாசி பாளையத்தை விட்டு வந்த பிறகு ஈ வி சரோஜா இவர்களை வந்து அவர்கள் இருப்பிடத்துக்கு வருவார். அங்கு இருவரும் ஜோடியாக அமர்ந்திருப்பதை பார்த்து

“வாங்க மச்சான் வாங்க

வந்த வழியைப் பாத்துட்டுபோங்க

ஜோரா வாங்க மச்சான் வாங்க

சொந்த வழியைப் பாத்துட்டுபோங்க

வலையை வீசி நீங்க

தங்கச் சிலையை புடிச்சீட்டுபோங்க

வஞ்சி மார்கள் நாங்க

கண் பார்த்து இருக்க நீங்க

உங்க பவுச காட்டி ஆளை மயக்கி

சிறையில் எடுத்துட்டீங்க"

என்ற பாடல் வரிகளுக்கு தனி நடனம் ஆடுவார். இவருக்காகவே இரு நடன வாய்ப்புகள் இப்படத்தில் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டன.

பாரம்பரியம் சார்ந்த பத்மினியின் நடனங்கள்

எம்.ஜி.ஆருக்கு பத்மினி இரண்டாவது ஜோடியாக மதுரை வீரன் படத்தில் நடித்து இருந்ததால் அவருக்கு பானுமதிக்கு நிகரான சம வாய்ப்பு தரப்பட்டது. இரண்டு மூன்று நடன வாய்ப்புகளும் தரப்பட்டன. முதலில் மன்னர் முன்னிலையில் ஆடும் "ஆடல் காணீரோ" என்ற நடனம் அடுத்ததாக "பாற்கடலில் பள்ளி கொண்டீரே" என்ற பாட்டுக்கான நடனம். நிறைவாக அழகர் மலைக்கள்ளர் குகையில் எம்.ஜி.ஆரோடு சேர்ந்து ஆடும் ஜோடி நடனம் என்று மூன்று நடன வாய்ப்புகள் தரப்பட்டன. இந்த மூன்றில் இரண்டாவது நடனம் மட்டும் படத்தில் நேரடியாக சேர்க்கப்படாமல் தனியாக இடைவேளையின்போது சில காலம் சேர்க்கப்பட்டிருந்தது. பின்னர் அதுவும் நீக்கப்பட்டுவிட்டது.

நாட்டிய நாடகம்

பத்மினி திருமலை மன்னர் மற்றும் எம்.ஜி.ஆர். முன்பு ஆடுகின்ற "ஆடல் காணீரோ, திருவிளையாடல் காணீரோ" என்ற பாடலுக்கான நடனம் மிக அற்புதமாக பாரம்பரிய முறையில் பரதநாட்டிய அமைப்பில் அமைக்கப்பட்டிருந்தது.

பத்மினியால் ஆடக் கூடிய சிறப்பான ஆடல் அசைவுகளுடன் இப்பாடலை வடிவமைத்து இருந்தனர். திருவிளையாடல் கதைகளை எடுத்துக் கூறும் வகையில் ஒரு நாட்டிய நாடகம் போல இந்த நடனக் காட்சி அமைக்கப்பட்டிருந்தது.

பத்மினி ஆடும் காதல் கனவுப் பாடல் பாரம்பரிய முறையை விட்டு சற்று மாறி திரைப்பட பாணியில் இலகுவான மென்மையான அசைவுகளுடன் அமைக்கப்பட்டிருந்தது. இந் நடனத்துக்கு [CLOSE UP, REFLECTION] தொழில் நுட்பக் காட்சிகளும் சிறப்புச் சேர்த்தன.

மதுரைவீரசாமி வேடத்தில் எம்.ஜி.ஆர். - பத்மினி நடனம்

மதுரை வீரன் படத்தில் எம்.ஜி.ஆரும் பத்மினியும் சேர்ந்து ஆடும் ஒரு நாட்டுப்புற நடனம் மிகப்பெரிய வரவேற்பை பெற்றது. இந்நடனக் காட்சியில் எம்.ஜி.ஆர். மதுரைவீர சாமி போல வேடம் பூண்டிருந்தார். அரண்மனையைச் சேர்ந்த நடன மங்கையான பத்மினி சாதாரண குடியானவப் பெண் போல அள்ளிச் செருகிய கொண்டையும் பின் கொசுவம் வைத்துக் கட்டிய கண்டாங்கி சேலையுமாக வந்து இருவரும் ஜோடியாக அழகர்மலை கள்ளர்களின் முன்பு ஆடிப் பாடுவார்கள். இந்நடனத்தின் செல்வாக்கும் வரவேற்பும் பின்னர் பல படங்களிலும் எம்.ஜி.ஆர். இது போன்ற ஒரு நடனத்தை தனது படங்களில் அமைக்க முன்னோடியாகத் திகழ்ந்தது.

மாறு வேட ஜோடி நடனம்

எம்.ஜி.ஆர். பாடங்களில் மாறு வேட ஜோடி நடனமும் அதற்கேற்ற தத்துவப் பாடலும் என்று

புதிய ஒரு ஆடல் பாடல் வகை உருவாக இந்த நடனம் வழி வகுத்தது. எம்.ஜி.ஆர். பத்மினியுடன் ஆடிய மாறுவேட ஜோடி நடனம் வழி தவறி செல்வோருக்கு அறிவுரையும் எச்சரிக்கையும் சொல்வதாக அமைந்தது. உழைப்பின் மேன்மையை வலியுறுத்தியது.

"ஏச்சு பிழைக்கும் தொழிலே சரிதானா

எண்ணி பாருங்க நல்லா

எண்ணிப் பாருங்க"

எனத் தொடங்கும் இப்பாடல் இப்படத்தின் சிறந்த தத்துவப் பாடல் ஆகும்.

மலைக்கள்ளன் படத்தில் எத்தனை காலம் தான் ஏமாற்றுவார் இந்த நாட்டிலே பாடல் மக்களிடையே அமோக செல்வாக்கு பெற்றதும் எம்.ஜி.ஆர். தனது படங்களில் ஒரு தத்துவப் பாடல் காட்சியைத் தனக்காக உருவாக்கினார். மதுரை வீரன் படத்தில் மாறு வேட ஜோடிப் பாடல் மக்களின்



ஏகோபித்த வரவேற்புப் பெற்ற தத்துவப் பாடலாகவும் அமைந்தது. மாறு வேட ஜோடி நடனமும் மக்களால் வெகுவாக ரசிக்கப்பட்டது. இக்காட்சியில் எம்.ஜி.ஆர். நாட்டியப் பேரொளி பத்மினியின் நடன அசைவுகளை ஈடுகொடுத்து மிகச் சிறப்பாக ஆடியிருப்பார். டான்ஸ் மாஸ்டர் இருவருக்கும் பொருந்தக்கூடிய நடன அசைவுகளோடு இந்த நடனத்தை வடிவமைத்து இருந்தார். இருவருக்கும் தனித்தனியான நடனக் காட்சிகளும், இருவரும் இணைந்து ஆடுகின்ற காட்சிகளும் என மிகச் சிறப்பாக வடிவமைக்கப் பட்டிருந்தன. ஒருவர் பாடுவதும் அதனை வலியுறுத்தும் வகையில் மற்றொருவர் தன் கருத்தை எடுத்துக் கூறுவதுமாக பாடலும் நடனமும் சிறப்பாக அமைந்திருந்தது.

நிறைவு

மதுரை வீரன் படத்தில் இடம் பெற்ற நடனக் காட்சிகள் பல வகையைச் சேர்ந்தனவாக மாறி மாறி அமைந்ததனால் மக்கள் வெகுவாக ரசித்தனர். திரைப்படத்தை முத்தமிழ் காப்பியமாக எம்.ஜி.ஆர். உருவாக்கியதில் நடனக் காட்சிகள் நாடகத் தமிழின் சிறப்பை வெளிப்படுத்தின. எம்.ஜி.ஆர். படங்களில் மாறு வேட ஜோடி நடனம் என்ற புது வகை நடனம் இப்படத்தில் இருந்து புது வகையாக உருவானது. குறவன் குறத்தி நடனம் குரவர் இன மக்கள் மத்தியில் எம்.ஜி.ஆருக்கு மிகப் பெரிய ஆதரவையும் வரவேற்பையும் ஏற்படுத்திக் கொடுத்தது. எம்.ஜி.ஆருக்கு இருந்த பாரம்பரிய இசையறிவும் நடன அறிவும் இப்படத்திலும் ஆடல் பாடல் காட்சிகள் சிறப்பாக அமைய உதவின.

5. சாதி, வர்க்க பேதங்களை முறித்த காதல் கதை

மதுரை வீரன் கதை பதினாறாம் நூற்றாண்டில் நடந்த உண்மை கதை ஆகும். இக்கதையை இருபதாம் நூற்றாண்டில் திரைப்படமாக எடுத்த போது 1955 ஆம் ஆண்டு சித்திரை வருடப்பிறப்பன்று படப்பிடிப்பு தொடங்கி ஒரு வருடம் தொடர்ந்து படப்பிடிப்பை நடத்தி 1956ஆம் ஆண்டு சித்திரை வருடப்பிறப்பன்று படம் வெளியிடப்பட்டது. இப்படத்தின் மூலம் ரசிகர்களின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டதற்கு முக்கிய காரணம் இக்கதையில் வரும் காதலர்களான எம்.ஜி.ஆறும் பானுமதியும் சாதி வர்க்க பேதங்களை தம் காதலால் முறித்துப் போட்டனர்.

மதுரை வீரன் படத்தில் எம்.ஜி.ஆர். துடிப்பான இளைஞர்களின் அடையாளமாக, தாழ்த்தப்பட்டவர்களின் பிரதிபலிப்பாக, குழந்தை நாட்டுக்குள் இருந்தால் நாட்டு மக்களுக்கு கேடு என்ற மூட நம்பிக்கையினால் பாதிக்கப்பட்டவர்களின் பிரதி பிம்பமாக, அழகும், அறிவும், திறமையும் செயல்திறனும், திறமை இருந்தால் எளியவனையும் மன்னர் மகள்

காதலிப்பாள் என்ற கருத்தினை விளக்கும் காதல் தலைவனாக காட்டப்படுகிறார்.

படத்தில் எம்.ஜி.ஆரின் அறிமுகக் காட்சியை மூன்று முக்கிய கருத்துக்களை உள்ளடக்கியதாகும். இளவரசி தன் தோழிகளோடு நீராடும் இடத்தில் ஆண்கள் இருக்கக்கூடாது என்று இளவரசியின் தாய்மாமன் நரசப்பன், எம்.ஜி.ஆரின் நண்பர்களோடு தகராறு செய்யும் நேரத்தில் நண்பர் ஒருவரை கன்னத்தில் அறைந்தவுடன் அங்கு தன் நண்பர்களுக்காக நீதி கேட்டு ஒரு ஆள விழுதை பிடித்தபடி பறந்து வந்து இறங்குகிறார். அவருடைய அறிமுகமே அவருடைய துள்ளலும் துடிப்பும் நிறைந்த நடிப்பையும் இளமையையும் அழகையும் வெளிப்படுத்துவதாக அமைகின்றது. பல மரங்களுக்கு அப்பால் இருந்த எம்.ஜி.ஆர். அங்கிருந்து நடந்து வருவதை விட விழுது ஒன்றினை பிடித்துக் கொண்டு விரைவாக வந்து நரசப்பனிடம் சிக்கிக்கொண்ட நண்பனின் ஆபத்தை போக்குவதற்காக ஆபத்பாந்தவனாக, அனாதை



இரட்சகராக அவ்விடத்தில் காட்சி தருகிறார். அக்கிரமங்கள் நடக்கும்போது நான் அவதாரம் எடுப்பேன் என்று சொன்ன கிருஷ்ண பரமாத்மாவை போல, முதலையின் வாயில் சிக்கிய யானைக்கு முக்தி அளித்து அதனை காப்பாற்றிய பெருமாளைப் போல எம்.ஜி.ஆர். தக்க நேரத்தில் வந்து சேர்கிறார்.

எம்.ஜி.ஆரும் மோதும் காட்சி அவர்கள் ஒருவருக்கு ஒருவர் கருத்து முரண்பாடுகளும் கொண்டிருக்கும் காட்சி மூன்று முக்கியக் கருத்துக்களை நமக்கு வெளிப்படுத்துகின்றது. சிலப்பதிகாரத்தில் அதன் பா விதத்தில் 3 கருத்துக்கள் காப்பியத்தின் குறிக்கோள்கள் சொல்லப் பட்டிருக்கும். அதுபோல கம்பராமாயணத்தில் அறம் வெல்லும் பாவம் தோற்கும் என்பது அந்நூலின் நோக்கமாக தெரிவிக்கப்பட்டு இருக்கும். இவற்றைப் போலவே ஒரு திரை காப்பியமாக உருவாக்கப்பட்ட மதுரைவீரன் படத்திலும் முதல் காட்சியிலேயே மூன்று முக்கியக் கருதுகோள்கள் நமக்கு உணர்த்தப்படும். ஒன்று அறம் வெல்லும் பாவம் தோற்கும் அதாவது நல்லவன் வாழ்வான் கெட்டவன் வீழ்வான். இரண்டாவது, வீரம் கோழையும் முரண்பட்ட வீரமே வெல்லும். மூன்று நேர்மையும் கயமையும் தம்முள் மோதிக் கொண்டால் நேர்மையே வெற்றிவாகை சூடும்.

மதுரை வீரன் படத்தில் வரும் இக்காட்சியை சற்று விரிவாக காண்போம். வீரனின் நண்பர்கள் சிரித்துக் கொண்டே இருக்கின்றனர். தங்களுக்குள் ஏதோ பேசி அவர்கள் தமாஷாக சிரித்துக் கொண்டிருக்கின்றனர். அப்போது அங்கு வந்த நரசப்பன் ஏண்டா சிரிக்கிறீங்க என்று கேட்கிறார்.

இந்த உரையாடலில் அவர்களில் ஒருவனை நரசப்பன் அடித்து விடுகிறான். வீரனின் நண்பர்கள் எங்க அண்ணன் வீரன் வரட்டும் என்று சொல்லும்போது வீரன் என்ன பெரிய சிங்கக் குட்டியா என்று கேட்கிறான். சிங்கக்குட்டிக்கு நீச்சல் தெரியுமா என்று கேட்கவும், வீரனின் நண்பன்இது சுறாவிற்கு பிறந்த சிங்கக்குட்டி என்கிறான். இவ்வாறு வீரனைப் பற்றிய ஒரு அறிமுகம் அவன் வீரத்தில் சிங்கம் போன்றவன்; நீரில் பாய்ந்தால் சுறாவிற்கு நிகரானவன் என்ற பாராட்டு மொழிகள் கொண்டதாக இருக்கிறது.. அந்த சமயம் ஆபத் பாந்தவன் போல எம்.ஜி.ஆர். ஆலமரத்தின் விழுதைப் பிடித்து கொண்டு வந்து இறங்குகிறார். இதுவே எம்.ஜி.ஆரின் அறிமுகக் காட்சி. அதிகார வர்க்கத்தினரிடம் இருந்து எளியோரைக் காக்க இறைவனை போல எம்.ஜி.ஆர். வருவார் என்ற பிம்பம் ஆழமாக உருவாக்கபப்டும் காட்சி இது.

எம்.ஜி.ஆர். வந்து இறங்கியதுமே 'ஏன் என் நண்பனை அடித்தாய்' என்று எளியவருக்காக உரிமை குரல் எழுப்புவார். கேட்கிறார். அதற்கு இளவரசி குளிக்கும் இடத்தில் ஆண்கள் இருக்கக்கூடாது தெரியுமா என்று நரசப்பன் கேட்க, எம்.ஜி.ஆர். அப்படி என்றால் நீ என்று கேட்கவும், நரசப்பனுக்கு கோபம் வந்துவிடுகிறது. நரசப்பன் தன் மாமன் மகள் பொம்மி ஆற்றில் குளிப்பதை ஒரு மரத்துக்கு பின்னால் ஒளிந்து நின்று வேடிக்கை பார்ப்பதற்கு இடைஞ்சலாக இவர்கள் இங்கு இருக்கின்றனரே என்ற ஆத்திரத்தில் அடித்தான். இக்காட்சியில் இவன் பண்பாடு இல்லாதவன் முறைகேடான நடவடிக்கைகளில் ஈடுபடுகிறவன் என்ற எண்ணம் ரசிகர்களுக்கு ஏற்பட்டுவிடுகிறது.

நரசப்பனும், மதுரை வீரனும் மோதும் காட்சியில் எம்.ஜி.ஆர். நரசப்பனை நெருங்கும்போது, ‘‘கிட்ட வராதே’’ என்று நரசப்பன் சொல்லி அவருடைய ஜாதியைப் பற்றி குறித்துப் பேசும்போது ‘‘தொட்டால் தோஷம் நிழல் பட்டால் தீட்டு’’ என்ற சூழல் வசனம் தீயான வசனமாக எல்லோர் மனதிலும் சுட்டெரிக்கிறது. ‘‘தோலை உரித்து விடுவேன்’’ என்று நரசப்பன் சொல்லும்போது, ஆமா இந்த வேலையை எப்போ ஆரம்பிச்சீங்க என்று கேட்டு கேலி செய்கின்றனர். ஏனென்றால் தோல் உரிப்பதும், தோலில் கமலை செய்வதும் செருப்பு தைப்பது இன்றைக்கு அருந்ததியினர் என்று அழைக்கப்படும் சக்கிலியரின் அன்றைய குலத்தொழில் ஆகும்.

ஆற்றில் வெள்ளம் வந்து பொம்மியை இழுத்துச் செல்லும் பொழுது தாழ்த்தப்பட்டவனாக கருதப்படும் நீசனாகப்பட்ட மதுரை வீரனே ஆற்றில் குதித்து பொம்மியைக் காப்பாற்றிக் கொண்டு வந்து கரை சேர்க்கிறான். அப்போது நரசப்பன் ஓடி ஒளிந்து கொள்கிறான்.



முதல் காட்சியிலேயே மதுரைவீரன் நல்லவன், நேர்மையானவன், வீரம் மிகுந்தவன் அறம் சார்ந்தவன், துன்பத்தில் வாடும் மனிதருக்கு உதவி செய்பவன் என்ற கருத்துக்கள் படம் பார்ப்பவர் மனதில் பதிய வைக்கப்படுகின்றன. மதுரைவீரன் கதாபாத்திரத்தில் நடித்திருக்கும் எம்.ஜி.ஆருக்கும் இவை அனைத்தும் பொருந்துவதாக பார்ப்பவர்கள் நம்பினர். எனவே இப்படத்தின் வெற்றிக்குப் பிறகு எம்.ஜி.ஆருக்கு ஊர்தோறும் நிறைய ரசிகர் மன்றங்கள் தொடங்கப்பட்டன. .

எம்.ஜி.ஆர். பானுமதி காதல் காட்சி மதுரை வீரன் படத்தில் மிக முக்கியமான கோட்பாடு காதலுக்கு ஏழை பணக்காரன் சாதியில் உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற வேறுபாடு அது பொம்மி பந்து விளையாடிக் கொண்டிருக்கும்போது எம்.ஜி.ஆர். அங்கு தன் மானைத் தேடி வருகிறார். அப்போது பொம்மியின் தோழிகள் அவரை கேலி செய்து விளையாடுகின்றனர். நீ யார் என்று கேட்கும்போது என் பெயர் வீரன் என்று சொல்லவும் உலகப்புகழ்பெற்ற புரட்சி வீரனோ பெயரைச் சொன்னதும் தெரிஞ்சுக்கிறதுக்கு என்று கேலியாக நடித்திருக்கும் ஈ வி சரோஜா கேட்கிறார். ‘வாங்க மச்சான் வாங்க’ பாட்டை பாடி அவர்கள் கேலி செய்து எம்.ஜி.ஆரும் பதில் கேலி செய்து பாடி முடித்து தன் மானை எடுத்துக் கொண்டு திரும்பும்போது பானுமதியை சந்திக்கிறார்.

தன்னால் காப்பாற்றப்பட்ட பானுமதி முன்னர் நரசப்பன் ஆற்றங்கரையில் வைத்து தன்னை அடித்த போது தனக்கு ஆதரவாகப் பேசவில்லையே என்ற

கோபத்தில் எம்.ஜி.ஆர். இருக்கிறார். ஆனால் பானுமதி அவரிடம் அன்று மன்னிப்பு கூட கேட்கவில்லையே என்ற கவலையில் இருக்கிறார். இந்த மனநிலையில் இக்காட்சியில் இருவரும் எதிரெதிரே சந்திக்கின்றனர்.

எம்.ஜி.ஆரைப் பார்த்ததும் பானுமதி, ‘‘ஓ நீங்களா’’ என்று கேட்க, ‘‘நான் உங்களிடம் மன்னிப்பு கூட கேட்கவில்லையே’’ என்று வருத்தம் தெரிவிக்கும் போது அவன் அடிக்கும் போது நீங்கள் தடுத்து இருக்கலாமே என்று எம்.ஜி.ஆர். கேட்கிறார். ‘‘அப்போது நான் எதுவும் செய்ய இயலாத நிலையில் இருந்தேன் உங்கள் கன்னத்தில் விழுந்த அடி என் இதயத்தில் விழுந்தது போல் இருந்தது’’ என்று சொல்கிறாள் வீரன் அலட்சியம் செய்த போது ‘‘போர்க்களங்களில் புஷ்பங்கள் கூட மலர்வது உண்டு’’ என்கிறார் பானுமதி. இக்கட்டத்தில் பானுமதி எம்.ஜி.ஆர். மீது கொண்டிருக்கும் அபிமானம் அன்பு காதல் ஆகியவை பார்வையாளருக்கு தெளிவாக புரிந்து விடுகிறது. ஆனால் எம்.ஜி.ஆர். இவரை காதலிக்கவில்லை என்பதும் தெளிவாக விளங்கி விடுகிறது.

மதுரை வீரன் கதையில் ஏழை குடும்பத்தைச் சேர்ந்த வீரனின் மீது இளவரசி அவனுடைய நற்பண்புகளைக் கண்டு காதல் கொள்கிறாள் காதலுக்கான காரணம் பணம் இல்லை, சாதி இல்லை, அன்பு மட்டுமே என்ற உயர்ந்த மனிதநேயப் பண்பாடு இருவருக்கும் இடையிலான காட்சியில் தெளிவாக உணர்த்தப் படுவதால் படம் பார்க்கும் இரசிகர்கள் இந்த காதல் மகத்தானது மேன்மையானது என்பதை உணர்ந்து கொண்டு

இவர்கள் வாழ்க்கையில் சேர்ந்து வாழவேண்டும் இவர்களுக்கிடையே ஜாதி பேதம் வர்க்க பேதம் புகுந்து கெடுத்து விடக் கூடாது என்ற ஒரு பதட்டத்தோடு மேற்கொண்டு படத்தைப் பார்க்க தொடங்குகின்றனர்.

காவலுக்கு இருந்த மதுரை வீரனுக்கு மழையினால் உடல் நலம் கெட்டு காவலுக்கு வராமல் வீட்டில் இருந்தபோது இளவரசி வீரனை பார்க்க தனியாக கிளம்பி செல்கிறாள். அப்போது அங்கு வீரன் மீண்டும் அவளை அலட்சியப்படுத்துகிறார். "உடம்பு எப்படி இருக்கிறது" என்று பானுமதி கேட்கிறார், "இது என்னை மணக்க போகிறவளுக்கு இருக்கவேண்டிய அக்கறை" என்று வீரன் பட்டென பதில் சொல்லவும் பானுமதி கண் கலங்குகிறார். தன்னுடைய காதலை வீரன் புரிந்து கொள்ளவில்லையே என்ற கவலை அவருக்கு வந்துவிடுகிறது. பொம்மி கண்கலங்கி அவளது கண்ணீர் துளிகள் வீரனின் கன்னத்தில் விழவும் வீரன் திரும்பி பார்க்கிறான் பொம்மி கண் கலங்கி இருப்பதை பார்க்கவும் அவன் மனம் இரங்கி விடுகிறது. அவளுடைய காதலைப் புரிந்து கொள்கிறான். இவள் இளவரசி ஆயிற்றே, காதலில் உறுதியாக இருப்பாளா என்ற ஐயம் வீரனுக்கு தோன்றுகிறது. ஆனால் பொம்மி அதற்கு தெளிவான பதிலை தருகிறாள், "உறுதி மட்டும் இல்லாவிட்டால் ஓடிவந்து இருப்பேனா" என்று அவள் கேட்கும் ஒற்றைவரி அவன் மனதில் ஆழமாகப் பதிந்துவிடுகிறது. இந்த காதல் காட்சியும் ஒருவரின் துன்பத்தில் மற்றவர் பங்கு கொள்ளும் உயர்ந்த பண்பாட்டை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது.

"அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ் ஆர் வலர்
புன்கணீர் பூசல் தரும்"

என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க வீரன் காய்ச்சலால் அவதிப்படும் போது அவன் மீது அன்பு கொண்ட பொம்மி என் கண்களில் இருந்து கண்ணீர் சிந்துகிறது. இத்தகைய உயர்ந்த ஒரு காதலை இக்காட்சியில் காட்சிப்படுத்தும் போது படம் பார்ப்பவர் மனம் நெகிழ்ந்து காதலுக்கு ஒரு உயர்ந்த அந்தஸ்தை அவர்கள் தருகின்றனர். இத்தகைய சிறப்பான காட்சிகள் படம் நெடுக அடுத்தடுத்து வருவதால் படம் பார்ப்பவர்கள் படத்தின் சிறப்பை கண்டு வியந்து போற்றி மீண்டும் மீண்டும் வந்து தினம் தினம் பார்த்து இப்படத்தை மாபெரும் வெற்றிப்படம் ஆக்கிவிட்டனர்.

"என் வீட்டுக்கு வந்திருந்த உன் கணவர் அப்போது இதை மறந்து வைத்து விட்டு வந்து விட்டார்" என்று பதக்கத்தை கொண்டுவந்து வீரனின் மனைவி பொம்மியிடம் வெள்ளையம்மாள் கொடுத்துவிட்டுப் போன பிறகு பொம்மிக்கு வீரன் மீது சந்தேகம் தோன்றுகிறது. அதை அவள் ஜாடைமாடையாக மறைமுகமாக வீரனிடம் கேட்கின்றாள். அதன்பிறகு இருவரும் சந்தித்து காட்சியில் பேசும் காட்சி இரண்டு பெண்களுமே நல்லவர்கள். ஆனாலும் பொம்மி நம்மிடம் அவளுடைய கணவனின் அன்பைப் பெற வெள்ளையம்மாளுக்கு எவ்வித உரிமையும் கிடையாது என்பதும் திட்டவட்டமாக தெரிவிக்கப்படுகிறது. பொம்மி உரிமைப் பட்டவள் என்பதால் வெள்ளையம்மாள் எத்தகைய அன்பு கொண்டு இருந்தாலும் பொம்மியின் உரிமையில்

தலையிட அவளுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்பது தெளிவாக உணர்ந்து கொண்ட நிலையை அவர்கள் பேசும் வார்த்தைகள் படம் பார்ப்பவருக்கு உணர்த்தி விடுகின்றன. இதனால் வெள்ளையம்மாளின் மீது படம் பார்ப்பவர்களுக்கு கூடுதல் அன்பும் இரக்கமும் ஏற்படுகின்றது.

படம் பார்க்கும் பெண்கள் பொம்மிக்கு தான் முழு உரிமை என்பதை வெள்ளையம்மாள் ஏற்றுக்கொண்டாள் என்பதில் மகிழ்ச்சி அடைகின்றனர். இவ்வாறு இப்படம் படம் பார்க்கும் ஆண்களையும் பெண்களையும் தனித்தனியாக மன நிறைவடையச் செய்கின்றது. இரண்டு பெண்களுமே நல்லவர்கள் என்று ஏற்றுக் கொண்டனர். இவ்வாறு இப்படத்தைப் பார்க்கும் ஆடவர் பெண்டிர் உயர் சாதியினர் தாழ்த்தப்பட்ட ஏழை பணக்காரர் என அனைத்து தரப்பினருக்கும் ஏற்றுக் கொள்ளும் வகையில் ஒவ்வொரு காட்சியும் மிகத் திறம்பட அமைக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு காட்சியுமே மிகச் சிறப்பாக பண்பாட்டு அம்சம் பொருந்தியதாக அமைந்திருந்தது. இதுவே படத்தின் அமோக வெற்றிக்கு காரணமாயிற்று. கருப்பு-வெள்ளை படங்களிலேயே மதுரை வீரன் படம் ஒரு கோடி ரூபாய் வசூலித்ததால் இன்றைக்கு வரை இந்த சாதனையை வேறு கருப்பு வெள்ளை படம் எதுவும் முறியடிக்க முடியவில்லை.

முனைவர் செ.இராஜேஸ்வரி அவர்களின் நூல்கள்



